THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, the 29th September 1958.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER : சுப்பைய்யா முதலியார் அவர்கள் கொஞ்ச நேரம் கழித்து வருவதாக எனக்கு டெலிபோன் செய்திருக்கிறார். ஆகவே, ஷார்ட் நோட்டீஸ் கேள்வி 28 அவர் வந்தபிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

Upper Periyar and Kallaru Schemes

* *S.N.Q.* 29.—SRI N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Upper Periyar and Kallar Schemes are remunerative schemes;

(*b*) the extent of lands which will be irrigated by these schemes;

(*c*) when the schemes will come into effect; and

(*d*) the progress so far made in regard to these schemes?

THF HON. SRI P. KAKKAN : (*a*) The Government have not examined the Upper Periyar and Kallar schemes.

(*b*), (*c*) & (*d*) Do not arise.

SRI N. R. THIAGARAJAN : கேரள சர்க்காருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி அதற்குப் பிறகு இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால், எவ்வளவு ரூபாய் செலவு ஆகும், எத்தனை ஏக்கர்களுக்குத் தண்ணீர் கிடைக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : அவர்களோடு பேசிய பிற்பாடுதான் தெரியும்.

SRI N. R. THIAGARAJAN : பெரியாறு, கல்லாறு ஆகிய இரண்டு திட்டங்களும் மதுரை ஜில்லாவிற்கு மிகவும் முக்கியமானது. அதுபற்றி நீண்ட நாட்களாகவே பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தால் தஸ்தவேஜுகளில் இருக்கும் விவரங்களைத் தயவுசெய்து கூற முடியுமா?

THE HON. SRI P. KAKKAN : இந்த இரண்டு திட்டங்களும் வந்தால், மதுரைக்கு மட்டுமல்ல, ராமனாதபுரத்திற்கும் பெரிய பயனை அளிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். முழு விவரங்களையும் கனம் அங்கத்தினர் அறிய விரும்பினால், தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

[29th September 1958

Rural Development Board

*591 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை ராஜ்ய அரசாங்கத் தலைமை அலுவலகத்தில் 10–3–58-ல் நடைபெற்ற கிராம நல வளர்ச்சி போர்டு கூட்டத்தில் என்னென்ன திட்டங்கள் பற்றி விவாதிக்கப்பட்டன ?

(ஆ) என்னென்ன திட்டங்கள் அமுலுக்குக் கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டன?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The following are the subjects discussed by the Rural Development Board at its meeting held on the 10th March 1958 :—

(1) Action taken on the recommendations of the last meeting of the Rural Development Board held on the 24th July 1957;

(2) Community Development Programme—Review on outstanding achievements and shortfalls of each block for quarter ended the 30th September 1957;

(3) Second Five-Year Plan—Review of progress;

(4) Reports on the Community Development Programme by (i) Mr. M. L. Wilson and (ii) Dr. Carl C. Tayler;

(5) Primary Health Centres in the Community Development Blocks—Posting of medical officers; and

(6) Fishery Development in Community Development and National Extension Service areas.

(*b*) No new schemes were placed before the Board for consideration. Hence, the question does not arise.

SRI P. G. MANICKAM : கிராம வளர்ச்சிக்கான திட்டங்களில் முக்கியமானது அங்குள்ள குளங்கள், ஏரிகளை ரிபேர் செய்வதுதான். இது சம்பந்தமாக இந்த போர்டு கூட்டத்தில் என்னென்ன தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. குளங்கள், ஏரிகள் வெட்டுவதற்கான திட்டம் ஒன்று வகுப்பது பற்றி அரசாங்கம் ஏதாவது கவனிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : 'மைனர் இர்ரிகேஷன் புரோகிராம்' தனியாக எடுத்துக்கொள்ளப்பட்டு, பரிசீலனை செய்யப்பட்டு கூடிய வரையில் எவ்வளவு அதிகமாக திட்டங்களை எடுத்துக்கொள்ள முடியுமோ அவ்வளவு எடுத்துக்கொள்ளுவதற்கு முயற்சி செய்யப்படுகிறது. அது இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்படவில்லை.

SRI S. LAZAR : பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு வைத்தியர்கள் நியமனம் சம்பந்தமாக இந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாகக் கூறினார்கள். அதுபற்றி என்ன முடிவு எடுக்கப்பட்டது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது பல பிரைமரி ஹெல்த் சென்டர்களில் டாக்டர்கள் இல்லை. போதிய வசதிகள் இல்லாத காரணத்தினாலே அங்கே டாக்டர்கள் போவதற்கும் தயங்குகிறார்கள். அவர்கள் தங்குவதற்கு வீடுகள் கட்டவேண்டுமென்று இப்பொழுது சர்க்கார் முடிவு செய்திருக்கிறது.

SRI A. GOVINDASAMY : ஒவ்வொரு மாவட்டத்திலும் ரோடு போடுவது, பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்காக ஸ்தல அபிவிருத்தித் திட்டம், சமுதாய நலத் திட்டங்களின் கீழ் பொது ஜனங்கள் நன்கொடை அளித்தும்,

ஜில்லா போர்டு நிதி போதுமானதாக இல்லாத காரணத்தினாலே இந்த வேலைகள் தயக்கப்படுகின்றன. அதை சரிக்கட்டுவது பற்றி இந்த போர்டில் ஏதாவது ஆலோசிக்கப்பட்டதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப் படவில்லை.

Charkas

*592 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கோவையில் டெக்ஸ்டூல் கம்பெனியார் செய்த 16 (ஸ்பிண்டில்) கதிர் உள்ள ராட்டைகள் இதுவரை அரசாங்கம் எத்தனை வாங்கியிருக்கிறது ?

(ஆ) இந்த ராட்டை ஒவ்வொன்றின் கிரயம் என்ன ?

(இ) இவற்றை எந்த கிராமத்தில் வைத்து பரிசீலனை செய்யப்படுகிறது ?

(ஈ) பரிசீலனை மூலம் இதுவரை கண்ட முடிவு என்ன ?

(உ) இந்த ராட்டை மூலம் ஒரு மணிக்கு எந்த நம்பர் உள்ள நூல் எத்தனை சிட்டம் நூற்க முடிகிறது ?

(ஊ) நூலின் பலம் பரிசீலனையில் எப்படி இருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Twenty-five spinning units have been purchased from Messrs. Textools, Limited, Coimbatore.

(*b*) The cost of each unit is Rs. 1,000 only exclusive of the cost of motor and accessories.

(*c*) The units are being worked at Pollachi and surrounding villages of Nallapattipalayam, Nagamam, Muthur and Annamalai.

(*d*) It has been found that the spinning units when worked by two persons (one adult and a boy or woman) for 8 hours can produce 5 lb. of 20s yarn (100 hanks), the quality of which compares very favourably with mill yarn. The yarn has been used on four looms installed at Pollachi and cloth so woven has proved to be popular.

(*e*) Between 10 and 13 hanks of 20s yarn could be spun in one hour.

(*f*) The yarn spun by the trainees is fairly uniform in count and tensile strength and compares very favourably with the mill yarn.

SRI A. VEDARATHNAM : இந்த முடிவுகளிலிருந்து இந்த ராட்டைகளை மேலும் விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா ? அப்படியானால் எந்த அடிப்படையில் ? எவ்வளவு ? எந்த இடத்தில் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நூல் நன்றாக இருக்கிறது. நூலினால் நெய்யப்பட்ட துணியும் நன்றாக இருக்கிறது. ஆனால் கைத்தறிக்காரர்கள் இதை எவ்வளவு தூரம் கையாளுகிறார்கள் என்பது இப்பொழுது பரிசீலிக்கப்படுகிறது. கைத்தறிகாரர்கள் இருக்கும் இன்னும் இரண்டு சென்டர்களில் இதைப் பரிசீலித்து கவனிப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

Sri A. VEDARATHNAM : இந்த நூல் இதுவரையில் கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுத்து பரீட்சிக்கப்படவில்லையா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கொடுக்கப்பட்டு பரீட்சிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் அறுப்புக்கோட்டை போன்ற கைத்தறிக்காரர்கள் பெருவாரியாக உள்ள இடங்களில் இது பரீட்சை செய்யப்படவில்லை.

Glass bangles, beads and toys

*593 Q.—Sri P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

1957–58-ம் ஆண்டுகளிலே கண்ணாடியில் வளையல்கள், மாலைகள், விளையாட்டுச் சாமான்கள் செய்யப் பயிற்சி அளிக்க நிறுவப்பட்டிருக்கும் தொழிற்சாலைகளில் எத்தனை பேர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM :

1957—31 candidates.
1958—31 candidates are undergoing training.

Sri P. G. MANICKAM : மதுரையில் இதற்காக நிறுவப்பட்டிருக்கும் தொழிற்சாலையில் பயிற்சி பெற்றவர்களுக்கு எத்தனை பேர்களுக்கு ரூ. 1,200 வீதம் மான்யம் கொடுக்கப்பட்டது ? மற்றும் கூட்டுறவு சங்கங்களின் மூலம் எத்தனை பேர்களுக்குக் கடன் தொகையும், மான்யத் தொகையும் கொடுக்கப்பட்டது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அதுபற்றி தனிக் கேள்வி கேட்கவேண்டும்.

Sri K. B. S. MANI : இம்மாதிரி மாலை கட்டுவதிலே, நெல், அரிசி, இராம்பு போன்றவைகளைக்கொண்டு தஞ்சாவூரில் உயர்ந்த முறையில் மாலைகள் தயாரிக்கப்படுகின்றன. அங்கே இதற்காக ஒரு தனி தொழிற் சாலை வைத்து நடத்துவதற்குச் சர்க்கார் வசதிகள் செய்து கொடுக்குமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அதுபற்றியும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

Sri A. V. P. ASAITHAMBI : கண்ணாடி வளையல்கள், மாலைகள் இவைகளை செய்கின்ற தொழில் நிலையங்கள் நமது ராஜ்யத்தில் எந்தெந்த மாவட்டங்களில் இருக்கின்றன ? புதியதாக ஏதாவது ஏற்படுத்துவது பற்றி உத்தேசம் உண்டா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Training centre for the manufacture of glass bangles and beads at Madurai. Training-*cum*-service centre for the manufacture of glass bangles at Nedumarathy in Salem district. Training centre for scientific glass blowing in Guindy.

மேற்சொன்ன நிலையங்கள் இப்பொழுது இருக்கின்றன. மேற்கொண்டு இதை விஸ்தரிப்பது பற்றி கவனிக்கப்படும்.

Sri A. A. RASHEED : Sir, is the Hon. Minister aware that glass bangles are not popular with women? If so, will the Government stop giving training for the manufacture of glass bangles?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Perhaps, that is the hon. Member's own experience. We have no information like that.

Sri P. G. MANICKAM : தொழில் நுட்பங்களையும் புது ரகங்கள் தயாரிக்கும் முறைகளையும் பயிற்சியாளர்களுக்கு கற்றுக்கொடுப்பதற்காக ஒரு நிலையம் ஆரம்பிக்கப்படுவதாகத் தெரிவிக்கிறார்கள். அந்த நிலையம் எந்த இடத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது ?

29th September 1958]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது 3 நிலையங்கள் தொடங்கப்பட்டிருப்பது பற்றி குறிப்பிட்டேன். அதைத் தவிர வேறு தகவல்கள் என்னிடம் இல்லை.

Children studying in schools

*594 *Q.*— SRI P. G. MANICKAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 5 முதல் 14 வயது வரை கல்வி கற்கத் தகுதியுடையவர்கள் ஜாபிதாவானது எந்த வருஷத்தில் தயாரிக்கப்பட்டது ?

(ஆ) இந்த ஜாபிதா பிரகாரம் கல்வி கற்கத் தகுதியுடைய சிறுவர்கள் சிறுமிகளுடைய எண்ணிக்கை எத்தனை ? (ஜில்லாவாரியாக.)

(இ) 1957–58-ல் இவர்களுள் எத்தனை சிறுவர்களும், சிறுமிகளும் கல்வி கற்றனர் ? (ஜில்லாவாரியாக.)

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*), (*b*) & (*c*) Statistical data for the year 1956–57 for the whole State excluding Kanyakumari district is alone available and given below. District-war figures are not available.

Estimated population in the age group 5—14 (excludes data regarding Kanyakumari district as they are not available)—

Males	3,585,882
Females	3,612,557

Children under instruction in the age-group 5—14 during the year 1956–57—

Boys	1,928,020
Girls	1,075,406

SRI P. G. MANICKAM : 1965-வது ஆண்டுக்குள்ளாக இந்த மாணவர்களுக்கெல்லாம் இலவசக் கட்டாயக் கல்வி அளிக்கப்படும் என்று சொன்னார்கள். அதற்காக திட்டங்கள் இப்பொழுது வகுக்கப்பட்டிருக்கின்றன. இவை ஜில்லா வாரியாக ஆரம்பித்திலே எடுத்து செய்யப்படுமா ? அல்லது ஏககாலத்தில் எல்லா இடங்களிலும் அமுலுக்கு வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பிளாக் வாரியாக செய்யப்படும்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, I understand that special staff have been appointed for taking statistics in regard to the number of children and the introduction of schools in schoolless areas. Have the Government received any report from the Director of Public Instruction and, if so, will they place it on the table of the House?

THE HON. SRI C. SUBBRAMANIAM : Survey has been completed. I am not quite sure whether the report has been received in the Secretariat. As soon as it is available, it will be placed on the table of the House.

SRI S. M. ANNAMALAI : சாதாரணமாக ஆரம்பப்பள்ளியில் ஐந்தாவது வரையில் படித்தவர்களுக்கு உயர்நிலை பள்ளிகளில் சேருவதற்கு இடம் கிடைக்கவில்லை. வேலூரில் 600 பிள்ளைகளில் ஏறத்தாழ

120 பிள்ளைகளுக்குத் தான் உயர்நிலை பள்ளிகளில் இடம் கிடைத்திருக்கிறது. மற்றவர்கள் வீடு திரும்ப வேண்டியிருந்தது. அதைப் போக்குவதற்கு அரசாங்கத்தினிடம் திட்டம் இருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கேள்வியில் சில புள்ளி விவரங்கள் கேட்டிருக்கிறார்கள். கல்வி வசதி பற்றி தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்லுகிறேன்.

9-10 a.m. SRI N. MARUDACHALAM : பிளாக்கு வாரியாக செய்யப்படும் என்று சொன்னார்கள். எந்த பிளாக்கை முதலில் எடுத்துக் கொள்வார்கள் ? கோயம்புத்தூர் பிளாக்கு எப்பொழுது எடுத்துக் கொள்ளப் படும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அது அடுத்த வருஷத்திலிருந்து ஆரம்பமாகிறது.

SRI K. B. S. MANI : தோதுவர்கள், நரிக்குறவர்கள், போன்றவர்கள் எவ்வளவு சேர்க்கப் பட்டிருக்கிறார்கள் ? அப்படிச் சேர்க்கப்படவில்லையென்றால், அவர்களுக்கு ஒரு தனிச் சலுகை காட்டி' தனி ஏற்பாடுகள் செய்து . . . .

MR. SPEAKER : இந்தக் கேள்வியையே ஒரு தனிக் கேள்வியாகப் போட்டால் நல்லது. (சிரிப்பு.)

SRI. A. V. P. ASAITHAMBI : குழந்தைகள் கல்வி கற்க வேண்டியது ஐந்து வயது முதல் என்று நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. அந்த முறையில் கல்வி கற்க தாமதமாகிவிடுவதனால், அந்த வயதை நாலு என்று குறைத்து நிர்ணயிக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : . புதிதாக ஒரு தத்துவத்தை அங்கத்தினர் சொல்கிறார். அதை அதிகமாக விளம்பரம் செய்து, மற்றவர்கள் ஒப்புக்கொள்ளும்படி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

Famine

* 595 *Q.*—SRI P. U. SHANMUGAM : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் பஞ்ச நிலைமை ஏற்பட்டிருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

(ஆ) பஞ்ச நிவாரண வேலைகள் எடுக்க சர்க்கார் ஏதேனும் உத்தரவு பிறப்பித்துள்ளார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Famine conditions are not prevailing in North Arcot district and no area in the district can be said to be affected as such.

(*b*) The rainfall in the district in 1957 having been less than the normal, the Collector has suggested to Government certain relief measures to the ryots this year which are under consideration.

SRI P. U. SHANMUGAM : மழை பெய்யாததால் பஞ்ச நிலைமை இல்லை என்று சொன்னார்கள். அதே சமயத்தில் மழையில்லாததால், பஞ்ச நிலைமைக்கு நிவாரண வேலைகள் செய்யப்படுகின்றன என்றார்கள். அந்த வேலைகள் என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : மழை சரியாகப் பெய்யாவிட்டால் கஷ்டம் உண்டாகும். அதனால் பஞ்சம் உண்டாவதில்லை. ரொம்ப காலத்துக்கு மழையில்லாவிட்டால், பஞ்சம் வரலாம். நிவா

29th September 1958]

ரணங்கள் சம்பந்தமாக, 1367 பசலியில் கடன்களை ஒத்தி வைக்கவும், கால்நடை தீவனத்திற்கு பக்கத்து ஜில்லாக்களிலிருந்து வைக்கோல் முதலியவை வரவழித்து, குறைந்த விலைக்கு விற்பதும், வரி வசூலிப் பதில், தீவிரமாக இல்லாமல், சற்று நிதானமாகவும் இருக்கிறதும், இவையெல்லாம் செய்யப்படுகின்றன.

SRI V. K. KOTHANDARAMAN : சென்ற இரண்டு வருஷ காலமாக மக்கள் அதிக விலை கொடுத்து உணவுப் பொருள்களை வாங்கமுடியாமல், நியாய விலைக் கடைகளை வைக்கும்படி கேட்டும், அந்த ஜில்லாவிலே ஒரு கடையும் வைக்கப்பட வில்லை.

MR. SPEAKER : அங்கத்தினர் அபிப்பிராயம் கொடுக்கிறார். கேள்வியாகக் கேட்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : அந்த பிரதேசத்தில் நியாய விலைக் கடைகளை உடனடியாகத் திறக்க சர்க்கார் முன்வருவார்களா ?

MR. SPEAKER : பதில் இல்லை.

Training in Madras Flying Club and Sainik Course

* 596 Q.—SRI P. G MANICKAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை விமான கிளப்பிலும், டேராடூனிலுள்ள சைனிக் திட்டத்திலும் 1956–57, 1957–58-ம் ஆண்டுகளிலே பயிற்சிபெற்ற ஒதுக்கப் பட்ட மாணவர்களுக்கும், பழங்குடி மாணவர்களுக்கும் விசேஷ உபகாரச் சம்பளங்கள் கொடுப்பதற்காகச் செலவிடப்பட்ட தொகை எத்தனை ?

(ஆ) 1958–59-ம் வருஷத்திலே மேற்கண்ட பயிற்சிபெற ஒதுக்கப் பட்ட மாணவர்களுக்கும், பழங்குடி மாணவர்களுக்கும் எத்தனை விசேஷ உபகாரச் சம்பளங்கள் வழங்கப்படும் ?

THE HON. SRI P. KAKKAN : (*a*)—

Amount spent for training in Madras Flying Club.	Amount spent for Sainik Course in Dehra Dun.
1956–57—Rs. 240·75 nP	Nil.
1957–58—Rs. 382	Nil.

(*b*)—

Madras Flying Club.	Sainik Course, Dehra Dun.
Two Non-residential scholarships of the value of Rs. 191 each will be awarded to eligible communities.	One scholarship of the value of Rs. 1,550 will be awarded to eligible communities.

SRI P. G. MANICKAM : சர்க்கார் நல்ல முறையிலே திட்டங்களைக் கொண்டு வர முயற்சிகள் செய்தாலும், ஹரிஜன மக்களுக்கு அதைத் தெரிவிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. ஆகையினால், இனிமேலாவது, பிர சாரங்கள் மூலமாக விளம்பரப்படுத்தி, ஹரிஜன மக்களுக்குத் தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தச் சபையிலேயே பலமுறை தெரிவிக்கப்படுகிறது. ப்ளையிங் கிளப் மூலமாகவும் தெரிவிக் கிறார்கள். 1957-58-ல் ஸ்காலர்ஷிப்புகள் கொடுத்து மாணவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். டேராடூன் ஸ்தாபனத்தாரையும் கேட்டிருக்கிறோம். அவையும் தெரிவிக்கப்படும்.

[29th September 1950

Road Inspectors

* 597 *Q.*—SRI R. SRINIVASA IYER : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Road Inspectors (Highways) who were provincialized by the Government were receiving their pay directly from the treasury;

(*b*) whether the Government have passed orders directing them to be classified as " Work-charged " ;

(*c*) whether consequent on the said order, notices have been issued to a large number of Road Inspectors retrenching them;

(*d*) whether any representations have been received from the Road Inspectors about the matter referred to in clauses (*b*) and (*c*); and

(*e*) the steps taken by the Government in the matter?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir. The pay of provincialized Road Inspectors were being drawn from the treasury by departmental officers on Establishment Pay Bills.

(*b*) Yes Sir, for accounting purposes.

(*c*) Yes, Sir.

(*d*) Yes, Sir.

(*e*) The Government are awaiting the report called for from the Chief Engineer (Highways).

SRI R. SRINIVASA IYER : Are these Road Inspectors receiving their pay only under ' Work-charged ' even now? If so, will the Government take steps to see that they receive their pay directly from the Treasury as before?

THE HON. SRI P. KAKKAN : On receipt of a report from the Chief Engineer (Highways), the matter will be further considered.

Government Press in districts

* 598 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state the details of the proposals under consideration of the Government for the establishment of Branch Presses at the headquarters of some districts?

THE HON. SRI V. RAMAIAH : There are no such proposals under the consideration of Government at present.

SRI P. G. MANICKAM : இப்பொழுது ஆட்சி மொழி தமிழே என்று அரசாங்கம் ஏற்றுக்கொண்டு இருப்பதால், ஒவ்வொரு இலாக்காக்களுக்கும் இந்த அச்சு இயந்திரம் அதிகத் தேவையாக இருக்கும். ஆகையினால், சில குறிப்பிட்ட இடங்களிலாவது தமிழ் அச்சு நிலயங்களை நிறுவப் பரிசீலனை செய்யப்படுமா ?

THE HON. SRI V. RAMAIAH : இலாக்காக்களுக்கு வேண்டிய தமிழ் அச்சு அத்தனையும் இப்பொழுது இருக்கும் ஏற்பாட்டின்படியே செய்து கொடுக்கப் போதுமானது.

(SRI A. GOVINDASAMI எழுந்து நின்றார்.)

29th September 1958]

Mr. SPEAKER : The Hon. Minister's reply is that there are no such proposals.

The hon. Member must put a separate question if he wants to get any other information.

Panchayat for Nariyambattu village

* 599 *Q.*—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that the panchayat board has not been formed in Nariyambattu village, Gudiyatham taluk, North Arcot, in spite of the fact that the application has been pending for the last three years; and

(*b*) if so, the action taken by the Government for the constitution of the panchayat?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON : (*a*) No, Sir.

(*b*) A notification constituting a panchayat for the Nariyambattu village was issued by the Regional Inspector of Municipal Councils and Local Boards, North Arcot. Elections to the panchayat fixed for 30th August 1958 proved infructuous as no nomination was received, and the date of constitution of the panchayat has been postponed up to 30th October 1958.

Removal of bamboo in Salem South Division

* 600 *Q.*—Sri V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Home be pleased to state the reason for not removing the bamboo from the thirteen bamboo coupes auctioned as usual in March 1958, in the Salem (South) Division?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The Bamboo coupes of Salem (South) Division were auctioned by the District Forest Officer on 27th March 1958. But the confirmation of the sale took time as a represestation was made to the Government by a party questioning the validity of the auction sale. After careful examination, orders were issued confirming the sale in the name of the highest bidder in respect of five out of nine coupes for which satisfactory prices were obtained and the coupes are now under working. The prices got for the balance of four coupes were not satisfactory and steps have been taken by the District Forest Officer to conduct a resale.

Sri V. K. KOTHANDARAMAN : இந்த மூங்கில் வெட்டு நடைபெறுமல், நின்றுவிட்ட காரணத்தால், கூடை போன்ற சிறு தொழில் செய்தவர்கள் வாழ்க்கை பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா ? இப்பொழுது இருக்கும் நிலைமை என்ன என்று சொல்ல முடியுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : நின்று போய்விடவில்லை. ஐந்து கூப்புகள் ஆக்ஷன் ஆகிவிட்டது என்று சொன்னேன். பாக்கி நாலு கூப்புகள் அதிக விலை கிடைக்காததால், மறு ஆக்ஷன் போடவேண்டியிருந்தது. தவிர்க்கக்கூடிய தாமதம் எதுவும் இல்லை.

[29th September 1958

SRI S. NAGARAJA MONIGAR : மீதி நாலு கூப்புகளைப் பற்றி தனி நபர் முறையிட்டதின் பேரில், சர்க்கார் கவனம் செலுத்தியது. அதே ஆபீசர் ஏலம் போட ஏற்பாடு செய்திருப்பது, அவ்வளவு சரியா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஆபீசர் மீது குற்றம் சாட்டப்படவில்லை. ஆகவே, ஆபீசரை மாற்றி ஏலம் போடவேண்டிய நிமித்தம் ஏற்படவில்லை.

Seed Farms

* 601 *Q.*—SRI A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of State Seed Farms that were producing seeds last year in this State;

(*b*) the quantity and the varieties of seeds produced;

(*c*) whether these seeds were tested before distribution and if so, the results thereof;

(*d*) whether any complaints were received from the Agriculturists about the seeds distributed by the Agricultural Department; and if so, the details thereof; and the action thereon by the Government;

(*e*) whether the scheme of producing seeds has been expanded during this year; and

(*f*) whether there is any proposal for the supply of seeds to wet areas depending on seasonal rains; and if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) There were 154 State Seed Farms in the State on 31st March 1958.

(*b*)

Name o fcrop.	Quantity.	
	TONS.	LB.
1 Paddy	1,259	1,128
2 Millets	27	470
3 Groundnut	33	411
4 Potato	97	2,220
5 Cotton	167	399

(*c*) The general instructions of the Department are that the subordinate who receives any seed should conduct the germination test immediately on receipt and before sale to ryots. The seeds produced in the State Seed Farms are pure, well-dried and viable.

(*d*) No complaints were received.

(*e*) The target is a total of 360 State Seed Farms of 25 acres each by 31st March 1959. One hundred and fifty-four were in existence on 31st March 1958. The balance 206 farms are to be started in 1958–59. The progress will depend upon the availability of suitable land and the personnel to manage them.

(*f*) Supply of seeds will be regulated according to the needs of the tract and suitability of strains.

29th September 1958]

SRI A. VEDARATHNAM : இவ்வளவு விதைப் பண்ணைகள் வைத்து நடத்தியதில் கிடைத்த அனுபவத்தின் பேரில் எந்த ரக விதை நல்ல ஈல்ட் கொடுத்திருக்கிறது என்பதை அரசாங்கம் கண்டுபிடித்து இருக் கிறதா ? அப்படிக் கண்டுபிடித்திருந்தால் அதை விவசாயிகளிடத்தில் பரப்புவதற்கு சர்க்கார் என்ன முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அங்கங்குள்ள ஸ்ட்ரேயின்களை அனுசரித்து நல்ல முறையில் ஆராய்ச்சிசெய்து, அதன் பிறகு அதைப்பற்றி பரிசீலனை செய்து அதன்படி விவசாயிகளுக்கு ஆலோ சனை கொடுக்கப்பட்டு வருகிறது. 9-20 a.m.

SRI R. SWAMINATHA MERKONDAR : மானாவாரி பஞ்சப் பிரதேசங் களில் விதை பண்ணைகளை வைக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ? அப்படியானால் தஞ்சை தாலுகாவில் பெரும்பகுதியான காடாரம்பத்தில், விதைப் பண்ணைகளை வைத்துக் கொடுக்க வேண்டுமென்று சென்ற வருஷம் பல மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். அவைகளைப்பற்றி துரிதமாகக் கவனித்து ஆவன செய்யமுடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சாதாரணமாக மானாவாரி பிரதேசங்களில் வைக்கவேண்டியதுதான். தஞ்சை ஜில்லாவில் தனியாக வைக்க வேண்டும் என்று சொல்வதற்கு அவசியம் இல்லை.

SRI C. NATARAJA ODAYAR : இந்த விதைகளைக் கடனாக வழங்குவதில் ஏதாவது புதிய திட்டம் செய்திருக்கிறார்களா இந்த ஆண்டில், என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றித் தனி யாகக் கேள்வி கேட்டால் அதற்குப் பதில் சொல்லுகிறேன்.

SRI T. S. RAMASWAMY PILLAI : May I know the area confined to paddy cultivation and the quantity produced last year if he has got the figures with him. May I know also whether the Government are aware of the fact that the quantity produced in the State Seed Farms, especially paddy, is not comparable to the average yield?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Regarding paddy the yield is only 60 per cent and it is not adequate to meet the demands of the ryots. More seeds would have to be produced to meet the demand in full.

SRI V. SUBBIAH : நீண்ட இழை விளைவிக்கக்கூடிய பருத்தி விதை கே.-2, கே-3 இவைகளில் கே-3 என்று இருக்கக்கூடிய பருத்தி விதைக்குப் புதியதாக பாண்டியா என்ற பெயரையிட்டிருக்கிறார்கள். அதை விவசாயிகளுக்குத் தாராளமாகக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய் வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

SRI A. VEDARATHNAM : மானாவாரி பிரதேசங்களுக்குத் தனி விதைப் பண்ணைகளை ஏற்படுத்த உத்தேசம் இருக்கிறது என்று கனம் மந்திரி அவர்கள் சொன்னார். அதை எந்த இடத்தில் ஏற்படுத்த உத்தே சித்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றிய தகவல் என்னிடத்தில் இப்பொழுது இல்லை.

MR. SPEAKER : கேள்வி 602. இதுவும் 601 ஆவது கேள்வி யைப் போன்றதுதான் அதன்மேல் உப கேள்விகள் கேட்க வேண்டும் என்று நினைத்தவர்கள் இதன்மேல் கேட்கலாம்.

[29th September 1958

* 602 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of seed farms scheduled to be opened in Tiruchirappalli district (North and South) during the Second Plan period;

(*b*) the number actually opened and functioning in the district;

(*c*) the number amongst them (i) owned by Government, (ii) taken on lease by the Government; and

(*d*) the percentage of acreage in the district actually covered so far by the improved seeds?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 32 (thirty-two) State Seed Farms have been scheduled to be opened in Tiruchirappalli district during the second Five-Year Plan period.

(*b*) 13 (thirteen) State Seed Farm are actually functioning in the district at present.

(*e*) (i) One. (ii) Twelve.

(*d*) The particulars are as detailed below :—

Crop.	Acreage Covered.
	PER CENT.
Paddy seeds	60
Cholam	40
Cumbu	42
Ragi	25

SRI P. U. SHANMUGAM : இந்த ஆண்டு குத்தகைக்கு விட விதைப் பண்ணைகளுக்கு என்று நிலங்களை வாங்குவதற்குச் சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : உத்தேசம் இருக்கிறது.

SRI S. LAZAR : பண்ணைகளுக்கு விதைகளை விநியோகிக்கும்போது விதைகள் போதவில்லை என்று திருச்சி ஜில்லாவிலிருந்து ஏதாவது கோரிக்கைகள் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? அப்படியானால் அதை அதிகப்படுத்த என்ன முயற்சி எடுத்துக்கொள்ளப் போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நானே குறிப்பிட்டிருக்கிறேன். திருச்சி ஜில்லாவைப் பொருத்த வரைக்கும் 100-க்கு 60 வீதம்தான் நல்ல விதைகள் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மற்ற தானியங்களும் இன்னும் குறைவாகவேதான் இருக்கிறது. அவைகளையும் அதிகப்படுத்தத் தான்வேண்டும்.

SRI A. GOVINDASAMY : விதைப் பண்ணைகளுக்கு என்று எடுக்கப்பட்டிருக்கக்கூடிய நிலங்கள் சில இடங்களில் நல்ல நிலங்களாகவும், சில இடங்களில் நல்ல பயன் தரக்கூடிய நிலங்களாக இல்லாமலும், இருக்கின்றன. இதைப்பற்றி எஸ்டிமேட் கமிட்டி பரிசீலனை செய்து வருவதால் எஸ்டிமேட் கமிட்டியின் முடிவு தெரிகிற வரைக்கும் நில ஆர்ஜிதம் செய்வதையும், நிலங்களை குத்தகைக்குக் கொடுப்பதையும் நிறுத்தி வைப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

29th September 1958]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது மேலும் அதிகமாகக் கொடுக்கவேண்டும் என்பது அல்ல. ஏற்கெனவே குறைகள் இருக்கக்கூடிய இடங்களில் சரியான முறையில் நடக்க வேண்டும் என்ற யோசனை இருக்கிறது. ஆனால் சிற்சில இடங்களில் அவசியமாகத் தேவை ஏற்படுமானால் அதைப்பொறுத்து சிற்சில இடங்களில் கொடுக்கப் படும். புதிய பண்ணைகளை வைப்பதற்கு எஸ்டிமேட் கமிட்டியின் அபிப் பிராயமும் எதிர்பார்க்கப்படுகிறது.

SRI T. VELUCHAMI: பழைய விதைகளுக்குப் பதிலாக பொறுக்கு விதைகளை உபயோகிப்பதில் எத்தனை சத விகிதம் அதிகமான மகசூல் கிடைக்கிறது ? தமிழ் நாடு பூராவும் இப்படிப் பொறுக்கு விதைகளைக் கொடுத்துப் பரப்ப வேண்டுமானால் அது எத்தனை ஆண்டு களுக்குள் முடியும் என்று கனம் மந்திரி அவர்கள் அபிப்பிராயப்படு கிறார்கள்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தமிழ் நாடு பூராவும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிகிற வரைக்கும் கொடுக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் லட்சியம். இந்தத் திட்டத்தின் மூலமாக எவ்வளவு அதிக மகசூல் பெருகி இருக்கிறது என்பதைக் கணக்கிட முடியாது.

Text-books

* 603 *Q.*—SRI N. K. PALANISAMI AND SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Finance be pleased to state the steps taken to publish text-books for schools?

THE HON. SRI C. SUBRAMANIAM : In January 1958, the Government announced that they would publish text-books for school standards IV in 1959–60 and school standards I–III and V in 1960–61. A Special Officer was appointed in the Office of the Director of Public Instruction for this purpose. A preliminary report as to what matters the Special Officer should address himself was received and examined by Government. It has been decided now that the Government will publish text-books for standards I to III and V form 1960–61 onwards and Government text-books for standard IV will come into force from 1961–62 onwards.

2. Action is, however, being taken to secure and instal an up to date printing machine in the meantime.

SRI N. K. PALANISAMI : சர்க்கார் பாட புஸ்தகங்களை வெளியிடுவதை எதிர்த்துச் சிலர் சில பேரைத் தூண்டி விட்டு சர்க்காருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்வது சர்க்காருக்குத் தெரியுமா ? அதனால் அதற்கு சர்க்கார் பயப்படாமல் பாட புஸ்தகங்களை வெளியிடுவதற்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எது சரி என்று சர்க்காருக்குத் தோன்றுகிறதோ அதைச் செய்து வருகிறது. சில விஷயங் களில் பாட புஸ்தகங்களை வெளியிடுபவர்கள் சர்க்காரை பயமுறுத்தி வருகிறார்கள், சில இடங்களில் அரசியல் கட்சிகளும் பயமுறுத்திக்கொண்டு வருகிறார்கள். அவைகளை கவனியாமல் சர்க்காருக்கு எது சரி என்று தோன்றுகிறதோ அதைச் செய்வதற்கு முயற்சி செய்து கொண்டு வரு கிறார்கள்.

[29th September 1958

Sri A. V. P. ASAITHAMBI : பாட புஸ்தகங்களை சர்க்கார் வெளியிடுவதற்காக நாட்டில் இருக்கக்கூடிய எதிர்ப்பு எல்லாம், பாட புஸ்தகங்களை அரசாங்கம் வெளியிட முன் வந்தவுடன் அரசாங்கம் எந்தக் கட்சியைச் சேர்ந்ததாக இருக்கிறதோ அந்தக் கட்சியின் கருத்துப்படித் தான் பாடங்களை வெளியிடுவார்கள் என்ற கருத்து இருப்பதால், அந்த எதிர்ப்பு இருக்கிறது, அம்மாதிரி அரசாங்கம் செய்யாது டெக்ஸ்ட் புக் கமிட்டி எதைத் தீர்மானிக்கிறதோ அதைச் செய்கிறோம் என்ற அபிப்பிராயத்தை அரசாங்கம் வெளியிடுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : பாடப் புஸ்தகங்களை வெளியிடுவதில் மந்திரியோ அல்லது அந்த இலாகாவின் உத்யோகஸ்தர்களோ உட்கார்ந்து வெளியிடுவது அல்ல. அல்லது அரசியல் வாதிகளும் வெளியிடுவது அல்ல. அதற்கு என்று தனியாக, அரசியலில் சம்பந்தம் இல்லாத நிபுணர்களையும், புலவர்களையும் கொண்ட, ஒரு கமிட்டியை நியமிக்கிறார்கள். அந்தக் கமிட்டி பாட புஸ்தகங்களை வெளியிடுகிறார்கள். ஆகவே அதில் அனுவசியமாக அரசியல் கருத்துக்களைப் புகுத்தி விடுவார்களோ என்ற பயத்துக்கு இடமே இல்லை.

Irrigation Advisory Board

* 604 *Q.*—Sri R. SRINIVASA IYER : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to reconstitute the Irrigation Advisory Board for Cauvery Delta?

The Hon. Sri P. KAKKAN : The Irrigation Advisory Board for Cauvery Delta has recently been reconstituted. There is therefore no proposal to reconstitute it.

Pumping schemes in Tiruturaipundi taluk

* 605 *Q.*—Sri A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of size of motors working in the Ayakarambalam Pumping Station in Tiruturaipundi taluk, Tanjore district;

(*b*) the acreage benefited thereby;

(*c*) the number of pumpsets to be installed as per the original scheme;

(*d*) the steps taken for installation of the remaining motor pumpsets; and

(*e*) when the remaining pumpsets will be installed?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Two 15 h.p. motor pumpsets have been installed by ryots.

(*b*) 700 acres.

(*c*) According to the sanctioned scheme motor pumpsets with an aggregate of 60 h.p. are required.

(*d*) & (*e*) Two motor pumpsets with an aggregate of 30 h.p. have been installed. So one more motor pumpset to make up the balance of 30 h.p. has to be installed by the ryots. The question of installing the remaining motor pumpset at State cost in the first instance is under consideration.

29th September 1958]

SRI A. VEDARATHNAM : இப்பொழுது இருக்கிற இந்த இரண்டு பம்பு செட்டுகள் மூலமாக அந்தப் பிரதேசங்களில் குறிப்பிட்டிருக்கிற 700 ஏக்கருக்குப் பாசன வசதி அளிக்க முடியுமா ? இல்லையானால் அதற்கு என்ன ஏற்பாடு செய்ய உத்தேசம் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த 700 ஏக்கருக்குப் பாசன வசதி அளிப்பதற்குப் போதவில்லை. ஆகையால் இன்னும் பம்பு செட்டுகள் வைக்க வேண்டுமென்று இப்பொழுது தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

SRI M. S. SELVARAJAN : தாம்பரபரணி கடை அணைக்கீழ்ப் பகுதிக்கு இதை அமுல் நடத்த இப்பொழுது ஏதாவது திட்டம் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தனியாக கேள்வி கேளுங்கள் பதில் சொல்லுகிறேன்.

SRI A. VEDARATHNAM : இன்னொரு பம்ப் செட் வைக்க வேண்டியதை சாகுபடிக்குக் குந்தகம் இல்லாமல், இந்த ஆண்டுக்குள்ளேயே வைப்பதற்கு அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்துக்கொள்ளுமா ? 9-30 a.m.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரசாங்கம் அதைப் பற்றி கவனித்துக்கொண்டுதான் இருக்கிறது.

* 606 *Q.*—SRI A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Thennadar Pumping Scheme in Tiruturaipundi taluk, Tanjore district, has been sanctioned;

(*b*) when the scheme will be taken up for execution;

(*c*) the acreage expected to be benefited by the scheme; and

(*d*) the amount sanctioned therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The Scheme will be taken up for execution shortly.

(*c*) 1,040 acres.

(*d*) Rs. 1,71,000 for works (including cost of pumpsets).

* 607 *Q.*—SRI A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) when will the Valavanar Pumping Scheme in Tiruturaipundi taluk, Tanjore district, be ready for irrigation;

(*b*) the acreage expected to be benefited by the Scheme and

(*c*) the amount sanctioned therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The work has been sanctioned, but it has not yet actually been started. The preliminaries such as preparation of land plans, etc., and other formalities are being attended to. At this stage, it is not possible to say when the scheme would be ready for irrigation.

(*b*) 1,970 acres.

(*c*) Rs. 2,56,780 (for works).

Opening of a new Engineering College

*** 608 Q.—Sri A. VEDARATHNAM** : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) நம் மாகாணத்தில் புதிய இன்ஜினீரிங் காலேஜ் ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) அப்படியானல் எங்கே, எப்போது ?

(இ) எந்தெந்த ஜில்லாக்களிலிருந்து இதற்கு விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன ?

(ஈ) இன்ஜினிரிங் காலேஜ் ஏற்படுத்த ஆகும் மொத்த செலவு எவ்வளவு ?

(உ) இதில் அரசாங்கம் உதவும் மான்யம் எவ்வளவு ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) & (*b*) The opening of an Engineering College mainly depends upon the decision of the Government of India. However, a proposal for opening an Engineering College at Tuticorin (Tirunelveli district) is under examination.

(*c*) Application has come only from Tirunelveli district.

(*d*) Non-recurring—About Rs. 31 lakhs.

Recurring—About Rs. 4·4 lakhs.

(*e*) The State Government bear one-fourth of the non- recurring cost up to a maximum of Rs. 7·75 lakhs and also pay a recurring grant of one half of the approved net cost arrived at after deducting the income from tuition fees and the grant paid from the Government of India from the expenditure subject to a maximum of rupees one lakh during the plan period and the same formula will continue to apply even after Central grants cease to be received.

Sri A. VEDARATHNAM : திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து மாத்திரம் விண்ணப்பம் வந்திருப்பதாகக் குறிப்பிட்டார்கள். தஞ்சை ஜில்லா போர்டு அங்கே ஒரு என்ஜினீரிங் காலேஜ் ஏற்படுத்த வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறதே, அதைப்பற்றி அரசாங்கம் ஆலோசனைக்கு எடுத்துக்கொண்டதா ? அவர்கள் ரயில்வே செஸ் நிதியிலிருந்து அந்தக் காலேஜை ஏற்படுத்தவேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்களே, அதைப் பற்றி அரசாங்கம் என்ன முடிவுக்கு வந்திருக்கிறது ?

The Hon. Sri C. SUBRAMANIAM : ஒரே நிதியை வைத்து எத்தனை திட்டங்கள் ஏற்படுத்த முடியுமோ எனக்குத் தெரியவில்லை. வெறும் வருமானம் மட்டும் இருந்தால் போதாது. இது சர்க்காரே ஏற்படுத்தக்கூடிய காலேஜ்கள் அல்ல. தனிப்பட்டவர்கள் ஏற்படுத்தக்கூடிய காலேஜ்கள். ஆகையால், தனிப்பட்டவர்கள் இதற்கு முன்வந்தால், அப்பொழுதுதான் இதைக் கவனிக்க முடியும்.

Sri D. S. AUTHIMOOLAM : என்ஜினீரிங் காலேஜ் ஒன்று தூத்துக்குடியில் ஆரம்பிக்கப்படுவது குறித்து அந்த ஜில்லாவாசி என்ற முறையில் நான் அதை வரவேற்கிறேன். ஆனல், தேர்தல் நடப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு கனம் நிதி அமைச்சர் அவர்கள் தூத்துக்குடியில் இதை அறிவித்தார்கள். ஆகவே, தேர்தலுக்கு முன்பு அப்ளிகேஷன் சர்க்காருக்கு வந்ததா ? அல்லது தேர்தலுக்குப் பிண்பு வந்ததா ?

29th September 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM: நான் அங்கே அறிவிக்கவில்லை. இதுமாதிரி என்ஜினீரிங் காலேஜ் ஆரம்பிப்பது என்பது ரொம்ப கஷ்டமான காரியம். ஆகவே, முதலிலே பாலிடெக்னிக் ஆரம்பிக்க முயற்சி செய்யுங்கள், அதற்குப் பின்னால் வேண்டுமானால் என்ஜினீரிங் காலேஜ் வைப்பதுபற்றி யோசனை செய்துகொள்ளலாம் என்றுதான் நான் சொன்னேனே தவிர, என்ஜினீரிங் காலேஜ் வைப்பதாக நான் சொல்லவில்லை. அதுவும் அங்கே தேர்தல் பிரசாரத்திற்காகப் பேசிய கூட்டத்தில் அல்ல. மாணவர்களுடைய கூட்டத்திலே—வோட்டு இல்லாதவர்கள் கூட்டத்திலே பேசியது.

SRIMATHI RAJATHI KUNJITHAPATHAM: திருநெல்வேலி ஜில்லாவில் தாளையூத்தில் இந்தியா சிமெண்ட் கம்பெனியார் பாலி டெக்னிக் ஒன்று நடத்துகிறார்கள். கனம் முதலமைச்சர் அவர்கள் அங்கு வந்திருந்தபோது, என்ஜினீரிங் காலேஜ் ஒன்று வைக்கவேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அது விஷயமாகக் கவனிக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது விஷயமாக இப்பொழுது விண்ணப்பித்துக் கொண்டால் கவனிப்பாரா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: அது தக்க சமயத்தில் கவனிக்கப்படும்.

Backward and Most Backward Classes

* 609 *Q.*—SRI T. S. RAMASWAMY PILLAI (on behalf of Sri M. Jangal Reddiar): Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government are considering any proposal to include certain "Forward Communities" in the list of Backward Classes and to include certain "Backward Communities" in the list of Most Backward Classes; and

(*b*) if so, what are the Communities and their proposed classification?

THE HON. SRI P. KAKKAN: (*a*) No, Sir.

(*b*) The question does not arise.

SRI T. S. RAMASWAMY PILLAI: பாக்வார்டு, மோஸ்ட் பாக்வார்டு என்று சில சமூகங்களைக் குறிப்பிட்டிருந்தாலும், மிகவும் பிற்பட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்கள் உண்மையிலேயே அத்தகைய சர்ட்டிபிகேட் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். குறிப்பாக, "சாணர்" "நாடார்" போன்ற சமூகத்தினர் இத்தகைய சர்ட்டிபிகேட் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI P. KAKKAN: எனக்கு அந்தத் தகவல் வரவில்லை.

SRI N. R. THIAGARAJAN: பின்தங்கிய, மிகப் பின்தங்கிய, மிக மிகப் பின்தங்கிய என்று இப்படியாகப் பின்னால் போய்க்கொண்டிருக்கிறோம். இவற்றை மாற்றி, ஏழை, பணக்காரன் என்ற இரு ஜாதிமட்டும் உண்டுபண்ணப்போவதாக டில்லியில் பேச்சுவார்த்தை நடந்ததா ? அப்படியானால், அது எப்பொழுது அமுலுக்கு வரும் ?

THE HON. SRI P. KAKKAN: பரிசீலனை செய்து பின்னால்தான் தெரிவிக்கவேண்டும்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR: பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் இப்பொழுது இருக்கும் செங்குந்தர், தேவாங்கர், சௌராஷ்டிரர், வன்னியர் இதுபோன்ற சமூகங்கள் மிகவும் பிற்பட்டுப் பின்தங்கிய நிலையில்

இருக்கின்றன. பொருளாதாரத் துறையிலும், கல்வித் துறையிலும் அவர்கள் பின்தங்கிய நிலையில் இருப்பதால் அந்தச் சமூகங்களையாகிலும் அதிக பிற்பட்ட சமூகத்தவர் பட்டியலில் சேர்க்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI P. KAKKAN : இப்பொழுது இல்லை.

Drainage schemes

* 610 *Q.*—SRI A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the work relating to Kandaparicharnur Drainage Scheme in Mannargudi taluk, Tanjore district, has been commenced;

(*b*) when it will be completed; and

(*c*) what is the total amount to be spent on the scheme?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir. The work will be started immediately after the present irrigation season is over.

(*b*) It will be completed in two seasons, i.e., by July 1960.

(*c*) Rs. 4,81,000 (for works).

SRI A. VEDARATHNAM : இந்த வடிகால் ஜலத்தை கடை முனையிலே (டெயில் எண்ட்) பாசனத்திற்கு உபயோகப்படுத்திக் கொள்கின்ற உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ? இல்லையானால், அதைப்பற்றிப் பரிசீலிக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வடிகால் வசதி செய்து கொடுக்கப்பட்டு, 472 சில்லறை எக்கர் நிலத்திற்கு இரண்டாவது போகம் சாகுபடிக்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

Publication of Cheap Editions of Tamil books

MR. SPEAKER : The Hon. Member is not in his seat. The question and answer will be printed in the proceedings.

* 611 *Q.*—SRI K. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have any proposal to undertake publication of cheap editions of books of literary interest in Tamil language; and

(*b*) if so, the books selected for publication?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Dam across Palar-Porandalar

* 612 *Q.*—SRI N. R. THIAGARAJAN (on behalf of Sri P. S. K. Lakshmipathi Raj) : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to take up and execute the scheme for the construction of a Dam across Palar-Parandalar river rising from Kodaikkanal in Palni taluk, Madurai district, during the Second Five-Fear Plan?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

29th September 1958]

SRI N. R. THIAGARAJAN : இந்தத் திட்டம் நீண்ட நாட்களாக பரிசீலனையில் இருக்கிறது. நீங்களே வந்து பார்த்திருக்கிறீர்கள். முதல் அமைச்சரும் வந்து பார்த்திருக்கிறார். நிதி அமைச்சரும் வந்து பார்த்திருக்கிறார். அந்த மக்கள் பெருவாரியாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். தயவுசெய்து அதைப் பரிசீலனை செய்து, அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்திலாவது சேர்த்துக்கொள்ள முயற்சிப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : இந்தத் திட்டத்தைப்பற்றி ஒரு முறைக்குப் பலமுறை பரிசீலனை செய்துதான் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று இந்திய சர்க்காருக்கு அனுப்பப்பட்டது. இருந்தாலும், அதனால் பலன் அதிகம் இல்லை என்ற காரணத்தால், அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது பிரதம என்ஜினீர் அவர்கள், இதை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில்தான் சேர்க்கவேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறார்கள். அதுவும், அமராவதித் திட்டம், மேட்டூர் கனல் திட்டம், லோயர் பவானி திட்டம் ஆகியவைகளை நடைமுறையில் பார்த்துத்தான் பிற்பாடு இதைப்பற்றி முடிவுக்கு வரவேண்டும்.

Manangondanur Irrigation Schemes

* 613 Q.—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

தஞ்சை ஜில்லா, திருத்துறைப்பூண்டி தாலூகா, மானங்கொண்டான் ஆறுபாசன விஷயம் எந்த நிலையிலிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The scheme has been completed in all respects including land acquisition.

SRI A. VEDARATHNAM : இதற்காக அரசாங்கம் செலவு செய்த பணம் அரசாங்கத்திற்கும் பயன் இல்லாமல், விவசாயிகளுக்கும் பயன் இல்லாமல், பாசன வசதி அளிக்காத காரணத்தால் வீணாகியிருக்கிறது. அங்கே விவசாயிகளுக்கு அதன்மூலம் பாசன வசதி செய்து கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அங்கே ஒரு காஸ்வே போட வேண்டியிருந்தது. இந்தத் திட்டத்தில் 450 எக்கர் நிலத்திற்கு வசதி ஏற்படும், 112 டன் அரிசி உற்பத்தி அதிகமாக ஏற்படும் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

Police dogs and District Headquarters

* 614 Q.—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to keep at least one dog in each district headquarters to assist the Police in the investigation of crimes?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

SRI S. LAZAR : இதற்குத் தேவை இருக்கிறதென்பதை அரசாங்கம் உணருகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தேவை இருப்பது மட்டும் போதாது. இதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்யவேண்டும். நாய்களைக் கொடுத்தாலும், அந்த நாய்களை வைத்து வேலை வாங்குபவர்களுக்குப் பயிற்சி வேண்டும். ஆகையால், இந்தக் கஷ்டங்களை உத்தேசித்துத்தான் சென்னையிலே மட்டும் வைத்துக்கொள்வது என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

SRI K. B. S. MANI : இம்மாதிரி உயர்ந்த ரகமான நாய்களைத் தனிப்பட்டவர்கள் வைத்திருந்தால், அந்த நாய்களை சர்க்கார் ட்ரெயினிங் சென்டருக்கு அனுப்பிப் பயிற்சி அளிப்பார்களா ? அதற்கான செலவுகளைச் சர்க்கார்

ஏற்றுக்கொண்டு, அந்தப் பயிற்சியை அவைகளுக்கு அளித்து, அவைகளை ஜில்லா தலைமையிடங்களில் வைத்திருக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : குற்றங்களைக் கண்டு பிடிப்பதற்காக நாய்கள் இருக்கின்றன. ஆகையால், தனிப்பட்டவர்களிடம் இதை விட முடியாது.

SRI M. C. MUTHUKUMARASWAMY : பகுத்தறிவில்லாத நாய்களைக் கொண்டு பகுத்தறிவுள்ள மனிதர்கள் செய்யும் திருட்டுகளைக் கண்டுபிடிக்க அவைகளுக்குப் பயிற்சி கொடுப்பதற்குப் பதிலாக, பகுத்தறிவுள்ள மனிதர்களுக்கே நல்ல முறையில் பயிற்சி அளித்து, அவர்களைக் கொண்டே திருட்டுக்களைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நாய்களுக்குப் பகுத்தறிவு இல்லை என்பதை நான் ஒப்புக்கொள்ள முடியாது.

Fee concessions

* 615 *Q.*—SRI S. LAZAR (on behalf of Sri T. T. Daniel) : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Christian converts of Scheduled Tribes and Backward Communities are entitled to fee concession?

THE HON. SRI C. SUBRAMANIAM : A pupil belonging to any of the Scheduled Tribes or to any of the communities included in the list of most backward classes will be granted fee concession irrespective of his religion while a pupil belonging to any of the other backward classes who is in receipt of a fee concession shall not be deprived of it, if he becomes a convert to any other religion while holding the concession.

SRI A. V. P. ASAITHAMBI : இம்மாதிரி புத்த மதத்திற்கு மாறியவர்களுக்கும் தற்போது சம்பளச் சலுகை வழங்கப்படுகிறதா ? அல்லது வழங்க ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நம் ராஜ்யத்திலே யாரும் புத்த மதத்தைத் தழுவியதாகத் தெரியவில்லை.

SRI S. LAZAR : மதத்திற்கு அப்பாற்பட்ட ஒரு அரசியலமைப்பைக் கொண்டிருக்கும் நாம், மதத்தின் அடிப்படையிலே இந்த வித்தியாசத்தைக் காண்பிப்பதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : மதத்தின் அடிப்படையில் இருக்கும் வித்தியாசத்தை நீக்குவதற்குத்தான் முயற்சி செய்திருக்கிறோம்.

Minor Irrigation Schemes

* 616 *Q.*—SRI N. R. THIAGARAJAN (on behalf of Sri P. S. K. Lakshmipathi Raj) : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government intend to execute the following schemes prepared under the Special Minor Irrigation Programme :—

(1) Varadhamanadhi Anicut Scheme in Ayakudi Zamin area, Palni taluk; and

(2) Kudiraiyar Anicut Scheme near Pappanpatti?

29th September 1958]

THE HON. SRI P. KAKKAN : No scheme has yet been prepared or sanctioned for the provision of anicuts across these rivers. The question of their execution therefore does not arise.

SRI N. R. THIAGARAJAN : குதிரையாறு அணைக்கட்டுத் திட்டமும் வரதமா நதி அணைக்கட்டுத் திட்டமும் லாபகரமான அணைக்கட்டுத் திட்டங்களாக இருக்கும் என்று கேள்விப்படுகிறோம். அப்படிப்பட்ட இந்தத் திட்டங்களை அரசாங்கத்தார் பரிசீலனை செய்தார்களா, இல்லையா ? பரிசீலனை செய்திருந்தால், அவை லாபகரமான திட்டங்கள் என்று தெரியவருகிறதா, இல்லையா ?

THE HON. SRI P. KAKKAN : அத்திட்டங்களை அரசாங்கத்தார் ஏற்கெனவே பரிசீலித்திருக்கிறார்கள். இருந்தாலும், உணவு-விவசாய இலாகாவின் மூலம் அவைகளை மீண்டும் பரிசீலிப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம்.

Tractors

* 617 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state— 9-40 a.m.

(*a*) the number of tractors (including bull-dozers) allotted to and made available at Tiruchirappalli district;

(*b*) the number of them in working condition;

(*c*) the steps taken to make the others function;

(*d*) the acreage of cultivable waste land scheduled to be reclaimed during the Second Plan period; and

(*e*) the actual acreage reclaimed and cultivated?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 12.

(*b*) 7.

(*c*) Necessary spares have been ordered for the sick units and on receipt of the same the units will be commissioned. The units which are under overhauling will also be commissioned after completing the work speedily.

(*d*) An area of 1,500 acres of virgin lands and 1,000 acres of current fallows is programmed to be reclaimed each year during the Second Plan period.

(*e*) 517 acres of virgin lands and 2,471 acres of current fallows.

SRI S. LAZAR : வருடந்தோறும் 1,500 ஏக்கர் நிலங்களை சாகுபடிக்குக் கொண்டுவருவது என்று திட்டமிடப்பட்டிருந்தபடி, அத்தனை ஏக்கர் நிலங்களை சாகுபடிக்குக் கொண்டு வராததற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஆயிரத்தி ஐந்நூறு ஏக்கரை சாகுபடிக்குக் கொண்டு வருவது சாத்தியப்படவில்லை. எத்தனை ஏக்கர் நிலங்களை சாகுபடிக்குக் கொண்டுவர சாத்தியப்பட்டதோ அத்தனை ஏக்கர் நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : There is still so much demand for tractors both in the private sector and the Government. Is it a fact that the import of these tractors has been completely stopped?

[29th September 1958

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir. There is difficulty in getting these tractors imported. Tractors are being made in India also.

SRI V. SUBBIAH : இப்போது, டிராக்டர்களைக் கோரும் எல்லா விவசாயிகளுக்கும் டிராக்டர் கொடுக்கக்கூடிய அளவிற்கு அத்தனை டிராக்டர்கள் அரசாங்கத்திடம் இல்லை. மேலும் சர்க்காரிடம் இருக்கும் டிராக்டர்களிலும் பல சில சமயங்களில் ரிப்பேரில் இருக்கிறது. மணிமுத்தாறு அணைக்கட்டுத் திட்டம் முடிந்த பிறகு ஐந்து புதிய டிராக்டர்களும், வேண்டிய ஸ்பேர் பார்ட்ஸும் போதிய வேலையின்றி தம்மிடம் இருக்கும் என்று அந்தத் திட்ட வேலையில் ஈடுபட்டுள்ள எஞ்சினியர் ஜில்லா ப்ளானிங் போர்டு கூட்டத்தில் தெரிவித்தார். எனவே, மணிமுத்தாறு திட்டம் முடிந்த பிறகு அவைகளை விவசாய இலாகாவிற்கு மாற்றி விவசாய இலாகாவின் மூலம் விவசாயிகளுக்குக் கொடுக்க அரசாங்கம் உத்தேசிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விவசாயிகளுக்கு டிராக்டர் கொடுக்கும் திட்டத்தை மீண்டும் மாற்றியமைப்பது சம்பந்தமாக பரிசீலனை நடந்து வருகிறது. மணிமுத்தாறு திட்டத்தில் உபயோகிக்கப்படும் டிராக்டர்களைப் பொறுத்தவரையில், அவைகளைக் கொண்டு வேறு மராமத்துத் திட்டங்கள் நிறைவேற்றப்படவிருக்கின்றன. ஆகையால் அவைகளை அப்படியே விவசாய இலாகாவிற்கு மாற்றுவதற்கில்லை.

SRI A. GOVINDASAMY : சர்க்கார் நடத்தும் விதைப் பண்ணைகளில், டிராக்டர்களை உபயோகிப்பதில் ஏதாவது விசேஷச் சலுகை காட்டப்படுகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இல்லை.

SRI B. K. LINGA GOWDER : Are the Government aware that out of 12 tractors in the Nilgiris district, 11 tractors are ' sick '?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have no information about it but I do take it from the hon. Member.

Pest attack on paddy crops

* 618 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of acres of paddy crops affected by the pest attack in Madras State during 1957–58;

(*b*) the estimated loss; and

(*c*) who are the officers that are taking preventive measures for combating the pest attack?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*), (*b*) & (*c*) Figures showing the exact area of paddy crops affected by pests and diseases are not available. However, the acreage treated for pests under food crops, the estimated savings in foodgrains and the money value of savings were as follows :—

1. Acreage treated—264,118 (acres).
2. Estimated savings in tons—32,605 (tons).
3. Money value of savings—Rs. 1,67,70,012.

The Crops and Plant Protection Officers, the District Agricultural Officers and other Subordinate Field staff working under them in the districts carry out intensive propaganda on the remedial

29th September 1958]

measures to be adopted by the ryots for the control of pests and diseases of crops, demonstrate to them the methods of control of pests and diseases and do all that is needed to arrest the incidence of the pests and diseases.

SRI P. G. MANICKAM : கிராமங்களில் இருக்கும் குடியானவர்களுக்கு, பயிர்களுக்கு எந்த எந்த நோய்கள் இருக்கும்போது எந்தெந்த மருந்தை எவ்வாறு தெளிப்பது என்பதெல்லாம் தெரியவில்லை. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குடியானவர்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டு அவர்களுக்கு இந்த விஷயங்களை விளக்கி வந்தால், நன்ருக இருக்கும். அதற்கு ஏற்பாடு செய்வதில் சர்க்கார் கவனம் செலுத்துமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதில் இப்போது கவனம் செலுத்தப்பட்டுத்தான் வருகிறது.

SRI T. VELUCHAMI : சென்ற ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் திருநெல்வேலி ஜில்லாவில் செந்தாழை என்ற நோய் சோளப் பயிர்களை பாதித்திருந்தது. சோள மகசூலே கிடையாது என்று சொல்லும் அளவிற்கு அந்த நோய் சோளப் பயிர்களை பாதித்திருந்தது. இதே மாதிரி அடுத்த ஆண்டிலும் சோளப் பயிர்கள் நோயினுல் பாதிக்கப் படாமல் பார்த்துக்கொள்வதற்காக, காலா காலத்தில் அப்பயிர்களுக்கு போதிய பூச்சி மருந்துகள் தயார் செய்து பாதுகாப்புக்கு வேண்டிய முன் நடவடிக்கையை சர்க்கார் எடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இவ்விஷயங்களில் அரசாங்கம் போதிய கவனம் செலுத்திக்கொண்டுதான் இருக்கிறது.

SRI C. NATARAJA ODAYAR : இப்போது, பயிர்களைப் பீடிக்கும் பூச்சிகளைக் கொல்லும் மருந்துகள் கண்டிபிடிக்கப்பட்டு, அவை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியானுலும், அவைகளை எவ்வாறு உபயோகிப்பது என்பது விவசாயிகளுக்குச் சரியாகத் தெரிவிக்கப்பாத காரணத்தால், அவை சரிவரப் பயன்படுத்தப்படாததுடன் மட்டுமன்றி, அஜாக்கிரதை காரணமாக அவைகளால் விவசாயிகள் பாதிக்கப்படுகிருர்கள். உதாரணமாக, பூச்சி மருந்தை பயிர்களுக்குத் தெளித்த ஒரு விவசாயி கையை சரியாக அலம்பாமல் உணவு உட்கொண்டதால் இறந்தார் என்ற செய்தியைப் பத்திரிகைகளில் பார்த்தேன். எனவே, பூச்சி மருந்துகளை எவ்வாறு உபயோகிப்பது என்பதை, அறிக்கைகள் மூலமாகவும் விளம்பரங்கள் மூலமாகவும் விவசாயிகளுக்குத் தெரிவிக்க ஏற்பாடு செய்ய அரசாங்கத்தார் முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், தேசீய அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபட்டுள்ள கிராம சேவகர்களும் இதர உத்தியோகஸ்தர்களும், பூச்சி மருந்துகளை எவ்வாறு உபயோகிப்பது என்பதை, அவ்வப்போது விவசாயிகளுக்குத் தெரிவித்துக் கொண்டுதான் இருக்கிருர்கள்.

SRI M. K. SOMASUNDARAM : பயிர்கள் பூச்சிகளால் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று குடியானவர்கள் சொன்ன பிறகு அதிகாரிகள் அவர்களுக்கு பூச்சி மருந்துகளை வினியோகிக்கிருர்களா அல்லது அதிகாரிகளே ஆங்காங்கே சென்று எங்கெங்கே பயிர்கள் பூச்சிகளால் பீடிக்கப்பட்டிருக்கின்றன என்று நேரிடையாகப் பார்த்து, அங்கெல்லாம் விவசாயிகளுக்கு தகுந்த பூச்சி மருந்துகளை வினியோகிக்கிருர்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதிகாரிகளே நேரில் சென்று பயிர்களைப் பார்த்து பூச்சி மருந்துகளை வினியோகிப்பார்கள் என்று எதிர் பார்ப்பதற்கில்லை. அதிகாரிகள் அவ்வாறு பணியாற்றினுலும், விவசாயிகளும் இந்த விஷயத்தில் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். விவசாயிகள் அக்கறை எடுத்துக்கொண்டால் அதிகாரிகளும் அவர்களுடன் தொடர்புகொண்டு உதவுவார்கள்.

[29th September 1958

Broadcasting of Madras State News items

*619 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) (i) சென்னை அரசாங்க செய்தித்துறை மூலம் வெளியாகும் பத்திரிகைக் குறிப்புகள், (ii) சென்னை ராஜ்யம் சம்பந்தமாக நிர்ணயிக்கப்பட்ட பேச்சுகள், (iii) சென்னை ராஜ்யத்தின் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றத்தைப் பற்றிய பேச்சுகள் போன்ற சென்னை மாநில செய்திகளை ஒலிப்பரப்புவதற்காக 1958-ம் வருஷத்திலே அகில இந்திய ரேடியோவுக்கு அனுப்பப்பட்ட ரிபோர்ட் விவரங்கள் யாவை ?

(ஆ) இச் செய்திகளில் 1958-ம் வருஷம் ஜூலை மாதக் கடைசி வரைக்கும் எத்தனை செய்திகள் ஒலிப்பரப்பட்டிருக்கின்றன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சென்னை அரசாங்க செய்தித் துறை மூலம் வெளியாகும் எல்லா அறிக்கைகளும் பத்திரிகைக் குறிப்புகளும் வானொலி நிலையத்தாருக்கு அனுப்பப்படுகின்றன. அச் செய்திகளை வானொலி நிலயத்தினரும் செய்தி ஒலிபரப்புகளிலும், பிராந்தியச் செய்திகளிலும், உள்ளூர் அறிவிப்புகளிலும் தக்கபடி பயன்படுத்துகின்றனர். கனம் அங்கத்தினர் கேட்பது போல், இவற்றைக் கணக்கிட்டு, எண்ணிக்கையை குறிப்பிடுவது [சாத்தியமில்லை ; அதில் பலனுமில்லை. வானொலிப் பேச்சுக்களைப்] பொறுத்தவரை, " ராஜ்ய அபிவிருத்தித் திட்டங்கள் " என்ற பேச்சு வரிசை நிகழ்ச்சிகள், அரசாங்க செய்தித் துறையைக் கலந்து, ஏற்பாடு செய்யப்படுகின்றன.

SRI A. V. P. ASAITHAMBI : அவ்வப்போது, இந்த நாட்டில் இருக்கும் ஒவ்வொரு கட்சியும் சொல்லும் விஷயங்களை செய்தித் துறையின் மூலம் திரட்டி, மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி, வானொலியில் ஒலிபரப்ப இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ? அவ்வாறு செய்வது, இந்த நாட்டு மக்களின் அறிவு வளமடைவதற்கு ஏதுவாக இருக்குமே எனவே அரசாங்கம் அவ்வாறு செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கட்சிகள் கூறும் விஷயங்களில் சில மக்களின் அறிவு வளர்ச்சிக்கு அடிகோலுபவையாக இருக்கக்கூடும் ; அவைகளில் சில மக்களை பின்னுக்கு இழுத்துச் செல்லுபவையாகவும் இருக்கக்கூடும். ஆகையால் கனம் அங்கத்தினரின் யோசனையை அரசாங்கத்தார் ஒரு கொள்கையாக ஏற்றுக்கொள்ள முடியாது.

Ayyamppulli and Vyapuri tanks

*620 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : (on behalf of Sri P. S. K. LAKSHMIPATHI RAJ) : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

பழனி கஸ்பாவில் இருக்கும் அய்யம்புள்ளிகுளம், வையாபுரிக்குளம் போன்றவைகளை மராமத்துச் செய்ய உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir. The works have been sanctioned and they are in progress.

Tractors for the use of ryots

*621 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the amounts provided in 1958–59 for the purchase of tractors for the ryots have been disbursed; and

(*b*) to whom the amounts were disbursed, districtwise?

29th September 1958]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The amounts are yet to be disbursed and it is likely that the entire amounts will be disbursed before 31st March 1959.

(b) Does not arise.

SRI V. K. KOTHANDARAMAN : விவசாய இலாகாவில் போதிய அளவில் டிராக்டர்கள் இல்லாததால், பல விவசாயிகள் தனிப்பட்டவர்களுக்கு பணம் கொடுத்து அவர்களுடைய டிராக்டர்களை வாங்கி உபயோகிக்கிறார்கள். அப்படி தனிப்பட்டவர்களிடமிருந்து டிராக்டர்களை அவர்கள் வாடகைக்கு வாங்கும்போது அதிகக் கட்டணம் கொடுக்க வேண்டியிருக்கிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அப்படியானால், விவசாயிகளுக்கு குறைந்த கட்டணத்தில் டிராக்டர்கள் வாடகைக்குக் கிடைப்பதற்கு வகை செய்வதற்காக, விவசாய இலாகாவில் டிராக்டர்களை அதிகரிக்க சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : டிராக்டர்களை விவசாயிகளுக்கு வாடகைக்குக் கொடுக்கும் திட்டம் மாற்றியமைக்கப்படுவதற்காகப் பரிசீலிக்கப்பட்டுவருகிறது என்று நான் ஏற்கனவே சொன்னேன். விவசாயிகளுக்கு டிராக்டர் வாங்கிக் கொள்வதற்குக் கடன் கொடுப்பதே சிறந்த முறையாகத் தோன்றுகிறது. சர்க்காரே டிராக்டர்களை வாங்கி வைத்துக்கொண்டு விவசாயிகளுக்கு உபயோகத்திற்குக் கொடுத்துவந்தால், அவை கெட்டுப் போகின்றன. எனவே, விவசாயிகள் தங்கள் சொந்தப் பொறுப்பில் டிராக்டர்களை வாங்கிக்கொள்வதை ஆதரிக்க வேண்டும் என்பதுதான் சர்க்காரின் எண்ணம்.

Muniyappa Gowunder Motor Service

* 622 *Q.*—SRI N. MARUDACHALAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether a complaint was lodged by the Coimbatore District Motor Workers' Union with the Regional Transport Officer, Coimbatore, regarding the exorbitant charges collected by the B. Muniappa Gowunder Motor Service;

(b) if so, the action taken thereon; and

(c) the excess trips run by the said service during February and March 1958?

THE HON. SRI V. RAMAIAH : (a) No, Sir.

(b) Does not arise.

(c) 244 (This includes also the trips performed as contract carriages in various routes.)

SRI N. MARUDACHALAM : பஸ் முதலாளிகள் பல பிரயாணிகளுக்குக் கொடுக்கும் டிக்கெட்டுகள் ஒருவிதமாக இருக்கின்றன. அதாவது, வருமான வரியிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக—அரசாங்கத்தை ஏமாற்றுவதற்காக—அவர்கள் பிரயாணிகளுக்கு ஒரு விதமான டிக்கெட்டுகளைக் கொடுக்கிறார்கள். ஆகையால் அவர்களுடைய பஸ் டிக்கெட்டுகளில் அரசாங்க முத்திரையைப் போடுவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI V. RAMAIAH : கனம் அங்கத்தினர் கூறியது போன்ற புகாரை, இதுவரையிலும் நான் கேள்விப்பட்டதில்லை ; யாரும் கேள்விப்பட்டிருக்க முடியாது. அந்த மாதிரியான காரியங்கள் நடந்தால், அதை எனக்கு தனிப்பட்ட முறையில் எழுத்து மூலம் தெரிவித்தால் அதை கவனிக்கிறேன்.

[29th September 1958

Minimum wages for Motor Transport employees

* 623 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any bus owners have not implemented the Minimum Wages (Madras) Rules, 1953, in the South Arcot district; and

(*b*) what action the Government propose to take against them?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The minimum rates of wages fixed for the employment in public motor transport are being paid by the employers in the South Arcot district. The contraventions generally noticed in most of the public motor transport services, relate to non-maintenance of registers or failure to display notices.

(*b*) Whenever such contraventions are noticed, inspection orders are issued with a view to taking up suitable action against the persistent defaulters.

9–50 a.m. SRI T. S. RAMASWAMY PILLAI : Sir, may I know whether wages are being paid according to the Minimum Wages Act in the Government Transport itself?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, this question must be put to the Hon. Minister concerned.

SRI K. B. S. MANI : கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பாக தொழில் அமைச்சர் அவர்களின் தலைமையில் தஞ்சை ஜில்லா பட்டுக் கோட்டையில், பஸ், லாரி தொழிலாளர்கள் மாநாடு நடைபெற்று பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதில், அவர்களின் பிள்ளை களுக்கு படிப்பு வசதிகள், மற்றபடி அவர்களின் குடும்பத்தில் உள்ளவர்கள் சிறு சிறு கைத்தொழில்கள் செய்ய உதவி செய்வது போன்ற தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். அது, சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது பரிசீலிக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது வேறு விஷயம். தனி கேள்வி வேண்டும்.

SRI A. GOVINDASAMY : தென் ஆற்காடு ஜில்லாவில் ஒரு சில பஸ் முதலாளிகள் குறைந்த சம்பளம் கொடுத்து விட்டு அதிகப்படி யான சம்பளம் வாங்கியதாக ஸ்டாம்பில் கையொப்பம் இடும்படி தொழி லாளர்களை வற்புறுத்துவதால் அடிக்கடி தகராறுகள் வருவது அரசாங் கத்திற்கு தெரியுமா ? அதைத் தடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அங்கத்தினர் அவர்கள் அதைப்பற்றிய விவரங்கள் எழுதியனுப்பினால் கவனிக்கலாம்.

Price of foodgrains

* 624 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) உணவுப் பண்டங்கள், குறிப்பாக நெல் விலை நாளுக்கு நாள் ஏறிக்கொண்டிருப்பதைத் தடுக்க அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது ?

29th September 1958]

(ஆ) இந்த மாநிலத்தில் தேவை போக மிகுதியை வெளி மாகாணத்திற்கு ஏற்றுமதி செய்யும் வகையில் ஏதேனும் ஏற்பாடு செய்திருக்கிறதா ? அப்படியானால், அதன் விபரம் என்ன ?

(இ) இம்மாநிலத்தில் உணவு சம்பந்தமாய் பற்றுக் குறை ஏதேனும் உண்டா ? அப்படியானால், அதை நிவர்த்திக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Government are carefully watching the price trends of foodgrains and are constantly reviewing the position. The months of July and August are lean months; hence there has as usual been an upward trend in prices. Further, the prices of foodgrains have gone up by Rs. 3 to 4 per maund in North India and there has been a sympathetic upward trend in the prices in the Southern States also.

(*b*) Under the Rice (Southern Zone) Movement Control Order promulgated by the Government of India, the States of Andhra Pradesh, Madras, Mysore, Kerala and Pondicherry have been comprised into one zone and there can be no restriction in the movement of rice within the zone. Naturally there is movement of rice from this State to the neighbouring States which are deficit.

(*c*) The State was slightly deficit in foodgrains at the time of formation of Andhra. However now the Madras State is self-sufficient. Under the Second Five-Year Plan, it is proposed to increase food production in this State by 12 lakhs tons.

SRI A. VEDARATHNAM : சென்னை ராஜ்ய உணவு சம்பந்தப்பட்டவரையில், அது சுயதேவை பூர்த்தியுள்ளதாகயிருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இங்கிருக்கிற தான்யங்கள் எல்லாம் இப்பொழுது மலையாளத்திற்கு அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகிற காரணத்தினால் சுயதேவை பூர்த்தியுள்ளதாக இருந்தும்கூட இங்கு பற்றுக்குறை ஏற்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைத் தவிர்க்க, இங்குள்ள தான்யத்தை அனுப்பி வெளியே வாங்கும் நிலை ஏற்படாதிருக்க அரசாங்கம் என்ன முயற்சிகள் எடுத்துக்கொள்ளும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஓரளவு கேரள நாட்டிற்கு நம் ராஜ்யத்திலுள்ள தான்யம் விற்கப்பட்டாலும், நம் சுயதேவை பாதிக்கப்படாது என்ற நிலைதான் இன்றையதினம் இருக்கிறது. ஆனால் அளவிற்கு மேல் ஏற்றுமதி செய்யப்பட்டால் அதைத் தவிர்க்க அரசாங்கம் கவனம் செலுத்தும். இம்மாதிரி கவனம் இதுவரையிலும் செலுத்திக் கொண்டிருக்கிறது.

SRI N. K. PALANISAMI : நம் மாகாணத்தில் போதுமான விளைச்சலிருக்கிறது. ஆனால் விலை குறையவில்லை. அதற்குக் காரணம் பதுக்கல் என்பதை சர்க்கார் ஒத்துக்கொள்கிறதா ? அப்படியானால் "எஸென்ஷியல் கம்மாடிட்டீஸ் சட்டப்படி" நடவடிக்கைகள் எடுக்கக் கூடாதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் பதுக்கல் ஒன்றும் அதிகமாகயில்லை என்பது தான் அரசாங்கம் தெரிந்து கொண்டது.

SRI A. VEDARATHNAM : குறுவை மகசூல் இப்பொழுது தான் தஞ்சை ஜில்லாவில் ஆரம்பித்திருக்கிறது. ஆரம்பத்திலேயே அது, மூட்டை ஒன்றுக்கு 20 ரூபாய்க்கு அதிகம் விற்கிறது. எந்தக் காலத்திலும் இந்த விலை விற்றது கிடையாது. அப்படியிருக்கும்போது, அங்கு பற்றுக்

[29th September 1958

குறை நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது தான் இதன் அறிகுறி. எனவே இதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நேற்று நான் தஞ்சை ஜில்லாவில் சில கிராமங்களில் இருந்தேன். நான் கேள்விப்பட்டது, இப் பொழுதுதான் குறுவை அறுவடை ஆரம்பித்திருக்கிறது. இன்னும் ஒரு வாரத்தில் விலை குறையும் என்று எதிர்பார்க்கிறார்கள். விலையைக் குறைக்க கண்ட்ரோல் இல்லாமல் எந்த வகையில் கவனம் செலுத்தவேண்டுமோ அப்படி செலுத்திக் கொண்டிருக்கிறோம். சமீபத்தில், டெல்லியில் உள்ள உணவு விவசாய அமைச்சர் அவர்களிடம் இதைப்பற்றி சில நடவடிக்கைகள் எடுக்கும்படி பேசிக் கொண்டிருந்தேன்.

SRI R. SRINIVASA IYER : தஞ்சை ஜில்லாவில் விளையும் குறுவை நெல்லை கூடுதலாக தஞ்சை ஜில்லா வாசிகளோ, இந்த ஸ்டேட் வாசிகளோ உபயோகப்படுத்துவார்களா ? அது பெருவாரியாக கேரளத் திற்கு மட்டுந்தான் போய் அங்குள்ளவர்கள்தான் அதை வாங்கி உப யோகப்படுத்துகிறார்கள் என்பது அரசாங்கத்திற்கு தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எனக்குள்ள தகவல், குறுவை தான்யம் தஞ்சாவூர் ஜில்லாவில் அதிகம் உபயோகப்படுத்தப் படவில்லை என்பதுதான்.

SRI S. NAGARAJA MONIGAR : இந்த விலையேற்றம், வியாபாரிகள் ஒன்றுக்கு இரண்டாய் விற்பதினால் ஏற்படுகிறதா ? அல்லது உற்பத்தி யாளர்கள் அதிக விலைக்கு விற்பதால் ஏற்படுகிறதா ? பின்னால் சொன்ன தானால் அவர்கள் குறைந்த விலைக்கு விற்றால் அது சர்க்காருக்கு உதவியாக இருக்குமல்லவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நேற்று இதைப்பற்றி விசாரித்தேன். இப்பொழுதுதான் அறுவடையாகிறது. இந்த தானியங்களின் அதிக விலை அவ்வளவும் உற்பத்தியாளர்க்குத்தான் போகிறதுஎன்று தெரிந்து கொண்டேன்.

SRI N. K. PALANISAMI : விலைவாசி அதிகமாக இருப்ப தால் அதைக் குறைக்க வேண்டியதைப்பற்றி டெல்லி மந்திரியிடம் பேசிய தாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னென்ன பேசினார்கள், என்னென்ன தீர்மானங்களுக்கு வந்தார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போழுது இதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கும்போது இதைக் குறிப்பிடுவதினால் ஒரு பிரயோஜனமும் வராது.

SRI T. KARIA GOUNDER : உணவுப் பொருள்களின் விலை வாசி அதிகம் என்று அநேகம் மெம்பர்கள் சொன்னார்கள். மற்ற பொருள் களின் விலைவாசியும் உயர்ந்துபோவதை அரசாங்கம் கவனிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விலைவாசிகள் பொதுவாக அதிகமாவதை குறைக்கவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் கவலை.

Power supply by the Andhra State

* 625 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether any agreement has been reached between this State and the Andhra State regarding supply of electric energy to make up its shortage in this State; and

(*b*) if so the terms thereof?

29th September 1958]

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) Pending finalisation of an agreement between this Government and the Andhra Pradesh Government regarding the terms on which the power supplied to this Government should be charged, this Government have been availing themselves of continuous supply up to 2000 KVA from the Andhra Pradesh Grid with effect from the 7th April 1958. It is also likely that an additional amount up to 8000 KVA will be supplied by the Andhra Pradesh Government when certain auxiliary works now in progress are completed.

SRI N. K. PALANISAMI : இம்மாதிரி நமக்கு கரெண்ட் ஆந்திர பிரதேசம் தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருக்குமா ? இது, குறுகியகால ஏற்பாடா ? அப்படியானுல் நமது ராஜ்யத்தில் உற்பத்தியாகும் கரண்டின் சார்ஜை விட குறைவாக கிடைக்குமா ?

THE HON. SRI V. RAMAIAH : நம் மாகாணத்திற்கு இப்பொழுது ஆந்திராவில் இருந்தும், கேரள பிரதேசத்தில் இருந்தும் கரெண்ட் வாங்கிக் கொண்டிருக்கிறோம். நமக்கு எதுவரை தேவையோ அதுவரை வாங்கப்படும்.

Municipal Bus Stand, Gobichettipalayam

* 626 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) the names of the private companies whose buses start from the Municipal Bus Stand in Gobichettipalayam, Coimbatore district; and

(b) the names of the private companies whose buses start from their own bus stands?

THE HON. SRI V. RAMAIAH : (a) (1) B.L.S. Motor Service, Coimbatore.

(2) Sowdambigai Motor Service (Private) Ltd., Dharapuram.

(3) Mettupalayam-Coonoor Service (Private), Ltd., Mettupalayam.

(4) Udumalpet Service, Coimbatore.

(5) Gobi Service, Coimbatore.

(6) Dharapuram Service, Coimbatore.

(7) Erode Service, Coimbatore.

(8) Gobald Motor Service (Private), Ltd. (Mettupalayam).

(9) Coimbatore-Salem Transports (Private), Ltd., Erode.

(b) Nil.

SRI P. G. MANICKAM : வி.எஸ்.டி. கம்பனி பஸ்கள் அந்த நிலயத்திற்கு வருவதில்லே என்று புகார் செய்யப்படுகிறது உண்மையா ?

THE HON. SRI V. RAMAIAH : எனக்குள்ள தகவல், அந்த நகரத்தில் வரக்கூடிய அவ்வளவு பஸ்களும் அங்கு வருகிறது என்பதுதான்.

SRI A. V. P. ASAITHAMBI : பஸ்களுக்கு நிலயங்கள் கட்டியிருப்பதுபோல் லாரிகளுக்கும் பலயிடங்களிலும் நிலயங்கள் கட்டியிருக்கிருர்கள். குறிப்பாக சென்னே கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, அண்ணுப்

பிள்ளை தெரு இவைகளில் லாரிகள் நின்று போக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தும் கூட, அங்கு லாரிகள் போகாது தெருவை அடைத்துக்கொண்டிருக்கிறது. அது தடுக்கப் படுமா ?

MR. SPEAKER : தனி கேள்வி போடுங்கள்.

Kilaithangiar Scheme in Tiruthuraipoondi taluk

* 627 *Q.*—SRI A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Kilaithangiar scheme in Tiruthuraipoondi taluk, Tanjore district, has been commenced; and

(*b*) if so, when it will be completed?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) Construction of an outlet at 8/7 in the right bank of Marakkakorayar with six rows of pipes fitted with screw gearing arrangements and extension of the barred of the Idaiyur drainage sluice at 3/7 in the right bank of Kilaithangiar have already been completed in July 1957. Conversion of the existing tail dam at mile 4/2 of Theekananguruviyar into a regulator is in progress and this item of work is likely to be completed by April 1959.

SRI A. VEDARATHNAM : இந்தத் திட்டத்திற்காக அரசாங்கம் எவ்வளவு தொகை சாங்க்ஷன் செய்திருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதற்கு சாங்க்ஷன் செய்யப்பட்ட தொகை சொற்பந்தான். 18,500 ரூபாய்தான்.

Bus permits

10 a.m. * 628 *Q.*—SRI T. SAMPATH : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the High Court made any observations in a recent judgment regarding the marking system followed by the Regional Transport Authority in granting bus permits; and

(*b*) whether the Government have any intention to modify the system of awarding marks?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir.

(*b*) The instructions relating to the grant of permits for stage carriages have been modified. A copy [a] of it is laid on the table of the House.

SRI T. SAMPATH : Sir, is the Hon. Minister aware of the fact that even in the amended Government Order there are conditions like workshop facilities, maintenance facilities, and award of marks for sector qualification. These conditions are not conducive to encourage new entrants. Will these conditions be relaxed in the case of new entrants?

THE HON. SRI V. RAMAIAH : In the Government Order we have specifically stated that new entrants should be encouraged for certain routes. It is with this view we have examined the various difficulties that will arise. We feel that new entrants will take these routes.

Printed as Appendix I on pages 1012–1013 infra.

29th September 1958]

MR. SPEAKER : It is now 10 o'clock. There are three more questions. We can take five more minutes and dispose them of.

SRI A. GOVINDASAMY : ஸார், ரீஜனல் ட்ரான்ஸ்போர்ட் அதி காரியால் தென்னாற்காடு ஜில்லாவில் பல பஸ் பெர்மிட்டுகள் ரத்துசெய்யப் பட்டிருக்கின்றன. அவ்விதம் ரத்துச்செய்யப்பட்டிருக்கும் பஸ் பெர்மிட்டு கள் எத்தனை என்பதை தெரிவிக்க முடியுமா ?

THE HON. SRI V. RAMAIAH : இதற்கு தனிக்கேள்வி வேண்டும்.

SRI K. R. NALLASIVAM : ஸார், சிறு சிறு பஸ் சர்வீஸ் நடத்தக் கூடிய முதலாளிகள் எல்லோரும் சேர்ந்து ஒரு தொழிற்சாலையை ஆரம் பித்தால் அதற்கு பெர்மிட்டு கொடுப்பதற்கு அரசாங்கம் யோசனை செய்யுமா ?

THE HON. SRI V. RAMAIAH : கனம் அங்கத்தினர் அவர்கள் சிறிய பஸ் முதலாளிகளுக்கு கூடுதலாக வசதி செய்து கொடுக்க முடியுமா என்ற முறையில் கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதற்கு தகுந்த முறையில்தான் இந்த ஜி.ஒ. அமைக்கப்பட்டிருக்கிறது.

SRI M. KALYANASUNDARAM : ஸார், இந்த புதிய ஜி.ஒ.-வில் 75 மைலுக்கு அப்பால் இருக்கக்கூடிய ரூட்டுகளுக்கு பெரிய ப்ளீட் ஓனர்களுக்குத்தான் பெர்மிட் கொடுக்க முடியும் என்றிருக்கிறது. இதற்கு காரணம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : பெரிய பஸ் முதலாளிகளுக்குத் தான் கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு கிடையாது. யார் யார் திறமையாக நடத்துகிறார்களோ அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டும் என்று தான் அரசாங்கம் கருதியிருக்கிறது.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : ஸார், புதியதாக ஏற்படுத் தப்பட்டிருக்கும் ஜி.ஒ.-வில் 15 மைல்களுக்கு உட்பட்டு இருக்கின்ற ரூட்டுகளுக்கு தான் புதிதாக விண்ணப்பித்தவர்களுக்கு கொடுக்கப்படும் என்றிருக்கிறது. அதை நீக்கிவிட்டு எந்த ரூட்டிலும் பஸ் சர்வீஸ் நடத்துவதற்கு விண்ணப் பித்துக் கொள்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI V. RAMAIAH : இப்போதிருக்கக்கூடிய ஜி.ஓ.வில் யார் எல்லாம் விண்ணப்பித்துக்கொள்ளலாம் என்பது அல்ல. இவ்வி தம் விண்ணப்பித்துக்கொள்வதில் சில நிபந்தனைகள், விதிகள் இருக்கின் றன. அவைகளை யார் பூர்த்தி செய்கிறார்களோ அவர்களுக்கு கொடுப்ப தற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

SRI T. KARIA GOUNDER : தலைவர் அவர்களே, கூட்டுறவு முறை யில் பஸ்களை நடத்துவதற்கு முன்வருவார்களேயானால் அவர்களுக்கு உதவி செய்ய சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI V. RAMAIAH : இதில் அதிகமான கவனம் செலுத்தப் பட்டுதான் வருகிறது,

Revenue of the State Transport Department

* 629 *Q.*—SRI T. S. RAMASWAMI PILLAI : Will the Hon. the Minister for Electricity be pleased to state the earnings per mile, cost per mile and the yearly net profit in the Transport Department for the last three years?

[29th September 1958

THE HON. SRI V. RAMAIAH : The particulars are as follows in respect of the Madras Branch of the Madras State Transport Department :—

		1955–56.	1956–57,	1957–58.
		NP.	NP.	NP.
(a) Earning per mile	..	113	120	124
(b) Cost per mile ..	..	98	100	111
(c) Net profit ...		20,77,425	26,[illegible],334	37,90,700

The figures for 1957–58 are provisional and subject to audit.

SRI T. S. RAMASWAMY PILLAI : Sir, may I know the reasons for the rise in cost per mile and also the reason for the decline in profit?

THE HON. SRI V. RAMAIAH : The higher cost of maintenance and the addition of new vehicles are the reasons for the decline in profit.

Jeeps enquiry

* 630 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state the steps taken to implement the recommendations of the Special Officer for Jeeps Enquiry?

THE HON. SRI V. RAMAIAH : The Special Officer for Jeeps Enquiry made five recommendations. His recommendation relating to the constitution of *ad hoc* committees to examine the case for retrenchment of vehicles department by department has been implemented. Action is being taken on the recommendations of those committees. The other recommendations of the Special Officer are still under examinations in consultation with the Heads of Departments concerned and Departments of Secretariat.

Sinking of and repairs to irrigation wells under the Minor Irrigation Scheme

* 28 *S.N. Q.*—SRI A. R. SUBBIAH MUDALIYAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether at the Food Ministers' Conference held at Bangalore on the 14th and 15th of November 1957, a proposal for the grant of subsidy under the Minor Irrigation Scheme for the sinking of new irrigation wells and repairs to old irrigatino wells was considered; and

(*b*) if so, how and when is it proposed to be implemented by the Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise. I may, however, inform the hon. Member that the question of reviving the Well Subsidy Scheme is engaging the attention of Government.

SRI A. R. SUBBIAH MUDALIYAR : சென்ற வருஷம் சில பகுதிகளில் வெல் ஸப்ஸிடி ஸ்கீம் அமல் நடத்தப்பட்டது. மானியத் துகை வராததால் பரிசீலனை செய்யப்பட்ட பல கிணறுகளுக்கு துகை கொடுக்கப்படவில்லை. ஆகவே இந்த வருஷமாவது அப்படிப்பட்ட கிணறுகளுக்கு மான்யத்தை கொடுப்பதற்கு சர்க்கார் முன் வருமா ?

29th September 1958]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இவ்விதம் சென்ற வருஷத்தில் வெல் ஸப்ஸிடி ஸ்கீம் ஒன்றும் இருக்கவில்லை. இதில் பழைய திட்டத்தின்படி கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் கிணறுகளை வெட்டுவதற்குள்ள திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

UNSTARRED QUESTIONS.

Length of roads under different surfaces

1 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் பொது மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை ராஜ்யத்தில் ஜில்லாவாரியாக விஸ்தீர்ணம் எத்தனை மைல் ?

(ஆ) ஜில்லாவாரியாக ரோடுகள் எத்தனை மைல் ?

(இ) அதில் (1) சிமின்ட் ரோடு, (2) தார் ரோடு, (3) கல் பாத்தல் ரோடு, (4) மண் ரோடு—எத்தனை மைல் ?

A.—The attention of the hon. Member is invited to the paper[a] laid on the table of the House.

'We-Tamil' agitation

2 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government have any information that the Tamilians living abroad are badly hit because of the "We-Tamil" agitation started recently?

A.—No, Sir.

Admission in Colleges

3 *Q.*—SRI M. C. MUTHUKUMARASWAMY : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை மாகாணத்தில் நடப்பு ஆண்டில் அரசாங்கத்தாராலும், தனிப்பட்டோராலும் நடத்தப்பட்டுவரும் ஒவ்வொரு கல்லூரிகளிலும் சேர்வதற்காக எத்தனை மாணவ, மாணவிகள் மனுசெய்து கொண்டார்கள் ?

(ஆ) ஒவ்வொரு கல்லூரிகளிலும் வகுப்புவாரியாக சேர்க்கப்பட்ட மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை என்ன ?

(இ) இவர்களில் ஹரிஜன மாணவ, மாணவிகள் எத்தனை பேர் ?

A.—(*a*), (*b*) & (*c*) The time and labour involved in collecting the particulars for answering the question will not be commensurate with the public interest served.

Village Industries

4 *Q.*—SRI M. C. MUTHUKUMARASWAMY : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

தஞ்சை ஜில்லாவில் இதுவரை (up to date) தாலுகாவாரியாக எத்தனை இடங்களில் என்னென்ன கிராமக் கைத்தொழில்கள் (Village Industries) நடத்தப்படுகின்றன ?

A.—A statement[b] showing the names of departmental units started for the development of village industries in Tanjore district taluk-war, is placed on the table of the House.

[a] Printed as Appendix II on page 1014 infra.

[b] Printed as Appendix III on page 1015 infra.

[29th September 1958

Service Postage and Telegram charges

5 Q.—SRI M. P. SARATHI: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1956–57, 1957–58 ஆண்டுகளில் இந்த ராஜ்யத்தில் தபால், தந்தி இனங்களுக்கு மட்டும் (Service Postage and Telegram charges) எவ்வளவு ?

(ஆ) 1952–53 ஆண்டில் இந்த இனத்தில் ஆன செலவு என்ன ?

A.—Under the existing system of accounts the expenditure on Service Postage and Telegram charges relating to the various Departments of the Government is not booked under distinct detailed heads but is merged with the expenditure on 'contingencies'. It is not, therefore, easy to work out the actual expenditure on Service Postage and Telegram charges. On a rough estimate, the cost of Postage and Telegram charges will be about Rs. 50 lakhs per year and of Telephone charges about Rs. 10 lakhs per year.

Village maps

6 Q.—SRI M. P. SARATHI: கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

வட ஆற்காடு ஜில்லாவில் கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள் எந்த எந்த தாலூகா மேப்புகள், கிராம மேப்புகள் புதிப்பிக்கப்பட்டு, வரைந்து, அச்சிடப் பட்டுள்ளன ?

A.—1953–54 முதல் 1957–58 வரையுள்ள கடந்த ஐந்து ஆண்டுகளில் வட ஆற்காடு ஜில்லாவில், செங்கம் தாலூகாவில் மேப்பு மாத்திரம்தான் 1956–57-ல் புதுப்பித்து அச்சிடப்பட்டது. அந்த ஜில்லாவில் ஒரு கிராம மேப்பும் புதுப்பித்து அச்சிடப்படவில்லை.

Livestock Farms

7 Q.—SRI M. P. SARATHI: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

வட ஆற்காடு ஜில்லாவில் எந்த இடங்களில் "Livestock Farms" "Cattle-Breeding Societies". "Artificial Insemination Centres" உள்ளன ?

A.—There are no Livestock Farms in North Arcot district. There are two Cattle-Breeding Societies in the district, one at Bheemakulam and the other at Kalasapakkam. There is one Urban Artificial Insemination Centre at Vellore.

Drinking Water wells

8 Q.—SRIMATHI A. S. PONNAMMAL: கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தாலுகாவில், 1956–57-ம் ஆண்டிற்கு குடி தண்ணீர் விஷயமாக எத்தனை மனுக்கள் வந்திருந்தன ?

(ஆ) அதில் எத்தனை கிணறுகள் வேலைக்கு எடுக்கப்பட்டிருந்தது ; முடிந்த கிணறுகள் எத்தனை ?

(இ) 1957–58-ம் ஆண்டிற்கு குடிதண்ணீர் விஷயமாக எத்தனை மனுக்கள் வந்திருக்கின்றன ?

(ஈ) இதுவரை வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட கிணறுகள் எத்தனை ?

(உ) பாக்கி எடுக்காமல் இருப்பதற்கு காரணம் என்ன ?

29th September 1958]

A.—(*a*) Fifty-two petitions were received in 1956–57.

(*b*) Fifty-three well works were taken up and thirty-one well works were completed in the year.

(*c*) Fifty-eight petitions were received in 1957–58.

(*d*) Forty-five well works were taken up.

(*e*) Does not arise as all works have been taken up for execution.

Government poramboke lands in Bhavani taluk

9 *Q.*—Sri P. G. MANICKAM: கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் ஜில்லா, பவானி தாலூகாவிலே விவசாயத்துக்கு லாயக்காகவுள்ள கவர்ன்மெண்டு புறம்போக்கு நிலங்கள் எந்தெந்த இடங்களில் எத்தனை ஏக்கராக்கள் இருக்கின்றன?

(ஆ) 1957–58-ம் வருஷங்களிலே, இந்நிலங்களிலே, எந்தெந்த இடங்களில் இருக்கும் நிலங்கள், எத்தனை ஏகரா நிலங்கள் நிலமில்லாத ஏழைகளுக்கும், ஹரிஜனங்களுக்கும் பட்டா செய்து கொடுக்கப்பட்டன?

(இ) இவர்களுள் ஹரிஜனங்கள் எத்தனை பேர்?

A.—The Government have no information. The time and labour involved in collecting the information will not be commensurate with the advantages to be gained.

Government poramboke lands in Gobichettipalayam taluk

10 Q.—Sri P. G. MANICKAM: கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கோயமுத்தூர் ஜில்லா, கோபிசெட்டிபாளையம் தாலூகாவிலே விவசாயத்துக்கு லாயக்காகவுள்ள கவர்ன்மெண்டு புறம்போக்கு நிலங்கள் எந்தெந்த இடங்களிலே எத்தனை ஏகராக்கள் இருக்கின்றன?

(ஆ) 1957, 1958-ம் வருஷங்களிலே, இந்நிலங்களிலே, எந்தெந்த இடங்களில், எத்தனை ஏகரா நிலங்கள் நிலமில்லாத ஏழைகளுக்கும், ஹரிஜனங்களுக்கும் பட்டா செய்து கொடுக்கப்பட்டன?

(இ) இவர்களுள் ஹரிஜனங்கள் எத்தனை பேர்?

A.—The Government have no information. The time and labour involved in collecting the information will not be commensurate with the advantages to be gained.

Export of Beedies

11 *Q.*—Sri P. G. MANICKAM: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

1957, 1958-ம் வருஷங்களிலே ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் எந்தெந்த அயல்நாடுகளுக்கும், இந்தியாவிலுள்ள மற்ற ராஜ்யங்களுக்கும் எத்தனை ரூபாய் மதிப்புள்ள பீடிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன?

A.—The particulars relating to the value of beedies exported from several Ports in Madras State to foreign countries during 1957–58 are as follows :—

Value of beedies exported from this State to foreign countries during 1957–58

Name of port.	*Ceylon.*	*Singapore.*	*Federation of Malaya.*
	RS	RS.	RS.
Madras	Nil.	2,28,792	49,976
Nagapattinam	7,01,878	4,83,105	73,705
Dhanushkodi	62,74,018	Nil.	Nil
Tuticorin	11,04,935	Nil.	Nil.
Total ..	80,80,831	7,11,897	1,23,681
	(Rupees eighty lakhs, eighty thousand, eight hundred and thirty-one only.)	(Rupees seven lakhs, eleven thousand, eight hundred and ninety-seven only).	(Rupees one lakh, twenty-three thousand, six hundred and eighty-one only).

District-wise particulars are not available. Similar information regarding the value of beedies exported from this State to other States in India by Sea and rail are also not available, as they are not recorded separately.

Cultivation of the lands under the Mettur West Bank Canal

12 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கோயமுத்தூர் ஜில்லா, பவானி தாலூகா, மேட்டூர் வலது கரைப் பாசன (**Mettur West Bank Canal**) ஆயக்கட்டுக்குச் சேர்ந்த **17,210** ஏக்கர் நிலங்களிலே இன்னும் **1,103** ஏக்கர் **51** செண்ட் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் கிடைக்கப்படாமல் இருப்பதற்கான காரணங்கள் யாவை ?

(ஆ) அதில் கண்ட 1,103 ஏக்கர் 51 செண்ட் நிலங்கள் எந்தெந்த கிராமங்களிலே இருக்கின்றது ?

A.—(*a*) & (*b*) Revised figures have been received from the Collector that, out of the total ayacut of 17,210 acres under the Mettur West Bank Canal, an extent of 14,106·49 acres has been brought under cultivation so far, and the extent remaining uncultivated is 3,103·51 acres. The extent left uncultivated during fasli 1367 falls in the following villages :—

1 Nerinjipet
2 Ariyagoundanur.
3 Ammapet.
4 Boothpadi.
5 Sidgampet.
6 Padavalkalvai.
7 Kadappanallur.
8 Kesarimangalam.
9 Kalbhavi.
10 Kurichi.
11 Poonachi.
12 Jambai.
13 Mylambadi.
14 Varadhanallur.
15 Sanyasipatti.
16 Talakulam.
17 Bhavani.
18 Andikulam.
19 Urachikottai.

The reason for the non-cultivation of this extent is reported to be due to non-reclamation of the lands by the ryots.

29th September 1958]

Lands for the Harijans of the Virudhachalam taluk

13 *Q.*—SRI P. VEDAMANICKAM : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தாலூக்காவிலுள்ள தரிசு நிலங்கள் எத்தனை ஏக்கர் ?

(ஆ) ஐந்து ஏக்கருக்கு மேல் பட்டா நிலமுள்ள மிராசிதார்கள் ஆக்ர மித்துள்ள தரிசு நிலங்கள் எத்தனை ஏக்கர் ?

(இ) 1957-ம் ஆண்டு செப்டெம்பர் மீ 1உக்கு பிறகு நிலமற்ற ஏழை களுக்கு பட்டா வழங்கிய தரிசு நிலங்கள் எத்தனை ஏக்கர் ?

(ஈ) ஐந்து ஏக்கருக்கு மேல் பட்டா நிலமுள்ள மிராசுதாரர்கள் ஆக்ர மித்துள்ள தரிசு நிலங்களிலிருந்து நிலமற்ற ஏழைகளுக்கு பட்டா வழங்கிய நிலங்கள் எத்தனை ஏக்கர் ?

(உ) 1957-ம் ஆண்டு செப்டெம்பர் மீ 1உக்கு பிறகு விருத்தாசலம் தாலூக்காவில் ஹரிஜனங்களுக்கு வழங்கிய பட்டாக்கள் எத்தனை ? நிலங்கள் எத்தனை ஏக்கர் ?

A.—The particulars are not available with the Government. The time and labour involved in collecting the particulars will not be commensurate with the advantages to be gained.

MR. SPEAKER : I have received notice of an adjournment motion from the Hon. the Leader of the Opposition. According to the rules, it must be given to me before the meeting starts. The Hon. the Leader of the Opposition gave it to me here after the commencement of to-day's sitting. How does he expect me to consider it here and now? I shall take it up to-morrow.

SRI A. VEDARATHNAM : ஸார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், கனம் மந்திரிகள் கொடுக்கின்ற பதில்கள் எல்லாம் ஆங்கிலத்தில் இருக்கின்றன. இதனால் ஆங்கிலம் தெரியாத அங்கத்தினர்களும், ஆங்கிலம் அரைகுறையாக தெரிந்தவர்களும் கஷ்டப்படுகின்றனர். மைசூர் முதலிய பிராந்தியங்களில் நடப்பதுபோல் கேள்விகள் முன்னதாகவே கொடுக்கப்படும்பொழுது அத னுடைய பதிலையும் அச்சிட்டுக்கொடுத்தால் அங்கத்தினர்களுக்கு உதவி யாக இருக்கும். அதிலில்லாமல் இருந்தாலும் உபகேள்விகளை கேட்கும் போது அதற்கு கொடுக்கப்படுகின்ற பதிலும் அங்கத்தினர்களின் பார்வைக் காக வருகிறது. அப்படி வரும்போது மூலகேள்வியினுடைய பதிலும் தெரிந்திருந்தால் அங்கத்தினர்களுக்கு சௌகரியமாக இருக்கும். ஆகவே இதற்கு ஒரு முறையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : இதைப்பற்றி கனம் மந்திரிகள் கவனிக்க வேண்டும். இதில் பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றுமில்லை.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I rise on point of order. Rule 35 says: Questions requiring long statements or statistics shall not be Starred.

இவ்விதம் குறுகிய பதில் கொடுக்கக்கூடிய கேள்விகளையும் "அன்ஸ் டார்டு" லிஸ்டில் சேர்த்திருப்பது முறைதானா என்பதை அறிய விரும்பு கிறேன்.

MR. SPEAKER : The decision as to whether a question should be starred or should not be starred under Rule 35 is entirely within the discretion of the Speaker. The hon. Member cannot question it.

[29th September 1958

SRI M. K. SOMASUNDARAM : Sir, I rise on a point of order. சட்டசபைக் கூட்டம் நடந்துகொண்டிருக்கும் இந்த சமயத்தில் குருவிகள் மேலே இருந்துகொண்டு அங்கத்தினர்களின் இருப்பிடத்தை அசுத்தம் செய்துகொண்டிருக்கின்றன. ஆகவே தலைவர் அவர்கள் ''எவிக்ஷன் நோட்டீஸ்'' கொடுத்து குருவிகளை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை கேட்க விரும்புகிறேன்.

[*Note.*—An asterisk(*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—CALLING ATTENTION TO THE DISCONTINUANCE OF THE SUPPLY OF UNIFORMS TO THE SANITARY WORKERS OF THE COIMBATORE MUNICIPALITY.

SRI N. MARUDACHALAM : கனம் சபாநாயகர் அவர்களே, கோவை நகர சபையில் இன்று 1,400 முனிசிபல் தொழிலாளிகள் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஏற்கெனவே அந்த நகரத்தி லுள்ள மக்களுடைய சுகாதாரத்திற்காக, தங்களுடைய உடல் நலத்தையும் பாராமல் மக்கள் அருவருக்கத் தகுந்த வேலைகளை எல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படி வேலை செய்துகொண்டு வரும் அந்த தொழிலாளிகளுக்கு எல்லா முனிசிபாலிட்டிகளிலும் கொடுக்கப்படுகின்ற துணிகள் சரியான விதத்தில் கொடுக்கப்படுவதில்லை. சென்னை மாகாணத் தில் பல முனிசிபாலிட்டிகளில் தமிழ் வருஷப்பிறப்பு தினத்தன்றும் காந்தி ஜயந்தி தினத்தன்றுமாக இரண்டு தவணைகளில் துணி கொடுத் துக்கொண்டிருந்தார்கள்.

சென்ற 1958-வருஷம் மார்ச்சு மாதம் 1-ந்தேதி கவுன்ஸில் கூட்டத் திலே பெருவாரியான காங்கிரஸ் கவுன்ஸிலர்கள் இந்தத் துணி கொடுக்கக் கூடாது என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்தார்கள். துணி கொடுக்கக் கூடாது என்ற தீர்மானம் மோசமானது—ஹரிஜனங்கள்தான் இன் றைக்கு வேலை செய்து வருகிறார்கள், அவர்களுக்குத் துணி கொடுக்கக் கூடாது என்று சொல்வது மோசமானது—என்று எதிர் கட்சிக் கவுன் ஸிலர்களெல்லாம் தீர்மானத்தை எதிர்த்து சபையைவிட்டு வெளியேறினார் கள். இதற்குக் காரணம் என்ன கூறுகிறார்கள் என்றால் அவர்கள் சங்கம் வைத்துக்கொண்டார்கள், கோரிக்கைகளை. . . .

10-10 a.m. THE HON. SRI C. SUBRAMANIAM : ஒரு நகர சபையில் நடந்த விஷயத்தைப்பற்றி, ஒரு நகர சபைக்கு பூரண அதிகாரம் இருக்கும் விஷ யத்தைப் பற்றி அங்கு தீர்மானம் கொண்டுவந்தார்கள், வெளியேறினார் கள் என்றெல்லாம் பேசுவது சரியல்ல. துணி கொடுக்கவேண்டும் என்று சொல்லலாமே தவிர, முனிசிபல் விவகாரத்தைப் பற்றி இங்கு பேசுவது சரியல்ல.

MR. SPEAKER : நோட்டீஸ் கொடுத்திருப்பதுகூட

" The decision of the Municipal Council of Coimbatore to discontinue the free supply of uniforms to the sanitary workers employed under them."

என்பதுதான். ஆகையால்தான் இதை நான் சபை முன் வைத்தேன்.

SRI M. KALYANASUNDARAM : The hon. Member is explaining how the decision was taken by the Municipal Council. He has to explain how the decision was taken to impress on this House how that decision was unjust.

MR. SPEAKER : It is not necessary. I rule that no reference to the Coimbatore Municipal Council should be made.

THE HON. SRI C. SUBRAMANIAM : முனிஸிபாலிடியைப்பற்றி கனம் அங்கத்தினர் ஒன்றும் சொல்லவேண்டாம். துணி கொடுக்கவேண்டுமென் பதைப் பற்றி மட்டும் பேசவேண்டும்.

29th September 1958]

SRI N. MARUDACHALAM : அதாவது ஹரிஜனங்களுக்குச் சேவை செய்கிறேன் என்று காங்கிரஸ் மெம்பர்கள் ஹரிஜனங்களுக்கு விரோதமான செய்கைகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

SRI N. R. THIAGARAJAN : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் . . .

MR. SPEAKER : முடிப்பதற்கு முன்பு எப்படி பாயின்ட் ஆப் ஆர்டர் எழும் ?

SRI N. R. THIAGARAJAN : நிதி அமைச்சர் அவர்கள் கூறிய பிறகும், சபாநாயகர் அவர்கள் சொல்லிய பிறகும், அங்கு நடந்த விவகாரத்தை பற்றியே சொல்லிக்கொண்டிருக்கிறார்.

MR. SPEAKER : முனிசிபல் சபையைப்பற்றி ஒன்றும் பேசவேண்டாம்.

SRI N. MARUDACHALAM : தொழிலாளர்களுடைய கஷ்டங்களைப் போக்க அவர்களுக்கு வருஷத்திற்கு இரண்டு தடவை துணி கொடுக்கப்பட்டு வந்ததைக் கொடுக்கவேண்டும். வருஷம் பிறந்தவுடனே பெண்களுக்கு ஒரு ஜாக்கெட்டும், சேலையும் கொடுப்பார்கள். ஆண்களுக்கு ஒரு அறைகால் சட்டை, துண்டு இரண்டும் கொடுப்பார்கள். இதே மாதிரி வருஷத்திற்கு இரண்டு முறை கொடுப்பார்கள். இந்தத் தீர்மானம் நிறைவேறிய பிறகு கொடுப்பதில்லை. இதற்குக் காரணம் என்ன என்றால், அவர்கள் சங்கம் வைத்துக்கொண்டார்கள், கோரிக்கைகளை எழுப்பினார்கள் என்பதுதான். இதைக் கொடுக்காமலிருப்பது மோசமானது. இதை நிச்சயம் கொடுக்கவேண்டும். இதைக் கொடுக்காமலிருப்பது ஹரிஜன சேவையாகாது என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, the facts are these. The Coimbatore Municipal Council used to determine dresses (namely one shirt, one half trouser, and one towel to the male and a saree and a blouse to the female) to the 800 sanitary workers under its employ twice a year on Gandhi Jayanthi Day and Tamil New Year's Day at an approximate cost of Rs. 20,000 a year. During the last occasion when the Municipal Council decided to give these dresses in Khadi Cloth, the sanitary workers protested and held a demonstration to register their unwillingness to receive Khadi. Moreover, it was noticed that the dresses, etc., supplied to the workers were not used by them, but were sold to outsiders.

The sanitary workers are paid a decent salary of Rs. 50.50 per mensem, which is higher than the wages fixed under the Minimum Wages Act. Most of them are also provided with quarters and those not provided with quarters are granted House Rent Allowance. Besides these, they are given monthly one cake of Coaltar Soap for washing. They enjoy all other privileges afforded to Harijans and backward communities.

It may be pointed out in this connection that the supply of dresses is not required under any rules but is purely voluntary and in the nature of a gift. Several municipalities do not supply dress to sanitary workers. Considering all these facts and also the

limited financial resources of the Council, the Coimbatore Municipal Council resolved on 1st March 1958 not to supply uniforms to the sanitary workers of the municipality for the current year. As it is left to the discretion of the municipalities to supply uniforms to the sanitary workers working under them and as the statutory rules do not provide for the supply of dress to them, the Government do not propose to interfere in the matter.

ஒரு வார்த்தைத மிழில் சொல்ல விரும்புகிறேன். அதாவது, இந்தத் துணி கொடுப்பது தயா விஷயமாக, வெகுமதி மாதிரி கொடுக்கப்படுகிறது. இந்தத் துணிதான் வேண்டும், அந்தத் துணி வேண்டாம் என்று சொன்னதன் காரணமாகவும், இதற்கு பணம் அதிகமாகச் செலவழிந்தது என்ற காரணத்தினாலும் நிறுத்தப்பட்டது.

MR. SPEAKER : இதற்கு மேல் ஒன்றும் விவாதம் நடத்த முடியாது.

III.—GOVERNMENT MOTIONS.

(1) MOTION UNDER RULE 21 (3) OF THE ASSEMBLY RULES

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, under Rule 21 (3) of the Assembly Rules, I move—

"That item No. 11-A-1 in the Second Supplemental Agenda, namely, the Madras District Boards (Amendment) Bill, 1958, be taken up now."

The motion was put and carried.

IV.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS DISTRICT BOARDS (AMENDMENT) BILL, 1958.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

"That leave be granted to introduce the Madras District Boards (Amendment) Bill,[a] 1958."

Sir, hon. Members are aware that we are just considering the Madras Panchayats Bill in which provision has been made for the performance of the functions of the district boards. But, it will not be possible to pass the Bill in the Council also and make it law before 1st November 1958. That is why, this matter was considered by the Committee, and under its advice I am now moving that the existing provisions may be continued till the 31st January 1959, that is for three months. To give effect to it, this Bill is being moved emergently so that it may be passed immediately by the House.

MR. SPEAKER : The question is—

"That leave be granted to introduce the Madras District Boards (Amendment) Bill, 1958."

The motion was put and carried.

---

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 29th September 1958.

29th September 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I introduce the Madras District Boards (Amendment) Bill, 1958, and request that it may be taken up for consideration in the afternoon.

The Bill was introduced.

III.—GOVERNMENT MOTIONS—*cont.*

(2) AMENDMENT OF SCHEDULE V TO THE MADRAS DISTRICT BOARDS ACT, 1920.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Mr. Speaker, in the Madras District Boards Act, 1920, as it stands at present, there is no provision enabling the district boards to utilise their funds for medical education. One of the district boards recently proposed to utilise its funds for the establishment of a medical college. It is considered necessary to permit the utilization of district board funds towards medical education. It is accordingly proposed to amend Schedule V to the Act so as to enable district boards to utilize their funds for medical education. So, I move the following motion—

"That the following draft rule proposed to be made by the Governor of Madras in exercise of the powers conferred by section 201 of the Madras District Boards Act, 1920 (Madras Act XIV of 1920), altering Schedule V to that Act, be approved."

Draft Rule.

In the said schedule, the following rule shall be inserted as rule 2, namely :—

"2. A district board shall have power to contribute towards the expenses of establishment of a medical college or school within the district or to itself establish a college or school."

The motion was put and carried.

IV.—GOVERNMENT BILLS—*cont.*

(2) THE MADRAS PANCHAYATS BILL, 1958 (L.A. BILL NO. 33 OF 1958)—*cont.*

Clause 67 was put and carried.

Clause 68.

MR. SPEAKER : The motion is—

"That clause 68 do stand part of the Bill."

SRI M. S. SELVARAJAN : பஞ்சாயத்து மசோதாவின் 68-வது பிரிவில் சில பஞ்சாயத்துகள் கூட்டாகத் தங்களுக்கு வேண்டிய குடி தண்ணீர் வசதி, மற்றும் வேறு வசதிகளை அமைத்துக் கொள்ள வகை செய்யப்பட்டிருக்கிறது.

[Sri M. S. Selvarajan] [29th September 1958

கிணற்று வசதியைப் பொருத்தவரையில், இரண்டு பஞ்சாயத்துக்களுக்குப் பொதுவாக இருக்குமென்று நாம் நினைக்கவில்லை. பெரும்பாலான பஞ்சாயத்துகளுக்கு தனித்தனியாகவே கிணற்று வசதி அமைந்துவிடும். ஆனால் ஓவர்ஹெட் டாங்க் மூலமாகவோ, ஆற்றுத் தண்ணீர் மூலமாகவோ, **Comprehensive water-supply scheme, projected water-supply scheme** என்ற திட்டங்களின் மூலமாகவோ ஒன்றுக்கு மேற்பட்ட பஞ்சாயத்துகளுக்கு இந்தத் திட்டமானது நிறைவேற்றப்பட்டு வருகிறது. நிறைவேற்றப்படாத இடங்களில் கூட குடி தண்ணீருக்கு வசதி செய்வதற்காகத்தான் கூட்டாக சில பஞ்சாயத்துகள் சேர்ந்து செய்வதற்கு வழிவகை செய்யப் பட்டிருக்கிறது. இது வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கிற திட்டங் களிலேயும் சில இடங்களில் **Comprehensive water-supply scheme** நிறை வேற்றப்பட்டு வந்திருக்கிறது. பெரிய திட்டங்களுக்குக் கூட **rural water-supply scheme**-ஐப் பொறுத்தவரையில், கட்டுமான செலவை அரசாங்கமே பொறுப்பாக ஏற்றுக்கொண்டு சில திட்டங்களை நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. செலவு முழுவதையும் அரசாங்கமே ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய இடங் களில் நிர்வாகச் செலவை அந்தந்தப் பஞ்சாயத்துகளே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற வகையில் வழி செய்யப்பட்டிருக்கிறது. கட்டுமானச் செலவை பஞ்சாயத்துகளே ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய இடங்களில் ஒருவகையாக இருக்கிறது. வீடுகளுக்கு தனித்தனியாக குழாய் வைத்துக் கொடுத்திருக்கிற இடங்களில் கட்டுமானச் செலவை விட்டு சொந்தக்காரர்களே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று வழி செய்யப் பட்டிருக் கிறது. இது வீட்டுத் தீர்வை என்ற இனத்தின் கீழ் வசூலிக்கப்பட்டுவருகிறது. வாட்டர் டாக்ஸ் என்ற உப இனத்தில் கீழே, வீட்டுத் தீர்வை என்ற பணத் தின் பெயரால் இது வசூலிக்கப்படுகிறது. இந்தப் பிரிவிலாவது, அல்லது பிறபட்டு வரும் பிரிவிலாவது, இதுபோன்று நிறைவேற்றப்படு கின்ற குடி தண்ணீர் திட்டங்களுக்காக எந்த இனத்தில் கீழே நிர்வாகச் செலவை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று திட்டவட்டமாக வழி செய்யப் படவில்லை என்று நான் கருதுகிறேன். நான் தெரிந்து கொண்ட வரையில் வீட்டுத் தீர்வை என்ற இனத்தின் பெயரால், வீட்டுத் தீர்வையின் அடிப்படை யிலே இந்தத் தீர்வையும் வசூலிக்கப்பட்டு வருகிறது. வீட்டுத் தீர்வை என்ற அடிப்படையில் வசூலிக்கப்படுகிறது என்று சொல்லும்பொழுது, சாதாரணமாக 4 அணு தீர்வை வசூலிக்கிற ஒரு குடிசை வீட்டுக்கு, 10 நபர்கள் இருக்கிற இடத்தில், தண்ணீர் உபயோகிப்பதற்காக, 100-க்கு 100 தீர்வை கூடுதலாக வசூலித்தாலும், கூடுதலாக இன்னும் 4 அணு வசூலிக்கப்பட்டு, அது இந்த "maintenance charge"க்காக ஈடு செய்யப்பட்டு வருகிறது. அதே நேரத்தில் பெரிய வீடுகளில் 2 அல்லது 3 பேர்கள் இருந்தாலும், வீட்டுத் தீர்வை எவ்வளவு வசூலிக்கப்படுகிறதோ அதே அடிப்படையில் தண்ணீர் தீர்வை வசூலிக்கப்படுகிறது. எண்ணிக்கைக் கூடுதல் குறைவைப் பொருத்து இராமல் இந்தத் தீர்வை வசூலிக்கப்படுகிறது. பெரிய பஞ்சாயத்து ஆனாலும் சரி, சிறிய பஞ்சாயத்து ஆனாலும் சரி, எவ்வளவு தண்ணீர் உபயோகிக்கிறார்களோ, அந்த அளவுக்கு தீர்வை நிர்ணயிக்கப்பட வேண்டும். ஆகவே அடிப்படையிலேயே கோளாறு இருக் கிறது என்பது என்னுடைய கருத்து. இந்தக் கோளாறை நீக்கும் வகை யில் பழைய பஞ்சாயத்து சட்டத்திலும் கூட எந்தவிதமான பரிகாரமும் காணமுடியவில்லை. இது போன்ற நீர் நிலையங்கள் சம்பந்தப்பட்ட வரை, கூட்டுத்திட்டமானாலும் சரி, தனித்தனித் திட்டமானாலும் சரி, ஓவர்ஹெட் டாங்க் மூலம் தண்ணீர் சப்ளை செய்தாலும் சரி, இந்தத் தீர்வையை எந்த அடிப்படையில் வசூலித்து, அதற்கான பராமரிப்புச் செலவை ஏற்றுக் கொள்வது என்று பழைய பஞ்சாயத்து சட்டத்திலும் கூட வழிவகை செய்யப் படவில்லை. கடைசி நேரத்தில் இது பரிசீலனையில் இருந்தது. இப்பொழுது நாம் நிறைவேற்றும் பஞ்சாயத்துச் சட்டத்திலும் சரி, இது தெட்டத் தெளி வாக வரையறுக்கப்படவில்லை. இதுபோன்ற திட்டங்கள் சம்பந்தப்பட்டவரை யில், கூட்டுத்திட்டமாக இருந்தாலும் சரி, தனித்தனித் திட்டமாக இருந்தா லும் சரி, எந்த அளவுக்கு தண்ணீரை உபயோகப்படுத்துகிறார்களோ, அந்த அளவுக்கு ஈடு செய்யவேண்டும், அந்த அடிப்படையிலே தீர்வை செலுத்தப்படவேண்டும், அதற்குத் தகுந்த முறையில் வழி செய்யவேண்டு

29th September 1958] [Sri M. S. Selvarajan]

மென்று கேட்டுக்கொள்கிறேன். வீட்டுத் தீர்வை அடிப்படையிலே இந்தத் தண்ணீர்த் தீர்வையையும் வசூலிப்பது நியாயமாகாது. மாற்று வழி கண்டுபிடித்துத்தான் ஆகவேண்டும். ஜனத்தொகை அடிப்படையில், உபயோகப்படுத்துகிறவர்களுடைய தண்ணீர் அளவுக்குத் தகுந்தவாறு, இந்தத் தீர்வையை வசூலிக்கவேண்டுமென்று இந்த கிளாஸிலாவது அல்லது பின்னர் வசூலிக்கக் கூடிய விதிகளிலாவது வரையறுக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

Clause 68 was put and carried.

Clause 69.

MR. SPEAKER : The motion is—

"That clause 69 do stand part of the Bill."

*SRI A. GOVINDASAMY : பொது ரோடுகளுக்கும், பொது இடங்களுக்கும் அரசாங்கம் உத்திரவு போட்டு, பஞ்சாயத்தோ, பஞ்சாயத்து கவுன்சிலோ நிறைவேற்றுகிற நிலைமை ஏற்பட்டால், அந்தச் செலவை அரசாங்கம் ஏற்கவேண்டுமென்று விதிக்குப் பதிலாக, அரசாங்கத்தினுடைய உத்திரவுப் பிரகாரம் இருக்கலாம் என்கிற முறையிலே இந்தப்பிரிவிலுள்ள புரொவிஸோவில் இருக்கிற காரணத்தினால், அதை நீக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அரசாங்கம் ஏற்கனவே எஸ்டிமேட்டை அப்ரூவ் செய்து போட்ட பிறகு, அது சரியானதா 'என்று மறுபடியும் பரிசீலிக்கவேண்டிய அவசியம் கிடையாது. ஆகவே இந்த புரொவிசோவினால் இடையூறு ஏற்படலாம். விளக்குப் போட்ட பிறகு அரசாங்கம் ஏற்றுக் கொள்ள முடியாது என்ற நிலைமை ஏற்பட்டால், பஞ்சாயத்தோ, பஞ்சாயத்து யூனியனோ ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏற்படும். ஆகவே இந்த புரொவிசோவுக்கு அவசியமில்லை என்று கருதுகிறேன். அரசாங்கத்தின் சார்பிலேயே ஒரு திருத்தம் கொண்டுவந்து இதை நீக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: இதையெல்லாம் கவனித்துத்தான் அரசாங்கம் உத்தரவு போடும். ஆகவே நீக்கவேண்டிய அவசியமில்லை.

Clause 69 was put and carried.

Clause 70.

MR. SPEAKER : The motion is—

"That clause 70 do stand part of the Bill."

SRI N. K. PALANISAMI : Sir, I move "In the clause *omit* the words 'common dispensaries' occurring in line 37."

ஏற்கனவே ஜில்லா போர்டுகள் நடத்திவந்த ஆஸ்பத்திரிகள் எவ்வாறு நடந்தன என்பது நமக்கு நன்ருகத் தெரியும். பல ஆஸ்பத்திரிகளிலே டாக்டர்கள் இருப்பதே கிடையாது. பல ஆஸ்பத்திரிகள் மாதக் கணக்கில் டாக்டர்கள் இல்லாமல் இருந்திருக்கின்றன. அது மட்டுமல்ல. போதுமான மருந்துகளும் கிடையாது. வயிற்றுவலியானாலும் சரி, தலைவலியானாலும் சரி, ஒரே மருந்துதான். பல இடங்களிலே ஊழல்கள் ஏற்பட்டு, அதன் காரணமாக ஆஸ்பத்திரிகள் சரிவர நடைபெறவில்லை. ஜில்லா போர்டினாலேயே நிர்வகிக்க முடியாத ஆஸ்பத்திரிகளை இரண்டு, மூன்று பஞ்சாயத்து யூனியன்கள் சேர்ந்து எப்படி நடத்த முடியும் ? பஞ்சாயத்துகளைப் பற்றியோ, பஞ்சாயத்து யூனியன்களின் நிதி நிலைமையைப் பற்றியோ நமக்கு திட்டவட்டமாகத் தெரியாது. அப்படியிருக்கும்பொழுது இந்த ஆஸ்பத்திரிகள் நடத்துவதை பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு விட்டுவிட்டால், தன்னுடைய தொகுதி, தன்னுடைய பஞ்சாயத்து கவனிக்கப்படவில்லை

என்று விருப்பு வெறுப்பு ஒரு பக்கமும், நிதி நிலேயை மோசமாக இருந்தால், அதனுல் இருக்கக்கூடிய ஆஸ்பத்திரிகள் நடத்த முடியாமல் போகக்கூடிய அபாயமும் ஏற்படும் ஆகவே சர்க்கார் இந்த ஆஸ்பத்திரிகளே ஏற்று நடத்த வேண்டும், அல்லது ஜில்லா மெடிகல் ஆபீஸர்களின் கீழே இந்த ஆஸ்பத்திரிகளே நடத்தப்படவேண்டும். என்னுடைய இந்தத் திருத்தத்தை எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

The amendment was duly seconded.

MR. SPEAKER : The clause and amendment are before the House for discussion.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதெல்லாம் விவாதிக்கப்பட்டு டிஸ்பென்ஸரியைப் பொறுத்தவரையில் பஞ்சாயத்து யூனியன் நடத்தவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. அதிலே இரண்டு பஞ்சாயத்து யூனியன்கள் சேர்ந்து காமன் டிஸ்பென்ஸரிஸ் நடத்தலாம் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை எடுத்துவிடவேண்டுமென்று சொல்கிருர்கள். அதை ஒத்துக் கொள்ளுவதற்கு இல்லே.

The amendment was put and lost.

Clause 70 was put and carried.

Clause 71.

MR. SPEAKER : The motion is—

" That clause 71 do stand part of the Bill."

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

(i) " *Re-number* clause 71 as sub-clause (1) of that clause and in the heading to that clause for the words ' from panchayat union council ' *substitute* ' management of institutions, execution or maintenance of works, etc.' "

(ii) " *After* sub-clause (1) of clause 71 as re-numbered, *add* sub-clause (4) of clause 72 as sub-clause (2)."

The amendment was put and carried.

Clause 71, as amended, was put and carried.

Clause 72.

MR. SPEAKER : The motion is—

" That clause 72 do stand part of the Bill."

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

" In clause 72, *omit* sub-clause (4)."

This sub-clause has been added to the previous clause.

* SRI A. GOVINDASAMY : இப்பொழுது பஞ்சாயத்திலே இருக்கிற அன்ரிசர்வ்ட் பாரெஸ்டுகளுடைய வருமானத்தை கலெக்டர் விரும்பினுல் எடுத்துக் கொள்ளலாம் என்ற நிலேமை இருக்கிறது. அதை நீக்கவேண்டும். கிளாஸ் 72 (1) (பி)-யில் குறிப்பிட்டிருக்கிற வாசகத்தை நீக்கவேண்டுமென்று திருத்தத்தை ஸ்ரீ எம். பி. சுப்பிரமணியம் கொடுத்

29th September 1958] [Sri A. Govindasamy]

திருக்கிருர்கள். ஆனுல் அந்த அங்கத்தினர் தற்சமயம் சபையில் இல்லாத தன் காரணத்திஞல், அந்தத் திருத்தம் பிரேரேபிக்கப்படவில்லே. முக்கிய மாக பஞ்சாயத்துகளுக்கு வரவேண்டிய வருமானத்தை சர்க்கார் எடுத்துக் கொள்ளக்கூடாது. அதனுல் பஞ்சாயத்துக்களுடைய வருமானம் குறையும். ஆகவே, இந்த ஷரத்தை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த 'b' பகுதி பஞ்சாயத்து வருமானத்தை எடுத்துக்கொள்ளுவதற்காக இல்லே.

In respect of every forest so vested, the panchayat shall, if so required by the Collector, pay to the Government such rent as the Collector, may, from time to time, subject to the control of the Board of Revenue, fix in this behalf.

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதிலே ஏதாவது ரெண்ட் கொடுக்க வேண்டுமா என்பதை பற்றி தான் இங்கே கூறப்பட்டிருக்கிறது. அவசி யமான இடங்களில் ரெண்ட் குறைக்கப்படும் அல்லது ரெண்ட் இல்லா மலும் விடக்கூடும்.

The amendment was put and carried.

Clause 72, as amended, was put and carried.

Clause 73.

MR. SPEAKER : The motion is—

" That clause 73 do stand part of the Bill."

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

" In clause 73, *after* sub-clause (2), *add* the following sub-clause :—

' (3) The management and superintendence of any charitable endowment which immediately before the constitution of a panchayat union council for any panchayat development block under this Act was vested in a district board under the Madras District Boards Act, 1920 (Madras Act XIV of 1920) shall, on such commencement, vest in the panchayat union council exercising jurisdiction over the place where the endowment is situated.' "

The amendment was put and carried.

Clause 73, as amended, was put and carried.

Clauses 74 to 77 were put and carried.

Clause 78.

MR. SPEAKER : : The motion is—

" That clause 78 do stand part of the Bill."

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

" In clause 78—

' (i) *for* the words ' it shall be the duty of the panchayat to provide at the cost of the panchayat to such extent as the Government may by general or special order direct ' *substitute* ' the panchayat may, and if so required by the Government shall, make provision '; and

[Sri C. Subramaniam] [29th September 1958

(ii) *add* the following at the end—

' Provided also that where the execution of any work is required by the Government, the Government shall make such provision for the cost thereof.' "

The amendment was put and carried.

Clause 78, as amended, was put and carried.

(Deputy Speaker in the Chair.)

Clause 79.

DEPUTY SPEAKER : The motion is—

" That clause 79 do stand part of the Bill."

Sri Annamalai will move his amendment.

THE HON. SRI C. SUBRAMANIAM : The principle of the amendment has been negatived many times.

DEPUTY SPEAKER : Because the House has already given its verdict against the principle, the hon. Member cannot move the amendment.

Clause 79 was put and carried.

Clauses 80 and 81 were put and carried.

Clause 82.

DEPUTY SPEAKER : The motion is—

" That clause 82 do stand part of the Bill."

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

" (i) *Re-number* clause 82 as sub-clause (1) of that clause, and in sub-clause (1) as re-numbered *for* the expression ' section 85 or section 86 ' *substitute* ' section 86 or section 87 '."

" (ii) *after* sub-clause (1), *add* the following as sub-clause (2) :—

' (2) It shall be the duty of the karnam of every revenue village to report on encroachments on properties vested in panchayats or panchayat union councils, to the executive authority or the Commissioner concerned and to the officers of the Revenue Department, and it shall be the duty of the executive authority or the Commissioner concerned to institute proceedings under this Act and secure the removal of the encroachments within such time as may be specified by the Government by general or special order. If the removal of the encroachments has not been secured within the period specified in such order, the officers of the Revenue Department shall institute proceedings under the Madras Land Encroachment Act, 1905 (Madras Act III of 1905) and secure such removal '."

The amendment was put and carried.

Clause 82, as amended, was put and carried.

29th September 1958]

Clause 83.

DEPUTY SPEAKER : The motion is—

" That clause 83 do stand part of the Bill."

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

(i) In clause 83 *after* the words ' or income ' *insert* ' including any fishery rights '."

(ii) " *For* the words ' of lands of a particular description or of lands under a particular source of irrigation ' *substitute* ' of the holders of lands of a particular description or of the holders of lands under a particular source of irrigation '."

SRI A. GOVINDASAMY : தனிப்பட்டவர்கள் குளங்கள் நீங்கலாக, பொதுக் குளங்கங்களில் வருகின்ற மீன் வருமானத்தை பஞ்சாயத்துகளுக்கு கொடுப்பது போலவே, விழல் மூலம் அதாவது கோரை முதலியவைகள் மூலம் வரும் வருமானத்தையும் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

The amendment was put and carried.

Clause 83, as amended, was put and carried.

10-40 a.m.

Clause 84.

DEPUTY SPEAKER : The motion is—

" That clause 84 do stand part of the Bill."

THE HON. SRI C. SUBRAMANIAM : Mr. Deputy Speaker, Sir, I move—

" *Re-number* clauses 84 to 88 as clauses 85 to 89 respectively, and *insert* clause 89 as clause 84."

The amendment was put and carried.

Clause 84 as re-numbered was put and carried.

Clause 85 *as re-numbered.*

DEPUTY SPEAKER : The motion is—

" That clause 85 do stand part of the Bill."

THE HON. SRI C. SUBRAMANIAM : Mr. Deputy Speaker, Sir, I move—

In clause 85 as re-numbered—

(i) *for* the heading *substitute* the following heading—

" *Maintenance of Irrigation works, execution of Kudimaramat, etc.*";

(ii) in sub-clause (1) *after* the words ' to any panchayat ' *insert* ' or to any panchayat union council ';

(iii) in sub-clause (2), *after* the words ' The panchayat ', *insert* ' or the panchayat union council '.

(iv) *After* sub-clause (2), *add* the following :—

'(3) Where the maintenance of any irrigation work is transferred under this section, the fishery rights of Government in such work shall be transferred to and be vested in the panchayat or the panchayat union council as the case may be subject to such terms and conditions including terms and conditions regarding the utilization of the income, as may be specified by the Government.'

SRI A. R. SUBBIAH MUDALIAR : I want a clarification regarding the clause we are discussing.

THE HON. SRI C. SUBRAMANIAM : It is clause 84 re-numbered as 85.

SRI M. S. SELVARAJAN : தலைவர் அவர்களே, உத்தேச திருத்தத்தின் காரணமாக விதிப் பிரகாரம் கூட, நீர்ப்பாசன சம்மந்தமான பொறுப்புகள் பஞ்சாயத்துகளிலோ, யூனியன்களிலோ, விடப்படுவதற்கு அதிகாரம் அளிக்கிறோம். இதில் அதிகாரத்தை விட்டுத்தான் ஆகவேண்டும் என்று இல்லாமல், விட்டாலும் விடலாம் என்ற முறையில், சர்க்காரே அதிகாரத்தை வைத்துக் கொள்வது நியாயமாக இருக்கும், நலமாக இருக்கும். இன்றைய தினம், கிராமங்களிலே, நீர்ப்பாசன விவகாரங்கள், குழப்பமும், சச்சரவுகளும் மிகுந்தவை. குளங்கள் தோறும், தண்ணீர் வினியோகம் செய்யும் பொறுப்பு P.W.D.-ஐ சேர்ந்தது. பாய்மான வாய்க்கால்கள் தோறும், தண்ணீர் விடும் பொருப்பு, ரெவின்யூ, இலாகாவினரைச் சேர்ந்ததாக இருக்கிறது. இவற்றைச் சரிவரச் செய்ய, ஆங்காங்கே விவசாயச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. சில சங்கங்களிலே ஒரு மடையினரை மோசம் செய்து மறு மடைக்கு தண்ணீர் விடுவதிலும், அதற்காக வசூலிக்கும் பணத்தைத் தவரான வழிகளில் செலவழிக்கும் நிலைமையும் இருக்கிறது. பல சங்கங்கள் நல்ல கருத்தோடு இருக்கின்றன. முழுப் பொறுப்பும் அரசாங்கமே எடுத்து, முழுச் செலவையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று இம்மாதிரியான சங்கங்களை ஊக்குவித்து வருகிறோம். கிராம பஞ்சாயத்துக்கு பொருப்பைக் கொடுக்கும் நேரத்திலே, ஒரு பஞ்சாயத்தில் குடியிருப்பு இருக்கும், நில புலன்கள் மற்றொரு பஞ்சாயத்தில் இருக்கும். ஒன்றுக்கு ஒன்று உள்ள விவகாரங்கள், வில்லங்கங்கள் காரணமாக நீர்ப்பாசன வசதிகளில் அதிகாரம் தவரான வழிகளில் பிரயோகிக்கப் படலாம். ஆகவே, இந்த அதிகாரத்தை ஜாக்கிரதையாக அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். அதில் அரசாங்கம் தன் கையில் வைத்துக் கொண்டு ஜாக்கிரதையாகச் செய்வதே மிக்க நல்லது. இதைச் சொல்லும் போது, கிராமங்களிலே இயங்கும் விவசாய சங்கங்கள், ரெஜிஸ்டர் செய்துதான் இயங்கவேண்டும் என்றிருக்கவேண்டும். அப்பொழுதுதான் அவர்களை நன்றாக ஊக்குவிக்கவும், அவர்களின் சுய முயற்சியைத் தூண்டிவிடவும் முடியும். இதையெல்லாம் கவனித்து, இந்த அதிகாரத்தை அவர்களுக்கு ஜாக்கிரதையாகக் கொடுக்க வேண்டும்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் செல்வராஜன் அவர்கள் சொன்னவைகள் எல்லாம் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

The Government amendment was put and carried.

Clause 85 as re-numbered and amended was put and carried.

Clause 86 *as re-numbered.*

DEPUTY SPEAKER : The motion is—

"That clause 86 do stand part of the Bill."

29th September 1958]

THE HON. C. SUBRAMANIAM: Mr. Deputy Speaker, Sir, I move—

'In clause 86 as re-numbered, *for* sub-clause (2), *substitute* the following sub-clause:—

"(2) The following porambokes, namely, grazing grounds, threshing floors, burning and burial-grounds, cattle-stands cart-stands and topes shall vest in the panchayat, and the panchayat shall have power, subject to such restrictions and control as may be prescribed, to regulate the use of such porambokes, provided the porambokes are at the disposal of the Government."'

DEPUTY SPEAKER: The clause and the amendment are before the House for discussion.

SRI V. K. KOTHANDARAMAN: ஸார், இதிலே பஞ்சாயத்துக்களுக்கு எந்த எந்த புறம்போக்கு நிலங்களை கொடுப்பது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் கிராமத்திலே பலதரப் பட்ட தரிசுகள், சர்க்கார் புறம்போக்குகளாக இருக்கின்றன. எவையெல்லாம் சர்க்கார் புறம்போக்கோ அத்தனையும், பஞ்சாயத்து ஏரியாக்குள் இருக்கக்கூடிய அத்தனை புறம்போக்குகளையும், அந்த பஞ்சாயத்து அதிகாரத்துக்கு விட்டு விடவேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். காரணம், இன்றைய தினம், பல கிராமங்களிலே இருக்கக் கூடியவர்கள் 20, 30, 40 வருஷங்களாக பல தரிசுகளில் வீடு கட்டிக் கொண்டும், விவசாயம் செய்து கொண்டும் இருந்து வந்திருக்கிறார்கள். ஆனாலும், அவர்களுக்கு அந்த நிலங்கள் பட்டா செய்து கொடுக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக, 5 அல்லது 6 வருஷங்கள் மட்டுமே வீடு கட்டியிருந்தபோதிலும், அவர்களுக்கு, மணியக் காரர்கள், கணக்குப் பிள்ளைகள் தங்கள் இஷ்டம்போல் பட்டா செய்து கொடுக்கும் நிலைமை இருக்கிறது. வசதி இல்லாத மக்கள் பெரிய அளவு 10-50 a.m.
பாதிக்கப்படக்கூடிய நிலைமையில் இருக்கக்கூடிய காரணத்தால் உடனுக் குடன் நாம் அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமானால் புரம்போக்கு என்ற பெயரால் இருக்கக்கூடிய பல நிலங்களை அந்தப் பெயரால் இருக்கக் கூடியவைகளை மாற்றிவிட்டு அதற்காக வேண்டி மணியக்காரர் அல்லது கணக்குப்பிள்ளை சிபாரிசு செய்து அதற்கு மேல் தாசில்தார் சிபாரிசு செய்து அதன் மேல் ரிவினியு போர்டுக்கு வந்த பிறகு குறிப்பிட்ட புறம்போக்கை விலக்கி விட்டு விட்டு, அப்படிப்பட்ட குறிப்பிட்ட புறம்போக்கு நிலங்கள் அதற்கு உபயோகம் இல்லை என்று அவர்களுடைய சிபாரிசின் அடிப்படையில் அதை மாற்றுவதற்கு பல வருஷங்களாகக்கூடிய நிலைமை இருக்கிறது. அதன் காரணத்தால், அந்த நிலம் எந்த நோக்கத்துடன் ஒதுக்கப் பட்டதோ எந்தக் காரணத்திற்கு வேண்டி அந்தப் புரம்போக்கு நிலம் இருந்ததோ அந்தக் காரியத்துக்கு அது உபயோகப்படவில்லை என்று சொன்னால் அதை எடுத்து விவசாயம் செய்வதற்கோ அல்லது வீடுகள் கட்டிக்கொள்வதற்கோ இன்றைக்கு விட்டு விடவேண்டும் என்ற அளவுக்கு அந்த பஞ்சாயத்துக்கு அதிகாரம் இருக்கவேண்டும். அந்த அடிப்படையில் பஞ்சாயத்து ஏரியாவில் இருக்கக்கூடிய எல்லா நிலங்களையும் பஞ்சாயத்து எடுத்து உபயோகப்படுத்தக்கூடிய அதிகாரம் அவர்களுக்கு இருக்க வேண்டும் என்ற அபிப்பிராயத்தை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: Sir, I have nothing to say.

The amendment was put and carried.

Clause 86 as re-numbered and amended, was put and carried.

Clauses 87, 88 and 89 as re-numbered were put and carried.

Clause 90.

DEPUTY SPEAKER : The motion is—

"That clause 90 do stand part of the Bill."

* SRI A. GOVINDASAMY : கனம் அவைத் தலைவரவர்களே, உத்சவம் நடந்தால் அல்லது சந்தை நடக்கிற நேரத்தில் பொது ஜன பாதுகாப்புக்காக சுகாதார வசதி செய்துக் கொடுக்கக்கூடிய நிலைமை யை பஞ்சாயத்து பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும், என்று தாற் காலிகமாக அல்லது நிரந்தரமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற விதியில் இது குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதனுடைய செலவை சர்க்கார் விரும்பினுல் ட்ரஸ்டிகளை கலந்து கொண்டு அவர்கள் அந்த செலவை ஏற்றுக்கொள்ள வசதிசெய்து கொள்ளக்கூடிய நிலைமையில், சர்க்கார் விரும்பினுல் என்று இருக்கிறது. "the Government may after consulting the trustee" என்று இருக்கிறது. அவசியம் என்று சர்க்கார் விரும்பினுல் ட்ரஸ்டிகளிடமிருந்து வசூலிக்கலாம் என்று இருக்கிறது. சாதாரணமாக இப் பொழுது பெரிய கோவில்களாக இருந்தால் நிறைய வருமானம் வருகிறது. அதையெல்லாம் இம்மாதிரி சுகாதார வசதி செய்து கொடுப்பதற்கு எடுத்து கொள்ளலாம். அது பஞ்சாயத்தில் பொறுப்பாக இருக்கக்கூடாது. பெரிய கோவில்களாக இருந்தால் அதற்கு நல்ல வருமானம் வரக்கூடியதாக இருந்தால் அந்த வருமானத்தைக் கொண்டு இப்படிப்பட்ட வசதிகளைச் செய்து கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும். "The Government may after consulting" என்று இருப்பதால் சர்க்கார் விரும்பினுல் செய்து கொள்ளலாம், விரும்பா விட்டால் செய்து கொள்ளாமல் இருக்கலாம் என்று இருக்கிறது. அதனுல் பஞ்சாயத்துக்கு அந்தச் செலவு வருமே என்ற அச்சத்தின் காரணமாக இப்படிப்பட்ட செலவுகளைப் பெரிய வருமானம் வரக்கூடிய கோவில்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று இருக்க வேண்டும். ஆயிரக்கணக்கான மக்கள் வருவதாலும், அதன் மூலமாக நிறைய வருமானம் வரக்கூடியதாக இருப்பதாலும் அப்படிச் செலவு செய் யக்கூடிய பொறுப்பை கோவில் நிர்வாகம் எடுத்துக் கொள்ளக்கூடிய நிலைமையை உண்டாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

SRI J. MATHA GOWDER : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பெரிய கோவில்களில் உற்சவங்கள் நடக்கும்போது நாம் அவர்களுக்கு வரிகளைப் போட்டுக்கொண்டு அதன் மூலம் பணம் வசூலித்துக் கொண்டு வருகிறோம். அவர்களிடமிருந்து நியாயமான வரிகளையும் நாம் வசூலித்துக் கொண்டுவருகிறோம். அந்த நிலைமையில் அவர்களிட மிருந்து உத்சவ காலங்களிலும் மற்ற காலங்களிலும் அவர்களிடமிருந்து சட்டத்தைப் போட்டு வசூலிப்பது என்பது அவ்வளவு உசிதமானது அல்ல என்பது என்னுடைய அபிப்பிராயம். நாம் எவ்வளவோ காரியங்களைச் செய்கிறோம். அந்த நிலைமையில் அவர்களே வேண்டுமானுல் செய்ய லாமேதவிர நாம் அவர்களை நிர்ப்பந்தம் செய்யக்கூடாது. அப்படிச் செய் தால் அது அவ்வளவு நியாயமாக இருக்காது. "may consult" என்று இருப்பதால் அவர்கள் கலந்து ஆலோசனை செய்து ஏதாவது அவர்கள் கொடுப்பதாக இருந்தால் கொடுக்கலாம். அவர்கள் கொடுக்கவில்லை என் றால் அவர்களை நாம் நிர்ப்பந்திக்கக்கூடாது. நாம் அவர்களுக்கு இப்பொ ழுது வரி போடுவதால் அவர்களை நிர்ப்பந்தப் படுத்தி வாங்கக்கூடாது. அப் படி வாங்குவது நியாயம் இல்லை என்று என்னுடைய அபிப்பிராயத்தை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுதுள்ள கொள்கையின்படி கோவில்களுடைய பணம் மக்களுக்கு பயன்பட வேண்டும் என்பதுதான். அந்த முறையில் தான் இதைப் போடப்பட்டிருக்கிறது. எந்த எந்த சமயத்தில், ஆலயங் களுக்குச் சௌகர்யங்கள் இருக்கிறதோ, அந்த அந்த சமயங்களில் எடுத்துக் கொண்டு மக்களுக்கு வசதி செய்து கொடுப்பதற்குத்தான், செலவுகளைச் செய்வதற்குத்தான் இந்த முறையில் எடுத்துக் கொள்ளப்படும் என்று இந்த அதிகாரத்தை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. எப்பொழுது

29th September 1958] [Sri C. Subramaniam]

அவசியம் என்று தோன்றுகிறதோ அப்பொழுது எடுத்துக் கொள்வதற்கும், எவ்வளவு தூரம் எடுத்துக்கொள்ள முடியுமோ அவ்வளவு தூரம் எடுத்துக் கொள்வதற்கும் தான் இப்படி போடப்பட்டிருக்கிறது.

Clause 90 was put and carried.

Clauses 91, 92 and 93 were put and carried.

Clause 94.

DEPUTY SPEAKER: The motion is—

'That clause 94 do stand part of the Bill.'

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, I move—

'In clause 94—

(i) in the heading, *after* the word "small-pox", *insert* "or cholera";

(ii) *after* the words "from small-pox", *insert* "or cholera".'

DEPUTY SPEAKER: Now the clause and the amendment are before the House for discussion.

SRI M. S. SELVARAJAN: கனம் சபாநாயகர் அவர்களே, காலரா, அம்மை போன்ற பெரிய பயங்கரமான வியாதிகள் வரும்போது எங்கே கிராம அதிகாரி, கிராமத் தலைவர் இருக்கிறார் என்று பார்த்து அல்லது கமிஷனருக்குத் தெரிவிக்கவேண்டும் என்று இருப்பதை பஞ்சாயத்து எக்சிக்யூடிவ் அதாரிட்டி அல்லது தலைவர் என்று போட்டால் தவறு இல்லை. அவர்களிடத்திலும் தெரிவிக்கவேண்டும் என்று அவரையும் சேர்த்து விடுவதில் என்ன தவறு என்பதை அரசாங்கம் யோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

The amendment was put and carried.

Clause 94, as amended, was put and carried.

Clauses 95 to 99 were put and carried.

Clause 100.

DEPUTY SPEAKER: The motion is—

"That clause 100 do stand part of the Bill."

SRI N. K. PALANISAMI: Sir, I move—

"In sub-clause (2), in item (*d*), for the word 'Inspector' in line 9, *substitute* the word 'Collector'."

The amendment was duly seconded.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, I move—

"In the heading to clause 100, *omit* 'excepted'."

DEPUTY SPEAKER: Now the clause and the amendments are before the House for discussion.

SRI N. K. PALANISAMI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்தத்தின்படி, ஏற்கெனவே தனி நபருடைய லைசென்ஸை பஞ்சாயத்து யூனியனோ அல்லது பஞ்சாயத்தோ ஒத்துக்கொள்ளாவிட்டால் அதை இன்ஸ்பெக்டரிடம் அப்பீல் செய்யவேண்டும் என்று இருக்கிறது. ஏற்கனவே கலெக்டர்தான் ஜில்லா டெவலப்மெண்டுக்கு தலைவராக இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் அவரிடம் இன்ஸ்பெக்டருடைய சிபாரிசின் மூலமாக சஸ்பெண்ட் செய்வதற்கோ அல்லது சஸ்பெண்ட் செய்யாமல் இருப்பதற்கோ சிபாரிசு செய்யலாம். அந்த அடிப்படையில் இன்ஸ்பெக்டர் என்று இருப்பதற்கு பதிலாக கலெக்டர் என்று போட்டுக் கொண்டால் சரியாக இருக்கும். இன்ஸ்பெக்டருக்கு மேல் கலெக்டர் மேலதிகாரியாக இருப்பதால் அதன்படி இருக்கவேண்டும். அதன்படி ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

11 a.m. SRI M. S. SELVARAJAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவின் 100-வது ஷரத்துப்படி, சந்தையினுடைய வருமானத்தைக் கணக்கிடும்போது, “க்ராஸ் இன்கம்,” அதாவது மொத்த வருமானம் என்பது, சந்தையை ஏலத்தில் விடும்போது, ஏலத்தில் எவ்வளவு தொகை கிடைக்கிறதோ அந்தத் தொகையா ? அல்லது வசூலிக்கப்படும் மொத்தத் தொகையா ? என்ற சந்தேகங்கள் சில வருஷங்களுக்கு முன் எழுந்தன. “க்ராஸ் இன்கம்” இல் 15 சத விகிதம் பஞ்சாயத்துக்கு லைசன்ஸ் கட்டணமாகக் கிடைப்பதென்றால், அது எந்த க்ராஸ் இனகத்தில் என்று தெரியவில்லை. ஆகவே, க்ராஸ் இனகம், என்பது எது என்று வரையறை செய்யப்படவேண்டும். அதற்குரிய விதி செய்யப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ‘க்ராஸ் இன்கம்’ என்று கனம் அங்கத்தினர் குறிப்பிடுவது இந்த ஷரத்தில் வருவது இல்லையே. எங்கே ‘க்ராஸ் இன்கம்’ என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று கனம் அங்கத்தினர் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI M. S. SELVARAJAN : இந்த ஷரத்தில் நான்காவது பிரிவில் கண்டுள்ளதாவது :

“(4) When a licence granted under sub-section (2) does not permit the levy of any fee, it shall be granted free of charged; but when such permission is given, a fee not exceeding 15 per cent of the gross income of the owner from the market in the preceding year shall be charged by the panchayat or panchayat union council as the case may be for such licence.”

ஜில்லா போர்டு மார்க்கெட்டைப் பொறுத்தவரையில் எப்படி “க்ராஸ் இன்கம்” கணக்கிடப்படுகிறது ? ஏலம் விடும் தொகையிலே கணக்கிடப் படுகிறதா ? மொத்தமாகக் கிடைக்கும் வருமானத்திலிருந்து கணக்கிடப் படுகிறதா ? இதைத் தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, we will provide for it in the rules.

The amendment of Sri N. K. Palanisami was put and lost.

The Government amendment was put and carried.

Clause 100, as amended, was put and carried.

Clauses 101 to 110 were put and carried.

29th September 1958]

Clause 111.

DEPUTY SPEAKER : The motion is—

" That clause 111 do stand part of the Bill."

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

" *For* clause 111, *substitute* the following :—

' 111. *Purposes for which pplaces may not be used without licence.*—(1) The Government may, by notification specify the purposes which, in their opinion, are likely to be offensive or dangerous to human life or health or property.

(2) (i) The panchayat union council in the case of panchayat villages may, with the previous approval of the prescribed authority, notify that no place within the limits of any panchayat village in the panchayat development block or within the limits of such panchayat village or villages as may be specified in the notification shall be used for any of the purposes referred to in sub-section (1) without a licence and except in accordance with the conditions specified in such licence.

(ii) The town panchayat may, with the previous approval of the prescribed authority, notify that no place within the limits of the panchayat town shall be used for any of the purposes referred to in sub-section (1) without a licence and except in accordance with the conditions specified in such licence.

(3) No notification issued under sub-section (1) or sub-section (2) shall take effect until sixty days from the date of its publication.

(4) The executive officer in the case of panchayat towns and the Commissioner in the case of panchayat villages shall be the authority competent to grant the licence or to refuse to grant it.' "

In view of the modified clause, I do not think that any amendment will arise.

The amendment was put and carried.

Clause 112.

DEPUTY SPEAKER : The motion is—

" That clause 112 do stand part of the Bill."

SRI S. M. ANNAMALAI : Sir, I move—

" *Omit* the words ' union council ' *and* ' union ' wherever they occur."

The amendment was duly seconded.

SRI N. K. PALANISAMI : Sir, I move—

" In the clause, in line 17, *after* the words ' permission of the ' *add* the words ' panchayat board '."

The amendment was duly seconded.

SRI N. K. PALANISAMI : Sir, I move—

"*After* the word 'council' in line 18, *insert* the words 'granted on the recommendation of the panchayat concerned'."

The amendment was duly seconded.

SRI A. GOVINDASAMY : Sir, I move—

"*After* the words 'panchayat union council' occurring in line 18, *add* the words 'for areas lying within the village panchayats and the town panchayats lying within them'."

The amendment was duly seconded.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

"In clause 112, *after* the words 'panchayat union council' *insert* 'in panchayat villages and the town panchayat in a panchayat town'."

DEPUTY SPEAKER : The clause and the amendments are before the House for discussion.

SRI N. K. PALANISAMI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஒரு பாக்டரி கட்ட வேண்டியதற்கோ அல்லது பாக்கியிருக்கும் மெஷினரிகளை வைக்கவேண்டியதற்கோ அனுமதி கொடுக்கக்கூடிய அதிகாரம் பஞ்சாயத்துக் கவுன்சிலுக்குத்தான் இருக்கவேண்டும். எற்கெனவே இருக்கும் வழக்கப் பிரகாரம் ஒவ்வொரு பஞ்சாயத்து போர்டும் லைசன்ஸ் கொடுக்க சிபார்சு செய்யவேண்டிய அதிகாரம் இருந்தது. ஆனால், அந்த அதிகாரம் இதன்மூலம் எடுக்கப்பட்டுவிட்டது என்று நினைக்கிறேன். ஆகையால், பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலிடம் அனுமதியைப் பெறுவதற்குமுன், பஞ்சாயத்தினுடைய சம்மதத்தையும் பெற்றிருக்கவேண்டும் என்பது என்னுடைய திருத்தமாகும்.

SRI S. M. ANNAMALAI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ரைஸ் மில் வைப்பது போன்றவைகளில் லைசன்ஸ் வழங்குவதற்கு, இப்பொழுது சர்க்கார் கொடுத்திருக்கும் திருத்தத்தின்படி, பெரிய பஞ்சாயத்துக்களுக்கு மட்டும்தான் அதிகாரம் இருக்கிறது. அத்தகைய அதிகாரம் சிறிய பஞ்சாயத்துக்களுக்கும் இருக்கவேண்டுமென்று நான் கருதுகிறேன். சதாரணமாக சிறிய பஞ்சாயத்துக்கள்தான் அவரவர்கள் பகுதியிலே ரைஸ் மில் வைக்கலாமா, வைக்கக்கூடாதா என்பதை நிர்ணயிக்க வேண்டும். பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு அந்த உரிமையைத் தருவது உசிதமல்ல, சிறிய பஞ்சாயத்துக்களுக்கும் அந்த உரிமையைத் தருவது நல்லது என நான் நினைக்கிறேன். என்னுடைய திருத்தத்தை சர்க்கார் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

SRI M. S. SELVARAJAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ரைஸ் மில் அமைப்பது காரணமாகவே பல்வேறு பஞ்சாயத்துக்கள் கலைக்கப்படவேண்டி ஏற்பட்டது என்று சரித்திரம் இருக்கிறது. பெரிய தொழிற் சாலைகள் நிறுவுகிறபோது, அதற்குவேண்டிய இயந்திரகளையெல்லாம் வைக்க அனுமதி தரவேண்டிய பொறுப்பு ஒரு தனிப்பட்ட பஞ்சாயத்தை மட்டும் சேர்ந்தது அல்ல. அது, அந்தப் பஞ்சாயத்தைச் சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களினுடைய சாதக பாதங்களைப் பொறுத்ததாகையால், இதுபோன்ற விஷயங்களில் ஒரு தனிப்பட்ட பஞ்சாயத்தே முடிவு செய்வதைவிட, அதற்கு மேற்பட்டு பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் பரிசீலனை செய்வது நல்லது. ஒரு இடத்தில் ஒரு மெஷனரியை வைப்பதினால் ஏற்படும் சாதக பாதகங்களைப் பரிசீலனை செய்து அனுமதி வழங்க வேண்டிய பொறுப்பு இந்த மசோதாவில் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு கொடுத்திருப்பது சரி என்று நான் நினைக்கிறேன்.

29th September 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, no reply is necessary.

The amendment of Sri S. M. Annamalai was put and lost.

The amendments of Sri N. K. Palanisami were put and lost.

The amendment of Sri Govindasamy was, by leave, withdrawn.

The Government amendment was put and carried.

Clause 112, as amended, was put and carried.

Clause 113. 11-10 a.m.

DEPUTY SPEAKER: The motion is—

" That clause 113 do stand part of the Bill."

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, I move—

" In clause 113—

(i) In sub-clause (2) *for* the words ' to set apart specified areas in the panchayat union ' *substitute* ' in panchayat villages and the town panchayat in a panchayat town to set apart specified areas ';

(ii) *After* sub-clause (3) *add* the following :—

' (4) The income derived from fees on licences under section 111 and on permissions under section 112 shall, if received by the panchayat union council, be credited to the funds of the village panchayat concerned and if received by the town panchayat be credited to the funds of that town panchayat.' "

DEPUTY SPEAKER: The clause and the amendment are before the House for discussion.

SRI M. S. SELVARAJAN: பஞ்சாயத்து பகுதிகளில்—குடியிருப்புப் பகுதி, குடியிருப்புக்கு லாயக்கற்ற பகுதி, தொழில் ஏற்படுத்துவதற்கு லாயக்கான இண்டஸ்டிரியல் ஏரியா—என்பதாக மூன்று விதமாகப் பிரிக்கப்படுகின்றன. பல்வேறு பகுதிகளில் பல வருஷங்களுக்கு முன்பே இதுபோன்ற பிரிவினை செய்யப்பட்டு அதன் காரணமாக அந்தப் பகுதிகளில் இன்றையதினம் சிறு சிறு தொழில்கள் கூட வளர இயலாத கஷ்டம் இருக்கிறது. குறிப்பாக இரண்டு கஷ்டங்கள் இருக்கின்றன. முதலில் ஒரு பஞ்சாயத்தினால்—இந்தப் பகுதி குடியிருப்புக்கு லாயக்கானது, தொழில் வைப்பதற்கு லாயக்கானது—லாயக்கற்றது—என்பதாக பிரித்து வைத்துவிடுகிறார்கள் என்றால் பின்னால் வருகிற பஞ்சாயத்துகளினால் அதில் அபிப்பிராயம் சொல்வதற்கோ—அல்லது அதைத் திருத்துவதற்கோ அதிகாரம் வழங்கப்படவில்லை. ஒருதரம் விருப்பு வெறுப்புக்குத் தக்க வகையில் பிரிக்கப்பட்டுவிட்டது என்றாலும்—குடியிருப்பு லாயக்கான இடம்—குடியிருப்புக்கு லாயக்கற்ற இடம்—தொழில் நடத்துவதற்கு ஏற்ற இடம்—என்று பிரிக்கப்பட்டுவிட்டால் அதை மாற்ற முடியாது. தலைமுறை தலைமுறையாக வந்துகொண்டிருக்கும் இந்த வழக்கத்தில் ஏதாவது மாறுதல் செய்யவேண்டுமென்று சர்க்காருக்கு எழுதினாலும்—மாற்றலாம் அல்லது மாற்றக்கூடாது என்று இரண்டு பதிலில் ஏதாவது ஒன்றை உடனடியாக சர்க்கார் அனுப்பிவைப்பது கிடையாது. காலதாமதம் மிகவும் செய்வதால் ஒரு மாட்ச் பாக்டரியோ அல்லது வேறு ஏதாவது சிறு தொழிலை ஆரம்பிக்கவேண்டுமென்றாலோ முடியவில்லை. அப்போது இந்தக் கஷ்டம் வெகு

வாக உணரப்படுகிறது. ஆகவே இன்றையதினம் எப்படி பிரிக்கப்படுகிறதோ அதுவே நிரந்தரமாக இருக்கவேண்டும். அடிக்கடி இதைப் பரிசீலனை செய்து மாற்றாமல் இருப்பது நல்லதுதான். ஆனால் ஏதாவது மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை வந்தால் மூன்று நான்கு மாதத்திற்குள் உண்டு இல்லை என்ற முடிவு சர்க்கார் அனுப்பிடவேண்டும். அது நல்ல சூழ்நிலையை உண்டாக்கும். தொழில்துறையை விருத்தி செய்வதற்கு வழி ஏற்படும் என்று சொல்ல விரும்புகிறேன்.

* SRI A. GOVINDASAMY : உப தலைவர் அவர்களே, ஒருதரம் ஒரு பகுதி தொழில் பிரதேசத்திற்கு லாயக்கற்றது என்று நிர்ணயிக்கப் பட்டுவிட்டால் அதை மீண்டும் புனராலோசனை செய்யக் கூடாதென்ற நிலைமை இருக்கக்கூடாது. விருப்பு வெறுப்பினால் செய்துவிட்டிருக்கலாம். தவறாக நிர்ணயிக்கப்பட்டிருந்தால் அதைத் திருத்துவதற்கு வழி இருக்க வேண்டும் என்கிற கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன். ஒரு வீட்டி லுள்ள ஒரு பகுதியை தொழில் நடத்துவதற்கு லாயக்கான பகுதி என்றும், இன்னொரு பகுதியை குடியிருப்புக்குத்தான் லாயக்குள்ளது என்றும் பிரிக் கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. முன்பு அமைச்சராக இருந்த ஸ்ரீ ஏ. பி. ஷெட்டி அவர்களை அழைத்துக் கொண்டுபோய் அதைக் காட்டி யிருக்கிறேன். அப்போது நாங்கள் சொன்ன கோரிக்கையை ஏற்றுக்கொண் டார்கள். ஒருதரம் முடிவு செய்துவிட்டால்—தவறாக இருந்தாலும்— அதற்குப் பரிகாரமே இருக்கக்கூடாது என்பது சரியல்ல. பிற்பாடு சங்கடம் எழக்கூடிய சமயத்தில் அதைப்பற்றிப் பரிசீலனை செய்ய அதிகாரம் இருக்க வேண்டும். அதற்குத் தகுந்த விதி இருக்கவேண்டுமென்று கருதுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது அந்தமாதிரி புன ராலோசனை செய்வதற்கு அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரத்தை துரிதமாக—சாதகமாகவோ பாதகமாகவோ முடிவு கொடுத்துவிடவேண்டு மென்பதைப்பற்றித்தான் ஸ்ரீ செல்வராஜ் பேசினார்கள். அப்படிப்பட்ட புகார் ஏற்படாது இருக்க தக்கநடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லிக்கொண்டு இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

The Government amendment was put and carried.

Clause 113, as amended, was put and carried.

Clause 114.

DEPUTY SPEAKER : The motion is—

"That clause 114 do stand part of the Bill."

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

"(i) In sub-clause (*a*) for the words 'the executive authority' *substitute* 'the executive officer in the case of panchayat town and the commissioner in the case of panchayat villages' and *omit* the word 'and' occurring at the end;

(ii) *For* sub-clause (*b*) *substitute* the following :—

'(*b*) the appeal from the order of the executive officer or the commissioner granting, refusing, revoking or suspending a licence, shall lie to the town panchayat or the panchayat union council as the case may be; and

(*c*) the income derived from fees on licences under this section shall, if received by the panchayat union council, be credited

29th September 1958] [Sri C. Subramaniam]

to the funds of the village panchayats concerned and if received by the town panchayat, be credited to the funds of that town panchayat '."

The amendment was put and carried.

Clause 114, as amended, was put and carried.

Clause 115.

DEPUTY SPEAKER: The motion is—

" That clause 115 do stand part of the Bill."

SRI S. M. ANNAMALAI: Sir, I move—

" (i) To sub-clause (1), *add* the following proviso, namely :—

' Provided the local cess shall be levied only on land revenue paid Rs. 5 and above '.

(ii) In sub-clause (4), in item (*b*) for the words ' two-ninths ' *substitute* the words ' three-ninths '."

The amendment was duly seconded.

SRI V. K. KOTHANDARAMAN: Sir, I move—

" In item (*c*) of sub-clause (4) *insert* the following, namely :—

' Out of the balance of the proceeds of the local cess so collected from every panchayat village in the panchayat union, 25 per cent of the collection from each village shall be credited to the respective village panchayat funds '."

The amendment was duly seconded.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, I move—

" In the Explanation to clause 115 (1), *omit* ' or the surcharge payable under the Madras Land Revenue (Surcharge) Act, 1954 (Madras Act XIX of 1954) '."

DEPUTY SPEAKER: The clause and the amendments are before the House for discussion.

SRI S. M. ANNAMALAI: சட்டமன்றத் தலைவர் அவர்களே, நான் கொடுத்திருக்கக்கூடிய திருத்தம் லாண்டு ரெவின்யூவாக ஐந்து ரூபாய்க்குக் குறைவாகக்கொடுக்கக் கூடியவர்களுக்கு லோகல் செஸ் விதிக்கக் கூடாதென்ற நோக்கத்துடன் கொடுத்திருக்கிறேன். ஒரு ஏக்கர் இரண்டு ஏக்கர் வைத்திருக்கக் கூடிய ஏழைகள் கூட ஐந்து ரூபாய் வரி கட்டவேண்டியிருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கு மேலும் இந்த லோகல் செஸ் போட்டு பாமர மக்களைக் கஷ்டப்படுத்தவேண்டாம் என்ற நோக்கத்துடன் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். இதை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக சிறிய பஞ்சாயத்துகளுக்கு மூன்றில் ஒரு பாகமும் கட்டணம், 45 நயா பைசா, ஒன்பதில் 3 பாகம் 15 நயா பைசா கொடுக்கலாம் என்று இருக்கிறது. குறிப்பாக சிறிய பஞ்சாயத்து 20 நயா பைசா என்றும், பெரிய பஞ்சாயத்துக்கு 10 நயா பைசா என்றும் இருக்கிறது. பெரிய பஞ்சாயத்துகள் பத்து ஆண்டுகளுக்குப் பின்னும் இன்னும் நல்ல வகையில் ரோடு முதலியவற்றில் முன்னேறாமல் இருக்கின்றன.

(Mr. Speaker in the Chair.)

[Sri S. M. Annamalai] [29th September 1958

11–30 a.m. அப்படிப்பட்ட பெரிய பஞ்சாயத்துக்களுக்கும், சிறிய பஞ்சாயத்துக்களுக்கும் கொடுக்கப்படும் அளவில்—நபருக்கு 20 நயா பைசா வீதம்—நிதி கொடுக்கப்பட வேண்டும் என்று கூறும் திருத்தத்தை நான் கொடுத்திருக்கிறேன். அந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

Sri V. K. KOTHANDARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, பஞ்சாயத்து அபிவிருத்தி தொகுதியில் வசூலிக்கப்பட்ட பிரதேச வரியில் எஞ்சியிருக்கும் தொகையில், கிராம மக்களில் ஒவ்வொருவருக்கும் 20 நயா பைசாவிற்குக் குறையாத விகிதப்படி பஞ்சாயத்துக்களுக்கு நிதி அளிக்க வேண்டும் என்று இந்தப் பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விகிதத்தை 25 சதவிகிதமாக ஆக்கவேண்டும் என்று நான் கோருகிறேன். "25 சதவிகிதம் என்றால், அது 12 நயா பைசாவாகத்தான் போகும்" என்று கனம் அமைச்சர் பதில் சொல்லக்கூடும். எனக்குத் தெரிந்த
11–20 a.m. வரையில், நான் கணக்குப்போட்டுத் தீர்மானத்தைச் சொல்கிறேன். பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதியில் வசூலிக்கப்பட்ட பிரசேத வரி மொத்தத்தில், ஒவ்வொரு நபரிடமிருந்தும் ஒரு ரூபாய் வசூலிக்கப்பட்டால் எவ்வளவு தொகை கிடைக்குமோ அவ்வளவு தொகை என்று வைத்துக் கொண்டாலும் ஒவ்வொருவருக்கும் 34 நயா பைசாவிற்குக் குறையாதபடி பஞ்சாயத்துகளுக்கு நிதி அளிக்க முடியும். அதாவது மொத்த வரிப் பணத்தில் 4/9 பங்கு கல்விக்காகச் செலவழிக்கப்படவேண்டும் ; 2/9 பங்கு பஞ்சாயத்து அபிவிருத்திக்காகச் செலவழிக்கப்படவேண்டும். இவை போக பாக்கியிருப்பது 3/9 பங்கு அதாவது சுமார் 34 சதவிகிதம். 34 சதவிகிதம் என்றால் 34 நயா பைசா. ஆனால், பஞ்சாயத்துகளுக்கு 25 சதவிகிதம் நிதி கொடுக்கவேண்டும் என்று தான் நான் சொல்கிறேன். பஞ்சாயத்து அபிவிருத்தி ப்ளாக்கில் வசூலிக்கப்படும் பிரதேச வரியின் மொத்தத்தில் 25 சதவிகிதத்தை பஞ்சாயத்துக்களுக்கு ஒதுக்கிவிட்டு பாக்கியுள்ள தொகையை கல்வி போன்ற காரியங்களுக்காக ஒதுக்கவேண்டும் என்று சொல்கிறேன். மேலும், பஞ்சாயத்தில் வசூலிக்கப்படும் நில வரி, தண்ணீர் வரி போன்ற எல்லா வரிகளின் மூலமும் கிடைக்கும் பணத் தொகைகளை ஒட்டுமொத்தமாக சேர்த்து அந்தத் தொகையில் ரூபாய்க்கு 45 நயா பைசா வீதம் கணக்கிடப்பட்ட தொகையை வருவாயாகத்தரக்கூடிய ஒரு வரியை போடவேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இருக்கும் வரிகளே மிக மிக அதிகமானவை என்று கிராமங்களிலுள்ள விவசாயிகள் சொல்லிகொண்டிருக்கும்போது, மேலும் மேலும் வரிகள் விதிக்கக்கூடாது. மசோதாவில் அதிகமான வரிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. வரி போடாமல் எவ்வாறு அபிவிருத்திக் காரியங்களைச் செய்யமுடியும் என்று கனம் அமைச்சர் கேட்கலாம். கண்டிப்பாக அபிவிருத்தி வேலைகளைச் செய்யவேண்டும். அவைகளைச் செய்வதற்கு சர்க்காருக்கு வருமானம் இருக்கவேண்டும். அதற்காக ஏழை விவசாயிகள் பேரில் வரிகளைச் சுமத்த வேண்டியதில்லை. வருவாய் பெறுவதற்கு வேறு வழிகள் இருக்கின்றன. பஸ் போக்குவரத்துத் தொழிலை பஞ்சாயத்து யூனியன் நடத்தலாம். சினிமாத் தியேட்டர்களை பஞ்சாயத்து யூனியன்கள் நடத்தலாம். பாலங்களை கட்டும் வேலைகளும் இதர பல வேலைகளும் பஞ்சாயத்துக் யூனியன்களால் செய்யப்படலாம். அவைகள் இப்போது கண்டிராக்டர்களிடம் ஒப்படைக்கபடுகின்றன. கண்ட்ராக்டர்கள் கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். மேலும் கண்ட்ராக்டர்களால் கட்டப்படும் பாலங்கள் பல குறுகிய காலத்தில் விழுவதையும் பார்க்கிறோம். அவர்கள் சிமெண்டையும் மணலையும் தகுந்த அளவில் கலக்காததால், அவர்களால் கட்டப்படும் பாலங்களும் கட்டிடங்களும் குறுகிய காலத்தில் விழுகின்றன.

MR. SPEAKER : தாங்கள் கூறும் விஷயங்கள் இப்போது நடக்கும் விவாதத்திற்குப் பொருத்தமானவையாக இல்லை என்று நினைக்கிறேன். விவசாயிகளுக்கு வரி போடக்கூடாது என்று நீங்கள் சொல்லலாம். ஆனால் நீங்கள் இப்போது குறிப்பிட்ட மற்ற விஷயங்கள் இந்த விவாதத்திற்குப் பொருத்தமானவை அல்ல.

29th September 1958]

Sri V. K. KOTHANDARAMAN : பஞ்சாயத்து யூனியன்கள் நான் இப்போது குறிப்பிட்ட தொழில்களை நடத்துவதுடன், இப்போது குறிப்பிட்ட வேலைகளையும் செய்தால் அவைகளுக்கு அதிக வருமானம் வரும். அந்த வருமானத்தைக் கொண்டு அபிவிருத்திக் காரியங்களைச் செய்யமுடியும். எனவே, ரூபாய்க்கு 45 நயா பைசா என்ற விகிதத்தை ரூபாய்க்கு 20 நயா பைசாவாக மாற்ற வேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

*Sri A. GOVINDASAMY : கனம் சபாநாயகர் அவர்களே, கிராமப் பஞ்சாயத்துகளுக்கும் நகரப் பஞ்சாயத்துகளுக்கும் அதிக வருமானம் கிடைக்கச் செய்யும் முறையில் மசோதாவை அமைக்கவேண்டுமென்று நான் கருதுகிறேன். அதற்கான திருத்தங்களை நான் கொடுக்கவில்லை. இருந்தாலும், அதற்கான திருத்தங்களை மசோதாவில் புகுத்த அரசாங்கம் விரும்பினால் இப்போதுகூட அதைச் செய்யலாம் என்பதால் இக்கருத்தை நான் தெரிவிக்கிறேன். அந்த அந்தப் பஞ்சாயத்தில் வசூலிக்கப்படும் மொத்த வரித் தொகையில் ஒரு பகுதி—5 சத விகிதமாவது—அந்த அந்தப் பஞ்சாயத்திற்கு ஒதுக்கப்படவேண்டும். இதை கவனிக்கவேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே, பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுக்கும் நிதி ஒதுக்குவதற்கும் அவைகள் தாங்களே நிதிவசதி செய்துகொள்வதற்கும் வகைசெய்வதற்காகவும் ஒரு தனிக் கமிட்டி நியமிக்கப்பட்டது; அந்தக் கமிட்டி எல்லாவற்றையும் பரிசீலித்து யோசனைகள் கூறியது. அந்த யோசனைகளின் அடிப்படையில்தான் இந்த மசோதா தயாரிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு தயாரிக்கப்பட்டிருக்கும் மசோதாவில் ஏதாவது ஒரு நிதி இனத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டு அந்த இனத்திற்கான தொகையை குறைக்கவேண்டுமென்றோ அந்த இனம் சம்பந்தப்பட்ட பிரிவை மாற்ற வேண்டுமென்றோ கூறுவது சரியல்ல. ஏனென்றால், ஏதாவது ஒரு பிரிவில் மாறுதல் செய்தாலும் எல்லாப் பிரிவுகளும் பாதிக்கப்படும். நிதி ஒதுக்கல் முறையை முழுவதும் பரிசீலித்து எவ்வாறு மாறுதல் செய்யவேண்டுமென்று சொன்னால், அதை கவனித்து அவசியமான மாறுதல்களைச் செய்யலாமே தவிர ஒரு பகுதியில் மாத்திரம் மாறுதல் செய்வது உசிதமல்ல. ஆகவே கனம் அங்கத்தினர்களின் யோசனைகள் பல நல்லவையாக இருந்தாலும், அவைகளை தனியே பரிசீலித்து முடிவுசெய்வதற்கில்லை.

ஐந்து ரூபாய்க்கு மேல் வரி செலுத்துபவர்களிடமிருந்து ஸர்சார்ஜ் வசூலிக்கக்கூடாதென்று ஸ்ரீ எஸ். எம். அண்ணாமலை கூறினார். இந்தப் பிரச்சனையில் நாம் முக்கியமாக ஒரு விஷயத்தை கவனிக்க வேண்டும். இப்போது கிராமங்களில் எத்தனை பேர் நிலம் படைத்தவர்களாக இருக்கிறார்கள் என்று பார்க்கவேண்டும். ஒரு கிராமத்தில் ஒரு ரூபாய் கிஸ்தி செலுத்துபவர்களை எடுத்துக்கொண்டாலும், அவர்களில் 20 சதவிகிதத்தினர்தான் பணக்காரர்கள், மற்ற 80 சதவிகிதத்தினர் ஏழைகள். ஆகவே 5 ரூபாய் கிஸ்தி செலுத்துபவர்களாக இருந்தாலும் ஒரு ரூபாய் கிஸ்தி செலுத்துபவர்களாக இருந்தாலும் அவர்களில் பணக்கார காரர்களாக இருப்பவர்கள் ஒரு சிலர்தான். அதற்காக 5 ரூபாய்க்கு மேல் கிஸ்தி செலுத்துபவர்களிடமிருந்து வரி வசூலிக்காமல் இருந்தால் கிராம மக்களுக்கு வசதி செய்துகொடுப்பதற்கு போதிய பணம் கிடைக்காது. 5 ரூபாய் கிஸ்தி செலுத்துபவர்கள் தங்கள் வசதிகளை ஒன்றுமேயில்லாத ஏழைகளுக்குப் பகிர்ந்துகொடுக்கவேண்டும். நம் நாட்டில் ஒரு சிலரைத் தவிர எல்லோருமே ஏழைகள்தான். ஏழைகளுக்கு வரி வேண்டியதில்லை என்றால், வசதியில்லாத எல்லோருக்கும் வசதி செய்துகொடுக்க முடியாது. 5 அல்லது 7 ரூபாய்க்குக் கீழே கிஸ்தி செலுத்துபவர்களுக்கு வரி போடக் கூடாதென்று சொன்னாலும் போதிய வருவாய் கிடைக்காது.

[Sri C. Subramaniam] [29th September 1958

அடுத்தபடியாக, ஸ்ரீ கோதண்டராமன் அவர்கள் விளக்கிய கணக்கைக் கேட்டேன். அவர் இங்கே மட்டுமின்றி வேறொரு இடத்திலும் இந்தக் கணக்கைக் குறிப்பிட்டிருக்கிறார். எனக்குத் தெரிந்தவரையிலும் நான் போட்ட கணக்குத்தான் சரியாக இருக்கிறது. சரியான விடை ஒன்று தான் இருக்கும். தப்பான விடைகள் பல இருக்கும். என் கணக்குப்படி பஞ்சாயத்திற்கு அதிக வருவாய் வரும். ஸ்ரீ கோதண்டராமன் அவர் களுடைய கணக்குப்படி பஞ்சாயத்திற்கு வருவாய் குறைவாகத்தான் வரும். ஆதலால் தான் ஸ்ரீ கோதண்டராமன் சொல்வதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. பாலங்கள் கட்டுவது போன்ற வேலைகள் சர்க்கா ரால் காண்ட்ராக்டர்களிடம் ஒப்படைக்கப்படவேண்டாம் என்றும் அவைகளை பஞ்சாயத்துக்களே செய்யலாம் என்றும் ஸ்ரீ கோதண்டராமன் சொன்னார். சில பஞ்சாயத்துக்களில் அது சாத்தியமாக இருக்கும். சில பஞ்சாயத்துக் களால் அந்த வேலைகளை சரிவரச் செய்யமுடியாது. முடிந்த இடங்களில் பஞ்சாயத்துக்களே செய்யலாம். எனவே ஒரேயடியாக பஞ்சாயத்துக்களோ பஞ்சாயத்து யூனியன்களோ இந்த வேலைகளைச் செய்யவேண்டும் என்று மசோதாவில் கூற முடியாது. மேலும் டிபார்ட்மெண்டுகள் கட்டிய பாலங் கள் வீழ்ந்தால் அப்படிப்பட்ட பாலங்களைக் கட்டியதற்குப் பொறுப்பாளி யார் என்று கண்டுபிடிக்க முடியாது. எங்கெங்கு முடியுமோ அந்தந்த இடங்களில், அதிகச் செலவு ஆகாமல் இருந்தால் அவர்களே நேரடியாகச் செய்யமுடியும். ஆகவே, ஒவ்வொரு வேலையையும் அனுசரித்து முடிவு எடுக்கவேண்டியதாக இருக்கிறது.

Sri A. GOVINDASAMY : இப்பொழுது பஞ்சாயத்து போர்ட் வேலைகளை சில கண்ட்ராக்டர்கள் எடுத்து நடத்துகிறார்களே, அதைப்பற்றி அரசாங்கம் என்ன கருதுகிறது ?

The Hon. Sri C. SUBRAMANIAM : சில இடங்களில் நன்றாக வேலை செய்கிறார்கள். சில இடங்களில் இப்படி செய்வதில்லை. அங்கு வேலை செய்யும் ஆட்களும் நம் மக்கள்தான். கண்ட்ராக்ட் எடுத்து வேலை செய்பவர்களும் நம் மக்கள் தான். அதிலும் பஞ்சாயத்து என்ற பெயரை வைத்துக் கொண்டு லாபம் சம்பாதிக்க வேண்டுமென்று வேலை செய்தால் வேலை மோசமாகப்போய் விடுகிறது. ஆகவே மக்களுக்கு நாணயம் எந்தளவு இருக்கிறதோ அந்தளவு வேலையில் தரமும் உயரும். மாற்றிப் போட்டு விடுவதால் நாணயம் உயர்ந்து விடாது. ஆகவே இங்கி ருக்கக்கூடிய பல்வேறு திருத்தங்களும், ஏதோ தனிப்பட்ட ஒரு பகுதியை மட்டும் எடுத்து மாறுதல் செய்ய வேண்டுமென்று இருப்பதால் அதை சர்க்கார் ஒத்துக்கொள்ள முடியாமல் இருக்கிறது. போதிய அளவு பஞ்சாயத்துகளுக்கும், பஞ்சாயத்து கௌன்ஸில்களுக்கும் நிதி ஒதுக்குவதுடன், அவைகள் இன்னும் அதிக காரியங்களை செய்ய வேண்டு மென்று நினைத்தால் அவர்களுக்கும் இன்னும் ஓரளவு முயற்சி எடுத்துக் கொண்டு, வரி விதித்து அவர்கள் சௌகரியத்தை அதிகப்படுத்திக்கொள் ளும்போது அந்தளவு சர்க்காரும் உதவும்படி “ மாச்சிங் கிரண்ட் ” (Matching Grant) வைத்திருக்கிறோம். எல்லாவிதமான வரி களையும் நாம் போட்டு அவர்கள் கையில் அதைச் செலவு செய்யும் பொறுப்பை மாத்திரம் விட்டு விடுவதா? இல்லை அவர்கள் அதிகம் செலவு செய்ய வேண்டுமென்று வரும்போது அவர்கள் ஓரளவு வரி விதிக்கும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமா என்பது தான் பிரச்னை. அதில், எது சரி என்பதை பற்றி எனக்கு சந்தேகமேயில்லை. ஆகவே, இந்த நிதித் திட்டத்தை அப்படியே ஒப்புக் கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

The amendments of Sri S. M. Annamalai and Sri V. K. Kothandaraman were put and lost.

The Government amendment was put and carried.

Clause 115, as amended, was put and carried.

29th September 1958]

Clause 116.

MR. SPEAKER : The motion is—

"That clause 16 dost and part of the Bill."

SRI S. M. ANNAMALAI : Sir, I move—

"*After* the words 'Land revenue' *add* the words 'not less than five rupees'."

MR. SPEAKER : The amendment falls through for want of a seconder.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

"In clause 116, *for* the word 'tax' *substitute* the words 'local cess'."

The amendment was put and carried.

Clause 116, as amended, was put and carried.

Clause 117 was put and carried.

Clause 118.

MR. SPEAKER : The motion is—

"That clause 118 do stand part of the Bill."

SRI N. K. PALANISAMI : Sir, I move—

"In the clause, *for* the words 'union council a sum . . . . . . of that block', *substitute* the figure and words '25 per cent of the total revenue collected in that village'."

SRI N. MARUDACHALAM : I second the amendment, Sir.

MR. SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

SRI N. K. PALANISAMI : கனம் சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் பஞ்சாயத்துகளுக்கும், பஞ்சாயத்து யூனியன் களுக்கும் எந்த அளவிற்கு வருமானம் இருக்கிறது. நாம் சொல்லக் கூடிய விஷயங்களை எந்த அளவு செய்யும் என்பதை திட்டவட்டமாக கூறியி ருக்க முடியும். எற்கனவே கிளாஸ் 2 பஞ்சாயத்தை எடுத்துக் கொண் டால் வீட்டு வரி போடவும், வேறு எவ்வளவோ வரிகள் போடவும் அதிகாரம் இருந்தும் கூட 25% பஞ்சாயத்துகளுக்கும் வரி போட கஷ்டமாகயிருக்கிறது. காரணம், அதிகப்படியான எழை மக்கள் இருக்கும் கிராமங்களில் சில வீடுகளுக்கு மட்டுந்தான் வரி போட முடிகிறதே தவிர பெரும்பாலான வீடுகளுக்கு வரி போடுவதில்லை. இங்கு சர்க்கார் கொடுத்திருப்பது. "ஹௌஸ் டாக்ஸ்" க்குக் கூட மாச்சிங் கிரூண்ட் கொடுப்பதாக சொல்லி யிருக்கிறார்கள். ஆகவே, சிறிய பஞ்சாயத்துகள் அதனால் எந்த வித பயன் அடையும் என்று சொல்ல முடியாது. ஸ்டாம்ப் ஆக்ட் பிரகாரம் ஒவ்வொரு கிராம பஞ்சாயத்திற்கும் வருடந்தோறும் குறிப்பிடத் தகுந்த வருமானம் வந்து கொண்டிருந்தது. ஆனால் இதைப் பொதுப் படுத்தி பஞ்சாயத்து யூனியன் பஞ்சாயத்துகளுக்கு பிரித்துக் கொடுக்கும் முறையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஹௌஸ் டாக்ஸ், லோக்கல் செஸ், சர் சார்ஜ் என்று மூன்று வரிகள் போட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் சர்க்காரும் ஓரளவு கொடுப்பதாக சொல்லியிருக்கிறார்கள். 11-30 a.m.

அவர்களுக்கு "ரெஸ்பான்ஸிபிலிட்டி " மட்டும் கொடுக்கும் போது சர்க்கார் அதிகாரங்களை மட்டும் கொடுக்க மறுத்து விட்டார்கள். வெல்லப் பிள்ளை யாரைக் கிள்ளி அவருக்கு வெல்லம் நைவேத்தியம் செய்வது போல் தான் இருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டப் பிரகாரம் பாப்புலேஷன் பேஸிஸில் எடுத்துக்கொண்டு, தனிப்பட்ட நபருக்கு இரண்டு ரூபாய் செலவு செய்யவேண்டும். இங்கு, ஒரு ரூபாய் தான் கொடுப்பதாக சொல்லி யிருக்கிறார்கள். இந்த நிலையில் சாதாரண பஞ்சாயத்து போர்ட்டுகளுக்கு 200, 300 ரூபாய்க்கு மேல் வருமானம் வராது. இதை வைத்துக் கொண்டு எப்படி காரியங்களை நடத்துவது ? அதே போல் பஞ்சாயத்து கௌன்ஸிலை எடுத்துக்கொண்டால் அவர்களுக்கு எந்த அளவு இதனால் வருமானம் வரப் போகிறது என்று தெரியாது. ஆகவே, நான் சொல்வது, ஏற்கனவே, " கமிட்டி ஆன் ப்ளானிங் ப்ராஜெக்ட் ஸ்கீம்ஸ் " நிலவரியில் இருந்து 50% வரையில் கொடுக்கலாம் என்று சிபார்சு செய்திருக்கிறது. அந்த அடிப்படையை விட்டு விட்டு நிலவரியில் 25% யாவது பஞ்சாயத்து போர்டுகளுக்கு கொடுக்கவேண்டுமென்பதுதான் என் திருத்தம். இல்லை யென்றால், நாம் சட்டமியற்றினாலுங்கூட அதைச் சரிவர அமுலுக்குக் கொண்டு வர முடியாது. ஆகவே, நிலவரியில் கால் பங்காவது பஞ்சாயத்து போர்டுக்குக் கொடுக்க வேண்டும். ஆகவே, இதை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI J. MATHA GOWDER : இந்த நிலவரியில், பஞ்சாயத்து யூனி யன்களுக்கு ஜனத்தொகை அடிப்படையில் தலைக்கு ஒரு ரூபாய் என்று கணக்கிட்டுக் கொடுத்தால், மலைப் பிரதேசங்களில் ஒரு ரூபாய் என்றால், எப்படி வேலை செய்ய முடியும் என்பதை நான் பலமுறை இந்த சபையில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். சாதாரணமாக சமவெளிப் பிரதேசங்களில் ரோடு போடுவது அல்லது வேறு வேலைகள் செய்வ தென்றால் குறைவான செலவில் செய்து விடலாம். ஆனால் மலைப் பிரதேசங்களில் மண்வெட்டி ரோடு வேலை செய்வதற்குக் கூட ஆயிரக்கணக் கான ரூபாய் செலவு ஆகும்போது கிராமப் பஞ்சாயத்தினிடம் தலைக்கு ஒரு ரூபாய் என்று கொடுத்தால் எப்படி வேலை செய்வது என்று புரிய வில்லை. அதைப்பற்றி சர்க்கார் நன்கு சிந்தித்துப் பார்த்து மலைப்
11–40 a.m. பிரதேசங்களுக்கும் ஒரு ரூபாய் என்ற அடிப்படையை மாற்றி வேறு ஏதாவது ஒரு பரிகாரம் செய்ய வேண்டும். இல்லையென்றால் எந்த நோக்கத்தோடு நீங்கள் இதைப் போடுகிறீர்களோ அது சமவெளிப் பிர தேசங்களுக்குப் பொருந்தும். அவர்கள் இதனால் பயன் அடைய முடியும். ஆனால் மலைப் பிரதேசங்களில் இதனால் எந்த விதமான அபிவிருத்தியும் செய்ய முடியாது. ஆகவே, ஒரு ரூபாய் என்றிருப்பதை இரண்டு ரூபாய் என்றாவது அதிகப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : முதன் முதலாக, மாதா கௌடர் அவர்கள் நீலகிரியைப் பொறுத்த வரையில் சலுகைகளைக் கூட்ட வேண்டுமென்று சொன்னார்கள். அவர்களுக்கும் தலைக்கு ஒரு ரூபாய் என்று கொடுத்தால் போதுமானதாக இருக்காது என்று சொன்னார்கள். அந்த நிலையை உணர்ந்து இதைப் பரிசீலித்த கமிட்டியார் அதற்காக சிபார்சு செய்திருக்கிறார்கள் என்பதை அறிக்கையைப் படித்துப் பார்த்தால் தெரியும். இந்த பில்லில் உள்ள மற்ற ஷரத்துக்களைப் பார்த்தாலும் அது புலனாகும். முன்னேறியிருக்கும் பகுதிகள், பின்னடைந்திருக்கும் பகுதிகள் என்று, ஏ, பி, ஸி, டி என்று நான்காகப் பிரித்திருக்கிறார்கள். " டி ", ரொம்பவும் பிற்போக்காகவுள்ள பகுதி. அதில் 80% அதிக மாகக் கூடிய செலவை சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறார்கள். மற்றயிடங்களில் 50%-ல் இருந்து ஆரம்பமாகிறது. ஆகையினால் பிற்போக்காக இருக்கும் பகுதிகளை எடுத்துக்கொண்டு அவை களுக்கு அதிகமான சலுகை கொடுக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. அடுத்தபடியாக கனம் அங்கத்தினர் பழனிசாமி அவர் கள் சொன்னதைக் கேட்டு ஆச்சரியமாக இருக்கிறது. கணக்குத் தெரியாமல் சில கருத்துக்களைத் தெரிவிக்கும் போது இந்த விதமாக இருக்கும் என்பது அவர்கள் சொன்னதிலிருந்து தெரிய வந்தது. அவர்கள் சொல்வது

29th September 1958] [Sri C. Subramaniam]

இப்போது ஒரு ரூபாய் என்று இருப்பதை எட்டு அணு என்று கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இதனுல் அந்தப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கஷ்டங்கள் ஏற்படும். இந்தத் தொகை நில வரியிலிருந்து தான் கொடுக்கப்படுகிறது. இவ்விதம் கொடுக்கப்படுவதை பாதி கொடுத்தால் போதும், அதாவது 25% கொடுக்க வேண்டும் என்று சொன்னதற்குப் பதிலாக கூடுதலாக கொடுக்க வேண்டும் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் சிபாரிசு செய்திருந்தால் நல்லதாக இருந்திருக்கும். ஆகவே இப்போது ஒவ்வொரு இடத்திற்கும் தகுந்த விதத்தில் இவ்வளவு ரூபாய் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்த கிளாஸ் இருக்கிறது என்பதை இப்போதாவது கனம் அங்கத்தினர் அவர்கள் தெரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

The amendment was, by leave, withdrawn.

Clause 118 was put and carried.

Clause 119 was put and carried.

Clauses 120 *to* 122.

MR. SPEAKER : The motion is—

"That clauses 120 to 122 do stand part of the Bill."

SRI A. GOVINDASAMY : கனம் சபாநாயகர் அவர்களே, உடனடியாக இதை நிறைவேற்றவேண்டாம் என்று நான் சொல்ல வரவில்லே. இதில் குறிப்பாக ஹவுஸ் டாக்ஸ் என்றிருப்பதில் கூரை வீடுகளுக்கு இதிலிருந்து விதி விலக்கு அளிக்க வேண்டும் என்பது தான் என் வேண்டுகோள். இந்த ஷெட்யூலில் 100 சதுர அடிக்கு 3 அணுவிலிருந்து 8 அணு வரைக்கும் கொடுக்க வேண்டும் என்றிருக்கிறது. இதைப்பற்றி பின்னுல் பார்த்துக்கொள்ளலாம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடும். இருந்தாலும் இந்த வரியில் 1 அணுவிலிருந்து 4 அணு வரைக்கும் கொடுக்க வேண்டும் என்று வைத்துக்கொள்ளலாம். மண் தீர்வை கூட கொடுக்க முடியாமல் இருக்கும் பல ஏழை விவசாயிகளுக்கு இது மிக சௌகரியமாக இருக்கும், ஆகவே இவர்களுக்கு இந்த வரியிலிருந்து விதிவிலக்கு கொடுக்க வேண்டும் என்பது தான் என் நோக்கம்.

SRI M. S. SELVARAJAN : சபாநாயகர் அவர்களே, இதற்கு முன்பு, நான் தண்ணீர் தீர்வையை ஹவுஸ் டாக்ஸோடு சேர்க்க வேண்டும் என்கின்ற பிரச்னேயை எழுப்பினேன். அதைப்பற்றி அரசாங்கத்தின் கருத்து என்ன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கவில்லே. இப்போது வீட்டு வரி எவ்வளவு இருக்கின்றதோ அதே சதவிகிதம் தண்ணீர் தீர்வையாகவும் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதாவது 50 கூடுதலாக கொடுக்க வேண்டும் என்று இருந்தால் 4 அணு வீட்டுவரி கொடுக்கக்கூடிய ஒரு ஆள் எட்டு அணு கொடுக்க வேண்டும். அதே நேரத்தில் 50 ரூபாய் வீட்டுவரி கொடுக்கக்கூடியவர்கள், தண்ணீர் தீர்வை 100 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. இது மிகுந்த பாரபட்சமானது. இவ்விதம் கொடுக்கக்கூடியவர்கள் பஞ்சாயத்துகளில் அதிகம் பேரைக் காண முடியாது. ஆகவே இதை மாற்றுவதற்கு ஒரு வழி இல்லேயா என்பதைப்பற்றி முன்பே ஆலோசிக்கப்பட்டது. அரசாங்கமும் இதைப்பற்றி சர்ச்சை செய்து வந்திருக்கும் என்று நம்புகிறேன். ஆகவே இந்த முறையை மாற்றி அவரவர்களுடைய தண்ணீர் உபயோகத்திற்குத் தகுந்தபடி தீர்வை வசூலிக்கக்கூடிய ஒரு வழியைக் கொண்டு வர வேண்டும். அவ்விதம் இருந்தால்தான் பாரபட்சமில்லாமல் இருக்கும் என்று நினைக்கிறேன். ஆகவே இந்த முறையில் ஒரு வழியை வகுப்பார்கள் என்று நான் நினைக்கிறேன்.

[29th September 1958

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வீட்டு வரி விஷயத்தில் பல தவறுகள் இப்போது நடந்துகொண்டிருக்கின்றன. இனிமேலாவது இவ்விதமான தவறுகள் நடைபெருமல் இருப்பதற்கு வேண்டிய விதிகளைச் செய்ய வேண்டும் என்பதற்காகத் தான் இதைச் சொல்ல ஆசைப்படுகிறேன். வீட்டு வரி வசூலிப்பதற்கு அச்சிட்ட ரசீதுகள் பஞ்சாயத்துகளுக்கு வழங்கப்படுகின்றன. இது இன்ஸ்பெக்டர் ஆபீஸிலிருந்து கொடுக்கப்படுகிறது. முதலாவது 10 ரசீதுகளுக்கு இண்டன்ட் கொடுத்து வாங்குகிருர்கள். பின்னுல் மறுபடியும் 10 ரசீதுகள் வாங்குகிருர்கள். இவ்விதம் இரண்டாவது ரசீதின் படி வாங்குகின்ற வரிகளை கணக்கில் வரவு வைப்பதில்லை. பஞ்சாயத்து பிரஸிடெண்டோ அல்லது இதைப் பரிசீலனை செய்கின்ற அதிகாரிகளோ இதைச் சரியானபடி தணிக்கை செய்வதில்லை. இதற்கென்று சரியான விதத்தில் கணக்குகளோ புத்தகங்களோ இல்லாமல் இருப்பதினுல் இதைப்பற்றி ஒன்றும் கண்டு பிடிக்க முடியாத நிலையில் இருக்கிறது. சிலர் ரசீதைக் காட்டி நான் முன்னுல் வரி கொடுத்தாய் விட்டது என்று சொன்னுல் தான் அதை ஒப்புக்கொள்ளக்கூடிய முறையில் இருந்து வருகிறது. உதாரணமாக ஆட்டயாம்பட்டி பஞ்சாயத்தில் இவ்விதம் 200 ரசீதுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்விதம் இருநூறு ரசீதிலும் கையெழுத்து போடப்பட்டிருக்கிறது. இந்த ரசீதுகள் எல்லாம் பஞ்சாயத்து ஆபீஸரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. ஆனுல் கணக்கில் இந்தப் பணம் வரவு வைக்கவில்லை. இதன் மூலம் சுமார் 4,000 ரூபாய் வரையிலும் மோசடி செய்யப்பட்டிருக்கிறது. இவ்விதம் டுப்ளிகேட் ரசீது போட்டுக் கொடுப்பவர்களின் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்றுல் சில சட்ட நிபுணர்கள் இவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்க முடியாது என்று சொல்லிவிடுகிருர்கள். ரசீதுகளில் பில் கலெக்டர் கையெழுத்து இருக்கும், சில ரசீதுகளில் பஞ்சாயத் பிரஸிடண்டின் கையெழுத்து இருக்கும். இவ்வாருக இருப்பதினுல் யார் இதற்கு உத்தரவாதம் என்பதை நிர்ணயம் செய்ய முடியாது என்று சொல்லிவிடுகின்றுர்கள். பஞ்சாயத்தின் ஸீல் இருந்தும் கூட இதன் பேரில் நடவடிக்கை எடுக்க முடியாது என்று சொல்லிவிடுகிருர்கள். இதனுல் அங்குள்ள மக்கள் பாதிக்கப்படுகின்றுர்கள். இதனுல் மக்கள் சர்க்காரின் பேரில் குற்றம் சொல்லுவதற்கு ஏதுவாகிறது. ஆகவே ரசீதில் யார் கையெழுத்து போட்டிருக்கிருர்களோ அவர்கள் அந்தப் பணத்திற்குப் பொறுப்பு என்கிற முறையைக் கொண்டு வரவேண்டும். அவ்விதம் இல்லாததின் காரணமாகத்தான் இன்றைக்கு இவ்விதம் மோசடி செய்தவர்களின் பேரில் நடவடிக்கை எடுக்க முடியாமல் ஆகிறது. இதனுல் கிராம வாசிகள் மிகவும் வேதனையோடு இருந்து கொண்டிருக்கிருர்கள். இதை யாரிடத்தில் சென்று சொல்லுவது என்று தெரியாமல் இருந்து கொண்டிருக்கிருர்கள். ஆகவே வசூல் செய்யப்படுகிற பணத்திற்கு யார் ஜவாப்தாரி என்பதை நிர்ணயிக்க வேண்டும். ஆகவே இந்த விதியில் அழுத்தம் திருத்தமாக தவறு செய்கின்றவர்கள் யாராக இருந்தாலும் சரி, பில் கலக்டராக இருந்தாலும் சரி, பிரஸிடெண்டாக இருந்தாலும் சரி, யாருடைய கையெழுத்து ரசீதில் இருக்கின்றதோ அவர்கள் பேரில் கடுமையான நடவடிக்கை எடுத்து தண்டனை கொடுப்பதற்கு வழி இருந்தால்தான் பொதுமக்களுடைய பணத்திற்குத் தகுந்த பாதுகாப்பு இருக்கும். ஆகவே இதற்குத் தகுந்த முறையில் விதிகளை அமைப்பதற்கு வேண்டிய திருத்தங்கள் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே, இது மாதிரி வரிவசூல் செய்வதிலே மோசடிகள் சில இடங்களிலே
11-50 a.m. ஏற்படத்தான் செய்யலாம். அது ஏதோ பெருவாரியாக இருக்கிறது என்று எண்ண வேண்டியதில்லை. ஆட்டையாம்பட்டி விஷயத்தைப்பற்றி எனக்கு விவரங்கள் தெரியாது. சர்க்காரும் இதைக் கவனித்து, ஆட்டையாம்பட்டி போன்ற தனிப்பட்ட பஞ்சாயத்துக்களில் நடைபெற்றவைகளை நன்கு விசாரித்து, மற்ற இடங்களில் இது மாதிரி நடைபெருமல் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும். எவ்வளவு விதிகளைப் போட்டாலும், அவைகளையெல்லாம் மீறி எப்படி மோசடி செய்தார்கள் என்று கண்டு பிடித்து அந்த ஓட்டையை அடைத்தால், அதற்கும் அவர்கள் இன்னெரு

29th September 1958] [Sri C. Subramaniam]

ஒட்டையை ஏற்படுத்திக்கொள்கிருர்கள். இது மனித இயற்கை. இதை வைத்துக்கொண்டு எல்லாமே மோசமாக நடந்துகொண்டிருக்கிறது என்று எண்ணக்கூடாது.

அடுத்தபடியாக கனம் செல்வராஜ் அவர்கள் தண்ணீர் வரியைப் பற்றி, குறிப்பிடும்போது அதை வீட்டு வரியையொட்டி வசூலிப்பதால் சில அநீதிகள் ஏற்படுகின்றன என்று சொன்னுர்கள். நீதி எது ? அநீதி எது ? என்றல் நாம் கொண்டிருக்கக்கூடிய கொள்கையைப் பொருத்தது இதிலுள்ள நீதியும் அநீதியும். நன்ருக வசதியுள்ளவர்களிடமிருந்து வரியை வசூலித்து, வசதியில்லாதவர்களுக்கெல்லாம் வசதி செய்து கொடுக்க வேண்டுமென் பதுதான் இப்போதுள்ள சமூக நீதி. பெரிய வீடு வைத்திருப்பவர்கள் நல்ல வசதியுள்ளவர்கள். பெரிய வீடு வைத்திருப்பவர்கள் நல்ல சொத் துடையவர்கள், ஆகையால் அவர்கள் தண்ணீருக்கும் ஒரு பகுதி, அதிக வரி கொடுக்க வேண்டும். அதே மாதிரி குறைவான வசதியுள்ள வர்கள், குறைவான சொத்துள்ளவர்கள், அவர்கள் 4 அணு செலுத்தி னுலும், 2 அணு செலுத்தினுலும் போதும் என்று வைத்திருக்கிறேம். அவர்களால் அதற்கு மேல் கொடுக்க முடியாது. போதுமான வரி கொடுக்கவில்லை, அதனுல் தண்ணீர் கொடுக்க முடியாது என்றுல் அடிப் படையான சௌகரியங்களைக் கூட ஏழைகளுக்குச் செய்து கொடுக்க முடி யாது. இந்த வரி விதிப்பதிலே நியாயம் இருக்கிறதா இல்லையா என்று பார்க்கும்போது இப்போது இருக்கும் சமூக நீதிக்கொப்ப இருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது. அதையும், மறுபடியும் கஷ்டங்கள் இருக்குமாளுல் பரிசீலனை செய்து பார்க்கலாம்.

அடுத்தபடியாக கனம் கோவிந்தசாமி அவர்கள் சொன்ன யோசனை குடிசைகளுக்கு 3 அணுவிலிருந்து 8 அணு வரையில் என்றிருப்பதை 1 அணுவிலிருந்து 4 அணு வரை என்று போடவேண்டும் என்பது. இன்றைக்கு எவ்வளவு குறைவாக சம்பாதிப்பவராக இருந்த போதிலும், இந்த 3 அணு முதல் 8 அணு வரை என்று இருப்பது அவர் ஒரு சினிமாவுக்குக் கொடுப்பது கூட ஆகாது. அப்படி இருக்கும் போது வருஷத்திற்கு 3 அணு முதல் 8 அணு கொடுப்பது பெரிய பளுவாக இருக்காது என்று எனக்குத் தோன்றுகிறது. ஆகையால் 1 அணுவி லிருந்து 4 அணு வரை என்று போடவேண்டுமென்று வாதத்திற்கு வேண்டுமானுல் சொல்லலாமே தவிர, 3 அணுவிலிருந்து 8 அணுவரை என்று இருப்பதனுல் யாருக்கும் பளுவாக இருக்கும் என்று இந்தக் காலத்தில் ஏற்றுக்கொள்ள முடியாது.

SRI S.M. ANNAMALAI : ஆன் எ பாய்ண்ட் ஆப் இன்பர் மேஷன், ஸார், இந்த வரி போடுவதைப் பற்றி நிதி அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள் 3 அணுவிலிருந்து 8 அணு வரை கொடுக்கலாம் என்று. இப்போது 100 சதுர அடிக்கு 3 அணு முதல் 8 அணு வரை போடலாம் என்று இருக்கிறது; ஒரு சிறு வீடாக இருந்தாலும், அது 36 அடி நீள மும், 30 அடி அகலமும் இருக்க வேண்டும். அந்த வீட்டுக்கு ஏறத் தாழ ரூ. 4-2-0 கட்ட வேண்டிய நிலைமை இருக்கிறது. இப்போது கூட பெரிய பஞ்சாயத்துக்களில் ஏறத்தாழ அவர்கள் ஒரு ரூபாய் செலுத்தி வரு கிருர்கள். இப்போது வரியை உயர்த்தி ரூ. 4-2-0 கொடுக்க வேண்டு மென்றுல் முடியாத காரியம். நான் இதைப் பற்றிய ஷெட்யூலுக்குத் திருத்தம் கொடுத்திருக்கிறேன். அப்போது அதைப் பற்றிப் பேசலாமென நினைக்கிறேன்.

MR. SPEAKER : அப்போது பேசிக் கொள்ளலாம்.

SRI M. S. SELVARAJAN : கனம் நிதியமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது வசதியுள்ளவர்கள் பெரிய வீட்டில் வாழ்வதாகச் சொன்னுர்கள். வசதி மிகுந்தவர்களே, குடிசை வீட்டில வசித்து இதிலிருந்து தப்பித்துக்கொள்ளவதற்கு வழியில்லையா ?

Clauses 120 to 122 were put and carried.

Clause 123.

MR. SPEAKER : The motion is—

" That clause 123 do stand part of the Bill."

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

" In clause 123, *omit* ' 116 and '."

The clause will read ' . . . in pursuance of sections 119 to 122.'

The amendment was put and carried.

Clause 123, as amended, was put and carried.

Clause 124.

MR. SPEAKER : The motion is—

" That clause 124 do stand part of the Bill."

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

" (i) In clause 124, *re-number* sub-clauses (3) and (4) as sub-clauses (4) and (3) respectively.

(ii) In the beginning of sub-clause (3) as re-numbered *insert* ' (*a*) ' and for the word ' panchayats ' *substitute* ' village panchayats ';

(iii) *after* sub-clause (3) (a) *add* the following :—

' (*b*) The amounts collected in any panchayat town as surcharge on the duty on transfers of property under this section, shall be credited to the town panchayat fund '."

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move—

" In sub-clause (4) *for* the words ' land revenue', *substitute* the word 'population'."

The amendment was duly seconded.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், இந்த நிலவரி எந்த அளவிற்கு வசூல் ஆகிறதோ, அதற்குத் தகுந்தாற்போல விநியோகம் செய்வதாக இதிலே இருக்கிறது. நான் கொடுத்திருக்கிற திருத்தம், ஒவ்வொரு கிராமத்திலேயும் ஒரே மாதிரியாக வசூல் ஆகும் என்று எதிர்பார்க்க முடியாது, கொஞ்சம் வசதி படைத்த கிராமத்திலே இருக்கக் கூடியவர்கள் அடிக்கடி நிலம் வாங்கிக் கொண்டேயிருப்பார்கள், அல்லது அடகு வைத்துக் கொண்டேயிருப்பார்கள், அதனால் அடிக்கடி கோர்ட்டு களிலே ரிஜிஸ்டர் ஆவதன் மூலமாக இந்த வரியினால் வருமானம் அதிகப்படியாக வரக் கூடிய கிராமமும் உண்டு, மிக மிகப் பின் தங்கி யிருக்கக்கூடிய பல கிராமங்கள் இருக்கின்றன, ஆகையால் ஒவ்வொரு கிராமத்திலேயும் உள்ள ஜனங்கள் வீதாசார அடிப்படையில் விநியோகம் செய்யப்படவேண்டும் என்பதாகும். ஆகவே எல்லா கிராமங்களிலும் இருக்கக் கூடியவர்கள் நம்முடைய சகோதரர்கள், நம் மக்கள் என்ற அடிப்படையில் இதை விநியோகிக்க கனம் அமைச்சர் அவர்கள் எனது திருத்தத்தை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

29th September 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தத் திருத்தத்தை ஒப்புக் கொள்ள முடியாததற்கு நான் வருந்துகிறேன். லாண்ட் ரெவின்யூவிலிருந்து கிடைக்கக்கூடிய வருமானம் பாபுலேஷன் பேஸிஸில் கொடுக்கப்படுகிறது. இங்கு டிரான்ஸ்பர் ஆப் பிராபர்ட்டி, அதாவது சொத்து விற்பதிலேயும், வேறு மாற்றுதல் செய்வதிலேயும் கிடைக்கக் கூடிய வரியை எப்படிப் பகிர்ந்து கொள்வது ? அங்கங்கே கிடைக்கக் கூடிய வரிகளை அங்கங்கே கொடுக்கக் கூடியது வழக்கம். இன்றைக்கு சேர்ந்து கொடுக்க வேண்டுமென்று எதற்காகச் சொல்லியிருக்கிறதென்றால், ஒரு வருஷத்திலே சில இடங்களில் நில மாற்றம் இருக்காது, சில இடங்களில் இருக்கும். வருஷா வருஷம் எவ்வளவு வருடபடி வரும் என்று நிர்ணயிப்பது கஷ்டம். வருஷா வருஷம் ஓரளவாவது வரவேண்டும் என்று வரக் கூடிய வரியை ஒன்று சேர்த்துப் போட்டு, ஜனத் தொகை அடிப்படையில் இல்லாமல் வரி வசூல் தொகையை அடிப்படையாகப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று, வரி வசூல் எவ்வளவு இருக்கிறதோ, அந்த அளவு நிலப் பரப்பு இருக்கும், நில மதிப்பு இருக்கும், அங்கு ஆகக் கூடிய நில மாற்றங்களும் அதிகமாக இருக்கும் என்பதனால்தான் லாண்ட் ரெவினியூ என்று கண்டிருக்கிறது. அதையும் பைனான்ஸ் ஸப்-கமிட்டி பரிசிலனை செய்து இந்த விதியைப் போட்டிருக்கிறது. ஆகையால் கனம் அங்கத்தினர் கோதண்டராமன் அவர்களுடைய திருத்தத்தை ஒப்புக் கொள்ள முடியவில்லை.

The amendment of Sri V. K. Kothandaraman was put and lost.

The Government amendment was put and carried.

Clause 124, as amended, was put and carried.

Clause 125 was put and carried.

Clause 126.

MR. SPEAKER : The motion is—

"That clause 126 do stand part of the Bill."

SRI M. S. SELVARAJAN : இந்தப் பிரிவின்படி பஞ்சாயத்துகளில் வரி வசூலிக்கும் பொறுப்பை ரெவினியூ அதிகாரிகளிடத்தில் வழங்குகிறோம். இதுவரை பஞ்சாயத்துகளிலே இருக்கக்கூடிய ஆயிரக் கணக்கான சிப்பந்திகள் இந்த வேலையைச் செய்து வருகிறார்கள். பில் கலெக்டர்களும், இதர சிப்பந்திகளும் வேலை செய்து வருகிறார்கள். அவர்களுக்கு மாற்று வழி வகுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். 12 noon. அரசாங்கம் அதைச் செய்யுமென்றும் நினைக்கிறேன். இவ்வளவு கமிஷன் தருகிறோம் என்ற அடிப்படையில் இந்த வரி வசூலிப்பை கிராம அதிகாரிகளிடத்தில் ஒப்படைப்பதானது இன்னும் அதிகமான உபாதைகளுக்கு வழி வகுத்துவிடாதா என்பதை யோசிக்க வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக வசூல் செய்து கொடுக்கிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு அவர்களுக்கு அதிகமாக கமிஷன் கிடைக்கும். கிராம அதிகாரிகள் இஷ்டப்படி வசூலித்துக் கொடுப்பதற்கு அதிகாரம் கொடுக்கிறோம். ஆனால் அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு எங்கே அதிகாரம் இருக்கிறது ? எவ்வளவு அதிகமாக வசூலித்துக் கொடுக்கிறார்களோ, அவ்வளவு ரெவினியூ அதிகாரிகளிடத்தில் நல்ல பெயர் வாங்குகிறார்கள். அந்தக் கண்ணோட்டத்தோடு பார்த்தால் கிராமத்திலிருக்கக்கூடிய சாதாரண ஜனங்கள் எத்தனை கஷ்டங்கள் அனுபவிக்க நேரிடும் என்பதை அரசாங்கம் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இத்தகைய நிலையில் கிராம அதிகாரிகளிடத்தில் வரம்பற்ற அதிகாரத்தைக் கொடுத்து, அவர்களுக்கு ருசியைக் காட்டி, வரி வசூலிப்பைக் கொடுத்து விடுவதன் காரணமாக இன்று நிலவரி அவர்களுடைய சம்பளத்தின் அடிப்படையிலேயே

வசூலிக்கப்பட்டு வந்தும், அதை வசூல் செய்வதிலேயே எவ்வளவோ கண்டிப்பாக இருக்கிறார்கள்—இன்னும் அதிகமான அளவுக்குக் கண்டிப்பான முறைகளைக் கையாளமாட்டார்களா என்பதை நாம் யோசிக்க வேண்டும். இப்பொழுது இருப்பவர்களுக்கு மாற்று வழிகளைக்காட்டி, வேறு துறைகளிலே அரசாங்கம் அவர்களை எடுத்துக்கொள்வதன் மூலமாக, அவர்களுடைய வேலையைப் போக்கி விடுவது என்று வைத்துக்கொண்டாலும், ரெவின்யூ அதிகாரிகளையும் ஒரு வரம்புக்கு உட்பட்டு, அவர்களும் கட்டுக்கு அடங்கி நடக்கும்படிச் செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI S. M. ANNAMALAI : இந்தப் பிரிவின்படி இனிமேல் கிராம அதிகாரிகளே வரி வசூலிப்பை ஆரம்பிப்பார்கள். பெரிய பஞ்சாயத்துகளிலே பில் கலெக்டர்கள் இருக்கிறார்கள். ஒரு பஞ்சாயத்துக்கு இரண்டு பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமை என்ன ? வருங்காலத்தில் அவர்களை எப்படிப் பயன்படுத்தப் போகிறார்கள், வேலையை விட்டு நீக்கிவிடப் போகிறார்களா, 600 அல்லது 700 பேர்கள் வேலையை இழக்கக்கூடிய நிலைமை ஏற்படும், அவர்களுக்கு சர்க்கார் என்ன பாதுகாப்பு செய்து கொடுக்கப் போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

SRI J. MATHA GOWDER: இந்த பஞ்சாயத்து வரிகளை கிராம அதிகாரிகள் வசூல் செய்துகொடுக்க வேண்டுமென்பதையும், அவர்களுக்கு $6\frac{1}{4}$ சதவீதம் கமிஷன் கொடுக்கவேண்டுமென்பதையும் நாம் சற்று சிந்தித்து பார்க்கவேண்டும். இப்பொழுது கிராம உத்தியோகஸ்தர்கள் முழு நேர ஊழியர்களாகக் கருதப்படவில்லை. இப்பொழுது அவர்கள் Part-time ஊழியர்களாக இருக்கிறார்கள் சர்க்காருக்குச் சேர வேண்டிய நில வரியை வசூலிப்பதும், ஜனன மரணக் கணக்குகளை வைத்திருப்பதும், இன்னும் ரெவென்யூச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள இதர வேலைகளையும் செய்து வருகிறார்கள். இப்பொழுது இந்தப் புதிய சட்டத்தின் பிரகாரம் அவர்களே இந்த பஞ்சாயத்து வரிகளை வசூல் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறோம். பஞ்சாயத்தில் விதிக்கப்படும் வீட்டுவரி, தொழில் வரி போன்ற வரிகளை மூன்று வருஷத்திற்குள் வசூலிக்க வேண்டுமென்று இருக்கிறது. அப்படி வசூல் செய்யாவிட்டால், அந்தத் தொகையை பஞ்சாயத்துத் தலைவரிடமிருந்து " ஸர்சார்ஜ் " என்ற பெயரில் வசூல் செய்து பஞ்சாயத்து பண்டில் சேர்க்கிறோம். கிராம அதிகாரிகளிடத்தில் இதை ஒப்படைப்போமேயானால், அவர்கள் மூன்று வருஷத்திற்குள் வசூல் செய்ய வில்லை என்று சொன்னால், இந்த ஸர்சார்ஜை யாரிடமிருந்து வசூல் செய்வது ? கிராம அதிகாரிகளிடமிருந்து ஸர்சார்ஜைப் போட்டு வாங்குவதற்கு, இந்தப் புதிய சட்டத்தில் ரெவின்யூ அதிகாரிகளைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரம் இல்லை. மேலும், இன்றைக்கு கிராம அதிகாரிகளுக்கு போதுமான சம்பளம் கொடுக்கப்படவில்லை, இன்னும் அதிகச் சம்பளம் கொடுக்க வேண்டும் என்ற கிளர்ச்சி இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலைமையிலே, மேலும், அவர்கள் கையிலே அதிகமான வேலைகளை ஒப்படைத்து, இந்த வரியையும் வசூல் செய்ய வேண்டுமென்று சொல்வது உசிதமாக இருக்காது என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். தவிர, இன்றைக்கு வேலையிலே இருக்கும் பில் கலெக்டர்களுக்கு வேறு வழி செய்யவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. அதனால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும். அவர்களுக்கு வேறு வேலை கொடுப்பதாயிருந்தாலும், அவர்களுக்கும் சர்க்கார் சம்பளம் கொடுத்துத் தான் ஆகவேண்டும். அவர்களை வேறு வேலைக்கு மாற்றுவதற்குப் பதிலாக, இப்பொழுது நடைமுறையில் இருப்பது போலவே அவர்கள் பஞ்சாயத்தில் இருந்து கொண்டு, அவர்களே வரி வசூல் செய்வது தான் நல்லது என்று அபிப்பிராயப்படுகிறேன். அவசியப்பட்டால், அவர்கள் ஒப்புக்கொண்டால் கொடுக்கலாமென்று இருந்தால் பரவாயில்லை. கமிஷனரோ அல்லது எக்ஸிகூடிவ் ஆபீசரோ உத்தரவு போடலாமென்று சொன்னால், அதற்கு இடம் கொடுக்காது என்று நினைக்கிறேன். ரெவின்யூ சட்டத்தைத் திருத்தி இவர்கள் உத்திரவு போடலாம் என்று சொல்லலாம்.

29th September 1958] [Sri J. Matha Gowder]

அடுத்தப்படியாக, இந்த 6¼ சதவிகிதம் எப்படிப் பொருந்தும் ? இன்றைக்கு தொழில் வரி, வீட்டு வரி, இவைகளை எடுத்துக் கொண்டால் ஒருவருக்கு 4 அணா அல்லது 5 அணாவிலிருந்து விதிக்கிறோம். ஒருவரிடம், போய் மணியக்காரர் 10 அணா வரி வசூல் செய்துகொண்டு வந்தால், 4 நயாப் பைசாவோ அல்லது 5 நயாப் பைசாவோ கமிஷன் கிடைக்கும். இந்த 5 நயாப்பைசாவுக்காக மணியக்காரர் வசூல் செய்வாரா என்பதை நாம் பார்க்க வேண்டும். ஆனால் பில் கலெக்டர்கள் எங்கே தங்களது உத்தியோகம் போய் விடுமோ என்று பயந்து கலெக்ஷன் செய்கிற முறை இன்று இருந்து வருகிறது. ஆகவே இதையெல்லாம் அரசாங்கம் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிராம அதிகாரிகள் இடத்தில் இந்த வரி வசூலை ஒப்படைப்பது சரியாக இருக்காது என்று நினைக்கிறேன்.

Sri A. GOVINDASAMY : இந்த வரி வசூல்செய்கிற அதிகாரம் Clerk *cum* Bill collector இடத்தில் இப்பொழுது ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. 12-10 p.m.
22–7–58 தேதியிட்ட எல்.ஏ. டிபார்ட்மெண்ட் ஜி.ஓ. எம்.எஸ். நெ. 1125-ன்படி கிராம அதிகாரிகள் இந்த வரி வசூலிப்பைச் செய்வார்கள் என்று முன்னதாகவே போடப்பட்டிருக்கிறது. இந்த சட்டம் நிறைவேற்றுவதற்கு முன்னதாகவே, இந்த மாதிரி ஒரு சட்டம் நிறைவேறிவிடும் என்று நினைத்து, பஞ்சாயத்திலே யுள்ள பில்கலெக்டர்களை நீக்கிவிட்டு, அந்த இடத்திலே கிராம மணியக்காரரும் கணக்குப்பிள்ளையும் வரிவசூல் செய்வார்கள் என்று உத்திரவு அனுப்பப்பட்டிருக்கிறது. எப்படி மசோதா சட்டமாவதற்கு முன்னாலேயே, அது நிறைவேறிவிடும் என்ற உத்தேசத்தில், இந்த மாதிரி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன். இதன் காரணமாக கிளார்க்-கம்-பில்கலெக்டர்கள் பல பேர்களின் உத்தியோகம் பாதிக்கப்படக் கூடும் என்பது ஒரு கருத்து. அது மாத்திரமல்ல. இப்பொழுது இருக்கிற கிராம அதிகாரிகள் அவர்களுக்கு இருக்கும் வேலைப் பளு அதிகமாக இருக்கும் காரணத்தினால் ரெவினியூ கஸ்தை வசூலிக்க முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். இதனால் தாசில்தார் அவர்கள் பேரில் அடிக்கடி நடவடிக்கை எடுக்கின்ற நிலைமை ஏற்படுகிறது. இப்பொழுது கிராம அதிகாரிகள் வசூல் செய்தால் அதன் பேரில் அவர்களுக்கு கமிஷன் கொடுக்கிறோம். வருமானத்திற்கு வழி செய்கிறோம் என்று சொல்லப் படலாம். கிராம அதிகாரிகள் சம்பள உயர்வு கேட்கிறார்கள். அதைத் தனிப்பட்டு செய்வதற்குப் பதிலாக, அவர்களுக்கு கமிஷன் கொடுப்பது இன்ஷூரன்ஸ் இன்ஸ்பெக்டருக்கு கமிஷன் கொடுப்பது போல் தான் ஆகும். இம்மாதிரி கமிஷன் கொடுப்பதால் அவர்கள் அதிக உற்சாகத்தோடு வேலை செய்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. சிறு சேமிப்பு நிதி வசூல் செய்வதில் கிராம அதிகாரிகளுக்கு கமிஷன் கொடுத்து அவர்களை உபயோகப்படுத்திக் கொண்டபொழுது, அவர்கள் பணக்காரர்களிடம் வசூல் செய்வதற்குப் பதிலாக சாதாரண மக்களிடம் வரி வசூல் செய்யும்பொழுது, வரிக்குப் பதிலாக இதை மாற்றம் செய்து கொடுக்கும் நிலைமை வந்தது. கணக்கு பிள்ளை, மணியக்காரர்கள் அதிகப்படியான ரிகார்டுகள் வைத்துக்கொள்வதில் பல சங்கடங்கள் ஏற்படும். எதற்காக வசூலானது, எந்தக் கணக்கில் வைத்துக்கொள்ளுவது என்றெல்லாம் சங்கடங்கள் ஏற்படும். ஆகவே, இந்த வேலையை முழு நேர பில்கலெக்டர்களிடம் ஒப்படைப்பதுதான் நலமாக இருக்கும். அவர்கள் வேலை செய்தால் 3, 4 கிராமங்களுக்குப் போய் வசூல் செய்வதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, ஏற்கனவே இருக்கும் தனிப்பட்ட கிளார்க்-கம்-பில்கலெக்டர்களிடம் இந்த வேலையை ஒப்படைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

Sri R. SRINIVASA IYER : Mr. Speaker, Sir, it may be pointed out with reference to clause 126 that it is only an enabling provision, giving power to require land revenue staff to collect taxes and fees due to panchayats. In the wording of the clause we find the expression 'the executive authority or the commissioner shall have power'. We have commissioners only in panchayat

union councils and town panchayats perhaps. I would suggest that there is no necessity to change the agency now employed for collecting the taxes. Ordinarily the assessing authority only collects the taxes. I do not find that any difficulty has been experienced by either the panchayats or the municipalities in collecting the taxes that they have imposed. Another important consideration for my making this suggestion is the experience we have of the Revenue Department defaulting in the collection of taxes. Income-tax amounting to lakhs of rupees has not been collected by the Revenue authorities. The method of collection of taxes levied by the panchayats, the municipalities and the district boards are entirely different from collection of land revenue. The collection of the taxes is now handed over from the Collector downwards to the village officers, that is the power has been handed over to the Revenue Department. What is the method to be adopted in the collection of these taxes by the Revenue Department? Will it be feasible to apply the provisions of the Land Revenue Recovery Act such as destraint and other such procedures? Who is the controlling authority in case the revenue official does not collect the taxes in time? If the revenue official does not collect the taxes in time, how are the panchayats to carry on with their slender resources? The panchayats will have to depend on these collections and if they do not collect in time, they will be left without finances. Therefore I suggest that the proper course would be to continue the existing provisions and make these collections by the bill collectors. Further no new provision has been made to absorb these bill collectors who will be replaced by the village munsiffs. There is the question of their grade, appointment, control and so on.

Then again there is the important question of control over these collections. Of course, the language of clause 126 indicates that they are merely collecting agents, commission agents. But supposing the village officer takes sides with one particular assessee and does not collect or reports that the assessee has no movable property, what is to happen? I know of cases where income-tax to the extent of Rs. 40 thousand and a lakh of rupees due from men living in palatial buildings were not recovered and the report of the village officer was that they had no movable property. The dues had not been collected for years together. We know of another recent case in which cinema actor escaped paying this tax to the extent of lakhs of rupees.

The proposal to entrust the collection work to the revenue officials as agents on payment of 6¼ per cent commission is not the proper course to adopt. Though I have not moved an amendment, I would suggest that Government themselves should bring forward an amendment to delete clause 126. The clause may be deleted altogether and the existing arrangement allowed to continue.

29th September 1958] [Sri R. Srinivasa Iyer]

The other point I would suggest is this. Power has been given under this clause to the revenue officials to collect taxes and fees due to the panchayats. But there are some taxes leviable by the panchayat union councils. Who is to collect those taxes? That point may be clarified. I would also suggest that in case Government want to retain clause 126, it may be split up into three parts, one for village panchayats, another for panchayat union councils and the third for town panchayats. Of course under the clause power is given to the revenue officials. Who the officials are may also be mentioned in the clause. Under the Revenue Recovery Act a certificate has got to be issued that a particular tax has to be collected. Then there is appeal. The certificate might be proved wrong. The procedure is such that it will only result in delay in the collection of dues to the panchayats. Therefore I suggest that the proper procedure would be to continue the existing method of collecting taxes through the agency of the bill collectors, that is the officers of the panchayats on the panchayat union councils as the case may be.

Sri M. K. SOMASUNDARAM: தலைவர் அவர்களே, இந்த வரி வசூலிக்கும் வேலையை கிராம முன்சீப்பிடம் ஒப்படைப்பதில் பல சங்கடங்கள் ஏற்படும். ஏனெனில், ஏர்கனவே அவர்கள் வசூலிக்க வேண்டிய வரிகள் வசூலிக்கப்படாமல் தாமதம் ஏற்பட்டு, பாக்கி கிடந்துகொண்டு வருகிறது. மேலும், அவர்களுக்கு பொறுப்பைக் கொடுப்பதனால், இன்னும் அதிக சங்கடங்கள் ஏற்படும் என்பது என்னுடைய எண்ணம். ஜில்லா போர்டுகளிலுள்ள லைசென்ஸ் இன்ஸ்பெக்டர்கள், பில்கலெக்டர்கள் இவர்களையெல்லாம் பஞ்சாயத்துகள் வந்தவுடன் வேலையிலிருந்து நீக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. இந்த பில்கலெக்டர்களிடமே வரி வசூலிக்கும் பொறுப்பை ஒப்படைப்பது மிகவும் நலமாக இருக்கும் என்று நினைக்கிறேன். அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவது என்றால் அது மிகவும் வருந்தத்தக்க விஷயம்தான். அவர்கள் தொழில் வரி முதலிய வரிகளை வசூலிப்பதில் ஏற்கனவே பழக்கப்பட்டிருப்பதால் அவர்களையே இந்த வரிகளையும் வசூல் செய்வதற்கு பஞ்சாயத்துகளிலும், கவுன்சில்களிலும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சர்க்காரை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். லைசென்ஸ் இன்ஸ்பெக்டர்கள், ஸானிடரி இன்ஸ்பெக்டர் கோர்ஸ் பாஸ் செய்யாமல் இருந்தாலும், அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படாமல், ஹெல்த் இன்ஸ்பெக்டர்களாக சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்களுக்கு நேரடியாக ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள் போஸ்டு கொடுக்க வேண்டும். அப்படியில்லையெனில் கவுன்சிலில் லைசென்ஸ் வழங்குவதற்கு அவர்களுக்கு அதிகாரம் கொடுத்து கவுன்சிலில் ஒருவராக நியமிக்கும்படி அரசாங்கத்திற்கு யோசனை கூறுகிறேன். அதையும் நடைமுறையில் கொண்டுவந்தால் மிகவும் நலமாக இருக்கும் என்று நினைக்கிறேன். இருக்கக்கூடிய பில்கலெக்டர்களை திரும்பவும் இந்த இடங்களில் " கண்டினியூ " செய்ய வேண்டுமென்ற யோசனையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இத்துடன் என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

Sri A. R. SUBBIAH MUDALIAR: கிளாஸ் 126-ல் வில்லேஜ் ஆபீஸர்ஸ் அஸெஸ்மெண்டு ரிஜிஸ்டர் "மெயிண்டைன் " செய்யவேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலும் " டிஸ்கிரீஷன் " கூட இல்லை. வரிகள் பூராவுமே பஞ்சாயத்து வசூல் செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டால் வெறுப்ப பஞ்சாயத்துமேலே ஏற்படும். சிலவரிகளை நேராக பஞ்சாயத்துவசூல் செய்யும்பொழுது பஞ்சாயத்து சபைக்கோ, பஞ்சாயத்து தலைவரிடமோ வெறுப்பு ஏற்படுகிறது. இப்பொழுது என்ன செய்கிறோம்என்றால், பென்ச் கோர்டுக்கு அனுப்பி அவர்களமூலம் வசூல் செய்கிறோம். " டிஸ்கிரீஷன் "

கொடுத்து "டிமாண்டு" மூலமாக வரக்கூடிய பாடத்தை மட்டும் வில்லேஜ் ஆபீஸர்ஸ் வசூல் செய்யக்கூடிய நிலைமை இருந்தால் நல்லது. அப்படியில்லாமல் அஸெஸ்மெண்டு ரிஜிஸ்டர் முதற்கொண்டு அவர்களே பிரிபேர் செய்து பூரா வரியும் வசூல் செய்யவேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டால் "டியூயல்
12-20 p.m. ஸிஸ்டம்" ஏற்படுகிறது. கிராம அதிகாரிகள் இருக்கும் நிலையிலே, அவர்கள் படும் கஷ்டத்திலே, அவர்களுக்கு இருக்கும் பல பொறுப்பிலே, இந்த வேலையையும் அவர்களிடம் ஒப்படைத்தால் கஷ்டம் அதிகமாகும். அவர்கள் ஆறேகால் பர்செண்ட் கொடுப்பதற்காக வேலை செய்யப்போவதில்லை. தாசில்தார், தவிர அடுத்த வேறு எந்தஉத்தியோகஸ்த்தர்களுக்கும் கிராம அதிகாரிகள் மதிப்புக்கொடுப்பதில்லை. ஜமீன் பிரதேச தாசில்தார், கர்ணத்திற்கு ஒரு சம்மன் அனுப்பினால் அவர்கள் வர யோசிக்கிறார்கள். ஆகவே, அவர்களிடம் வரியைக் கொடுத்து வசூல் செய்வதில் கஷ்டம் ஏற்படும். பிரஸிடெண்ட் அல்லது பஞ்சாயத்து உத்தியோகஸ்தர் கொடுக்கும் டிமாண்ட் லிஸ்டைமட்டும், அவர்கள் வசூல் செய்ய வேண்டுமென்றிருந்தால் போதும். கிளாஸ் 126-ஐயே எடுத்து விடுவது நல்லது. அதைச் செய்ய முடியாவிட்டால், கொடுக்கும் டிமாண்டுக்கு மட்டும் வசூல் செய்யும்படி ஏற்பாடு செய்தால் போதுமானது.

THE HON. SRI C. SUBRAMANIAM : சபாநாயகர் அவர்களே, இது ஏதோ புது விதிபோல் நினைத்துக் கொண்டு எல்லா அங்கத்தினர்களும் பேசினார்கள். பழைய சட்டத்தின் 69-வது விதியைப் பார்த்தால், அதையேதான் இங்கே போட்டிருக்கிறோம் என்பது தெரியும். 'Subject to such rules as may be prescribed, the executive authority . . . . இங்கே "கமிஷனர்" என்று போட்டிருக்கிறோம்.

'Shall have power to require the village headman having jurisdiction over the village or any part thereof . . ." இங்கே வார்த்தைக்கு வார்த்தை அப்படியே இருக்கிறது, கமிஷனர் என்பது தவிர. ஆகவே இது முன்பு இருக்கக் கூடிய விதியே தான்.

கனம் கோவிந்தசாமி இந்த விதி வரும் என்று மனதில் கொண்டு முன்பே சர்க்கார் உத்திரவு போட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அது அப்படியல்ல. முன்பே இருக்கும் சட்டப்படி உத்தரவு போடப்பட்டது. இப்பொழுது முடிவு செய்ய வேண்டியது என்னவென்றால், இம்மாதிரி ஒரு விதி வேண்டுமா, இல்லையா என்பது. அதை உபயோகிப்பதா, எப்படி உபயோகிப்பது என்பது இரண்டாவது விஷயம். இப்பொழுது, பல வரிகளும், நில வரியை அனுசரித்துப் போடவேண்டியிருக்கின்றன. ரூபாய்க்கு, 45 அல்லது 50 நயாபைசா வரை நிலவரியின்மேல், உபவரி போட்டு அதை வசூல் செய்வது எப்படி என்று தீர்மானிக்க வேண்டும். அதை நில வரியோடு சேர்த்து வசூல் செய்வதுதான் நலமாக இருக்கும். அதை வசூல் செய்ய என்று ஒரு பில் கலெக்டர் போடுவது அவ்வளவு சரியாகாது; கஷ்டமாக இருக்கும். அதற்காகத்தான், "any tax or any fee" என்று போட்டிருக்கிறது. அவர்களே எல்லா வரிகளையும் வசூலிக்க வேண்டுமென்பதில்லை. ஏதாவது வசூலிக்க வேண்டியிருந்தால், அவர்களிடம் போனால், அவர்கள் செய்யலாம். முக்கியமாக நில வரியை கிராம அதிகாரிகள் வசூல் செய்வது என்று இருந்தால், அதோடு சேர்த்திருக்கும் வீட்டு வரிக்கு மட்டும், தனியாக ஒரு உத்தியோகஸ்தர் போடமுடியாது. சிறிய பஞ்சாயத்துகளிலே, சிறிய வரியாக இருக்கக்கூடிய ஒன்றை அவர்கள் ஒப்புக் கொள்ளலாம். அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டிய கட்டாயம் இல்லை. இந்த விதி இருப்பதால் கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டு விடும் என்பது சரியல்ல. ஒரு பக்கத்தில் கமிஷன் இருப்பதால், அவர்கள் ரொம்ப தீவிரமாக வசூல் செய்வார்கள், மக்களைக் கஷ்டப்படுத்துவார்கள் என்றார்கள். மறு பக்கத்தில் இந்த ஆறேகால் பர்செண்ட் இருப்பதால் ஒருவரும் வசூலிக்க மாட்டார்கள் என்றார்கள். (குறுக்கீடு) உங்களோடு சேர்ந்து இந்தப் பக்கத்து மெம்பர்களும் பேசினார்கள். ஆகையினால் இருக்கக் கூடிய முறையிலே, யாரிடத்தில் கொடுத்தாலும், சர்க்கார் ரூல்களுக்கு உட்பட்டு, சௌகரியப்பட்ட இடங்களில், அவர்கள் இஷ்டப்பட்டால் இதைச் செய்யலாம்.

29th September 1958] [Sri C. Subramaniam]

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். எல்லா பஞ்சாயத்து மகா நாடுகளிலும், "இந்தப் பொறுப்பு எங்களுக்கு வேண்டாம், ரெவின்யூ அதிகாரிகளிடமே கொடுத்து விடுங்கள்" என்று தீர்மானங்கள் நிறை வேற்றியிருக்கிறார்கள். வரி வசூல் செய்வது தங்களுக்குக் கஷ்டம் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, இது ஒரு "enabling provision" ஆகப் போட்டிருக்கிறோம். சௌகரியம் இருக்கும் இடங்களில், ரெவின்யூ அதிகாரிகள், நம் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு வரி வசூல் செய்ய வேண்டு மென்று போட்டிருக்கிறோம். இதில் இவ்வளவு ஆவேசத்துடன் பேச வேண்டியது அவசியமில்லை. இது வரை அம்மாதிரி முறையால் எந்த பாதகமும் ஏற்பட்டுவிடவில்லை. இனிமேலும் ஏற்படப் போவதில்லை. நில வரி தொடர்பு கொண்டிருக்கும் வரிகளை, ரெவின்யூ அதிகாரிகள் மூல மாகவும், மற்றவைகளை சௌகரியம் இருக்கும் இடங்களில் பஞ்சாயத்து மூலமாகவும், தனியாக உத்தியோகஸ்தர்களை நியமிக்கக்கூடிய இடங் களிலே, அந்த முறையிலேயும் செய்ய பரிசீலனை செய்யப்படும் என்ற உறுதியைக் கொடுக்க முடியும்.

இந்த சந்தர்ப்பத்திலே, இதன் மூலமாக ஏதாவது வேலையில் இருப்ப வர்கள் வேலையிலிருந்து வெளியேற்றப் படுவார்களோ என்ற கவலை தெரிவிக்கப்பட்டது. இதிலே கிராம மக்களுக்கு நன்மை செய்யப் புறப்படும் போது, வேலையில் இருப்பவர்களுக்கு முதலில் இடம் செய்து விட்டுத் தான், அப்புறம் மற்றவை என்ற முறையில் சென்றால், நாம் கிராம மக்களுக்கு ஒன்றுமே நன்மை செய்ய முடியாது. அதிகாரத்தில் இருப்ப வர்களுக்கு பாதிக்காமல் இடம் கொடுத்துவிட்டுத்தான் செய்ய வேண்டு மென்றால் ஒன்றும் ஆகாது. ஆனாலும், இங்கே நான் ஒரு உறுதியைக் கொடுக்க முடியும். இந்த அமைப்பினால், பில் கலெக்டர் போன்றவர்கள் பாதிக்கப்படமாட்டார்கள்.

SRI R. SRINIVASA IYER : Sir, section 69 of the old Act referred to 'village headman'. Now we have got the staff of the Land Revenue Department. Another point is that section 69 does not provide for the preparation of house-tax assessment register by the Land Revenue Department. Panchayats are doing it and that is the additional power. Of course, it is an enabling provision . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, it is advisedly put there and it is an improvement on the existing section.

Clause 126 was put and carried.

Clauses 127 to 130 were put and carried.

Clause 131.

MR. SPEAKER : The motion is—

"That clause 131 do stand part of the Bill."

SRI S. M. ANNAMALAI : Sir, I move—

'*For* the figure and words "40 naye Paise" *substitute* the figure and words "50 naye Paise." '

SRI A. GOVINDASAMY : Sir, I second it.

MR. SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

SRI S. M. ANNAMALAI : இந்த பிரதேச சாலைகள் மானி யத்தை சர்க்கார், பஞ்சாயத்து யூனியனிலுள்ள ஒவ்வொரு நபருக்கும், ஜனநாயக அடிப்படையில், 40 நயா பைசா என்று ஒதுக்குகிறார்கள். அதை 50 நயா பைசாவாக உயர்த்த வேண்டும் என்று திருத்தம் கொடுத்திருக் கிறேன். சிறிய கிராமங்களுக்குள்ளே சென்றால், பாதைகள் செப்பனிடப் படுவதில்லை. கிராமப்புரங்கள் முன்னேறவேண்டும், முன்னேறவேண் டும் என்று சொல்லும் நாம், அவர்களுக்கு நல்ல பாதைகள், சாலைகள் செய்துகொள்ள சௌகரியமாக இந்த மானியத்தை அதிகப் படுத்திக் கொடுக்கவேண்டும். ஆகவே, என் திருத்தத்தை சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுகொள்கிறேன்.

12-30 p.m. * SRI A. GOVINDASAMY : கனம் தலைவர் அவர்களே, 40 நயா பைசா என்று இருப்பதை 50 நயா பைசாவாக உயர்த்தவேண்டும் என்று கனம் அண்ணாமலை அவர்கள் சொன்னார். ஆனால் கனம் நிதி அமைச்சர் அவர்கள் ரொம்ப உருக்கமாக என் 60 ஆகப் போடக்கூடாது என்று கேட்கிறார். அவருக்கு எப்பொழுதும் 60, 40 என்பதே ஞாபகத்திற்கு வருகிறது என்று நினைக்கிறேன். அதன் காரணமாகத்தான் அப்படி அவர் கேட்கிறார் என்று நினைக்கிறேன். நகரப்புரங்களுக்கு 60 நயா பைசா என்றும் கிராமப்புரங்களுக்கு 40 நயா பைசா என்றும் இருப்பதைத் திருப்பிப் போடவேண்டும் என்பதை நானும் வலியுறுத்துகிறேன். நகரப்பகுதிக்கு 60 என்று இருப்பதை 40 ஆகவும், கிராமப் பகுதிக்கு 40 என்று இருப்பதை 60 ஆகவும் மாற்றி அமைத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே, இதில் ஒரு கணக்கு இல்லாமலும் கொண்டு வரவேண்டிய அவசியம் இல்லை. அப்படிக் கொண்டு வருவதாக இருந்தால் ஒரு ரூபாய் என்றுகூட கொண்டு வரலாம். இப்பொழுது போடப்பட்டிருப்பதை நன்றாக பரி சீலனை செய்துதான் போடப்பட்டிருக்கிறது. சப் கமிட்டியில் பரிசீலனை செய்தபின் தான் அப்படி போடப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் ரோடுகள் சம்பந்தப்பட்ட மட்டில் என்ன செலவாகும் என்பதை கணக்குப் போட்டு தான் இந்த 40 நயா பைசா என்று நிர்ணயித்திருக் கிறார்கள். கணக்கு இல்லாமல் போடப்பட்ட கணக்கு அல்ல அது. இன் றைக்கு நாம் பார்க்க வேண்டியது, டோல் காம்பென்சேஷன் என்று கொடுக்கப்பட்டபோது 16 நயா பைசா வீதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை சராசரியாக வைத்துக்கொண்டு அதை 40 நயா பைசாவுக்கு உயர்த்தி இருக்கிறோம், இந்த "மசோதா" பிரகாரம். 16 நயா பைசா என்று கொடுத்தபோது டிஸ்ட்ரிக்ட் போர்டு எல்லா ரோடுகளையும் பரா மரித்து வந்தது. இப்பொழுதுள்ள திட்டத்தின் பிரகாரம் எல்லா ரோடு களும் அதாவது ஹைவேஸ்களெல்லாம் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. கிராம ரோடுகளை அதாவது மூன்றாவது க்ளாஸ் ரோடுகளையெல்லாம், பஞ் சாயத்து யூனியன் கவுன்சில்கள் எடுத்து பராமரிக்கப் போகின்றன. அத னால்தான் அந்த செலவைச் செய்வதற்கென்று 16 நயா பைசாவி லிருந்து 40 நயா பைசாவிற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. எந்த அளவுக்கு உயர்த்த முடியுமோ அந்த அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. புதிய ரோடுகள் போடுவதற்கும், ஏற்கெனவே இருக்கக்கூடிய ரோடுகளைப் பரா மரிப்பதற்கும் போதுமான பணம் வேண்டும் என்பதற்காகத்தான் இப்படி உயர்த்தப்பட்டிருக்கிறது. அதனால் நினைத்தப்படி 40 அல்லது 50 என்று உயர்த்த வேண்டும் என்று சொல்வதில் அர்த்தம் இல்லை என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நிதி வசதி எந்த அளவிற்கு இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் அப்படி கணக்கு எடுக்கப்பட்டிருக் கிறது. அந்த அளவுக்குத்தான் ரோடு வசதிகளை அதிகப்படுத்தவேண்டும் என்பதை மனதில் வைத்துக்கொண்டு 40 என்று நிர்ணயம் செய்யப் பட்டிருக்கிறது. நிதி வசதிகளை நல்ல முறையில் பரிசீலனை செய்து பார்த்த்

29th September 1958] [Sri C. Subramaniam]

பிறகுதான் இது ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இப்பொழுது இருக்கக்கூடிய திட்டத்தில் எந்த விதமான மாறுதலும் செய்யக்கூடாது என்பதாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

Clause 131 was put and carried.

SRI A. GOVINDASAMY : Sir, the amendment of Sri S. M. Annamalai has not been put to vote.

MR. SPEAKER : I am sorry about it. Is the hon. Member pressing his amendment?

SRI S. M. ANNAMALAI : Yes, Sir.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, we can re-open clause 131.

I move—

"That clause 131 be reopened."

The motion was put and carried.

MR. SPEAKER : I shall now put the amendment to the vote of the House.

The question is—

'*For* the figure and words "40 naye paise" *substitute* the figure and words "50 naye paise".'

The amendment was put and lost.

Clause 131 was put and carried.

Clauses 132, 133 *and* 134.

MR. SPEAKER : The motion is—

"That clauses 132, 133 and 134 do stand part of the Bill."

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், இந்த 134-வது கிளாசில் பஞ்சாயத்து யூனியன், பட்டணப் பஞ்சாயத்து, பஞ்சாயத்து நிதி, கிராம பஞ்சாயத்து நிதி இவைகளுடைய நிதியை அமைக்கக்கூடிய விஷயத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறது. இந்த நேரத்தில் நான் சொல்லக் கூடியது என்னவென்றால் இப்பொழுது இருக்கக்கூடிய நிதி நிலைமையை பாதிக்கக்கூடிய அளவுக்கோ அல்லது அவர்களுக்கு இப்பொழுதுள்ள அதி காரம் பாதிக்கக்கூடாத அளவுக்கோ இருக்கவேண்டும் என்றும், அவர்களுக்கு இருக்கக்கூடிய அதிகாரம் பாதிக்கக்கூடிய அளவில் இருக்கக்கூடாது என்கிற நோக்கத்துடன் இருக்கவேண்டும். மேலும் அவர்களுக்கு அதிகப்படி யான நிதி நிலைமை உண்டாக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்துடன் இப்பொழுது ஒரு மசோதாவை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இது வரைக்கும் சினிமா போன்றவைகள் கிராமங்களில் நடந்து கொண்டு வந்தன. அந்த பஞ்சாயத்து எல்லைக்குள் நடந்து கொண்டிருந்த சினி மாக்களின் மூலமாக வரக்கூடிய வருமானம் எல்லாம் அந்த பஞ்சாயத் துக்கே கொடுக்கப்பட்டு வந்தது. இப்பொழுது பார்த்தால் சினிமா போன் றவைகளிலிருந்து வசூலிக்கக்கூடிய வரிப்பணம் அவ்வளவும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு சேர்க்கப்படும் என்று இருக்கிறது. இது போன்ற நிலைமை இருக்கக்கூடாது. எந்த எந்த பஞ்சாயத்து எல்லைக்குள் வரு மானம் வருகிறதோ அந்த வருமானம் அந்த அந்த பஞ்சாயத்துக்குத் தான் சேர்க்கப்பட வேண்டும் என்பதை இந்த நேரத்தில் நான் ஞாபகப்

படுத்த விரும்புகிறேன். இதுதான் என்னுடைய அபிப்பிராயம் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே கிராமப் பஞ்சாயத்தாக இருந்தாலும் சரி, டவுன் பஞ்சாயத்தாக இருந்தாலும் சரி, அந்த அந்த எல்லைகளுக்குள் நடைபெற்று வரக்கூடிய வருமானம் அந்த அந்த பஞ்சாயத்துக்கே கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் இருக்க வேண்டும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Clauses 132, 133 and 134 were put and carried.

Clause 135.

MR. SPEAKER : The motion is—

'That clause 135 do stand part of the Bill.'

SRI N. K. PALANISAMI : Sir, I move—

In item (vii) *after* the words 'the contribution' *add* the words and figures "of 50 per cent" and *omit* the words "on the scale fixed by the Government".

The amendment was duly seconded.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

'In clause 135—

(*a*) *omit item* (iii) and *re-number* items (iv) to (xxii) as items (iii) to (xxi) respectively;

(*b*) *for* item (xx) as renumbered, *substitute* the following item :—

"(xx) fines and penalties levied under this Act by the panchayat union oouncil or at its instance or on its behalf";

(*c*) *after* item (xxi) as renumbered, *add* the following item :—

"(xxii) all other moneys received by the panchayat union council".'

The amendment of Sri N. K. Palanisami was put and lost.

The Government amendment was put and carried.

Clause 135, as amended, was put and carried.

Clause 136 was put and carried.

Clause 137.

MR. SPEAKER : The motion is—

'That clause 137 do stand part of the Bill.'

SRI P. VEERAPPA GOUNDER : Sir, I move—

'In entry (xiii), *add* the words "and avenue and other proceeds or the tank bunds and foreshores of the tanks".'

The amendment was duly seconded.

29th September 1958]

SRI A. GOVINDASAMY : Sir, I move—

'*After* item (xxi), *add* the following, namely :—

" (xxii) Panchayat fund shall include house-tax, matching grant ".'

The amendment was duly seconded.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

'In clause 137—

(*a*) in item (i), *for* the word and figures " section 119 " *substitute* the words and figures " sections 119 to 122 ".

(*b*) *for* item (xx), *substitute* the following item :—

(xx) fines and penalties levied under this Act by the town panchayat or the village panchayat or at the instance or on behalf of either the town panchayat or the village panchayat."

(*c*) *after* item (xxi) *add* the following item :—

" (xxii) all other moneys received by the panchayat ".'

MR. SPEAKER : Now the clause and the amendments are before the House for discussion.

SRI P. VEERAPPA GOUNDER : சபாநாயகர் அவர்களே, 137-வது ஷரத்திலே 13-வது உட்பிரிவில், " கிராமத்தில் மீன்பிடி துறையிலிருந்து கிடைக்கும் வருமானம் " என்று சொல்லியிருப்பதோடு ஒட்டி அதில் இருக்கும் மரமகசூல், விழல், சம்பு, கோரை, இதர வருமானங்களும் பஞ்சாயத்து நிதியில் சேர வேண்டும் என்பது என்னுடைய திருத்தம். அந்த வருமானத்தையும் பஞ்சாயத்து நிதிக்குச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். 12-40 p.m.

SRI A. GOVINDASAMY : சபாநாயகர் அவர்களே, வீட்டு வரியையும் மாட்சிங் கிராண்டையும் பஞ்சாயத்து நிதியில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பது என்னுடைய திருத்தத்தின் நோக்கம். அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : சபாநாயகர் அவர்களே, வண்டி வரி போன்ற வரிகளையும் எடுத்துக்கொள்வோமானால், இன்றைய பஞ்சாயத்துக்குப் பஞ்சாயத்து வித்தியாசங்கள் இருக்கின்றன. ஒரு பஞ்சாயத்திலே ஒரு ரூபாய் இருக்கும், இன்னொரு பஞ்சாயத்திலே இரண்டு ரூபாய் இருக்கும். இரண்டு ரூபாய் வரி இருக்கக்கூடிய பஞ்சாயத்து எல்லையில் இருக்கும் ஒருவர் ஒரு ரூபாய் வரி விதிக்கும் பஞ்சாயத்து எல்லைக்குப் போய் அங்கு லைசன்ஸ் பெற்றுக்கொள்கிறார். அப்படிப்பெற்றுக் கொண்ட போதிலுங்கூட, மேற்கொண்டு சேரவேண்டிய அந்த ஒரு ரூபாயை அந்தப் பஞ்சாயத்து வசூல் செய்ய முடியும் என்றும் சொல்லலாம். நான் எதற்குக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், இதிலே பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. பஞ்சாயத்துக்கு தரக்கூடியதிலே சர்க்கார் நல்ல கவனம் செலுத்தி அந்தக் குறிப்பிட்ட லைசன்ஸ் பெறக்கூடியவர் எந்த பஞ்சாயத்து எல்லையில் இருக்கிறாரோ எங்கே போய் லைசன்ஸ் வாங்கினாலும் வசூல்செய்து அந்தப் பஞ்சாயத்துக்கு ஒப்படைக்கும் அளவுக்கு இதன் விதி திருத்தியமைக்கப்படவேண்டும். அது போன்று, எந்த பஞ்சாயத்து எல்லைக்குள் இருக்கிறதோ அங்கே உள்ள வண்டிகளுக்கும் மற்ற மற்ற வாகனதிகளுக்கும் லைசன்ஸ் பெற முடியும். அந்தப் பஞ்சாயத்துக்கும் வருமானம் கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கக்கூடும். ஆகவே, இதுபோன்ற நிலைமை இருக்கும் காரணத்தால் தான் அதுபோன்ற ஒரு கட்டணத்தை நிர்ணயிக்கக்கூடிய நிலைமை

இல்லாத காரணத்தால், இதுபோன்ற முறைகள் கையாளுவது சம்பந்தமாக அவர்கள் வேறு பஞ்சாயத்துக்குப் போய் வாங்கக்கூடிய நிலைமை இருக்காது என்னும் அபிப்பிராயத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே, ஸ்ரீ வீரப்ப கவுண்டர் கொடுத்திருக்கும் திருத்தமும், மற்றும் கனம் அங்கத்தினர்கள் இந்த ஷரத்துக்குக் கொடுத்திருக்கும் திருத்தங்களும் சர்க்கார் கொடுத்திருககும் திருத்ததகை ஏற்றுககொண்டால் அதிலே வந்துவிடும் என்று நான் நினைக்கிறேன். இந்த ஷரத்தின் 19-வது உட்பிரிவில் ": Income from leases of Government property obtained by the panchayat ; " என்றும், 17-வது உட்பிரிவில் " all income derived from porambokes the use of which is vested in the panchayat ;" என்றும் கண்டிருக்கிறது. ஆகவே, கிராமப் பஞ்சாயத்தினுடைய ஆதிக்கத்தின்கீழ் வருமானல் அதன்கீழ் எல்லாம் வந்துவிடும். அதன் ஆதிக்கத்தின்கீழ் வராத வேறு எந்தவிதமான வரும்படிகளும் இதில் வரவேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. எந்தச் சொத்து பஞ்சாயத்தினுடைய ஆதிக்கத்தின் கீழ் இருக்கவேண்டும் என்று சர்க்கார் உத்தரவிடுகிறதோ அதன் மூலம் வரும வரும்படி முழுதும் பஞ்சாயத்தின்கீழ் வந்துவிடும்.

* SRI A. GOVINDASAMY : சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் வீரப்ப கவுண்டர் அவர்கள் சொல்லுவதுபோல், குளத்தில் மீன் பிடிக்கும் நிலைமை, விழல் முதலிய எடுககும் நிலைமையைப்பற்றி அந்தந்த பஞ்சாயத்துக்கு உரிமை இருக்கவேண்டும். அந்தக் குளத்தில் இருக்கும் விழல் வருமானத்தை பஞ்சாயத்து அனுபவிக்கவேண்டும். அப்படியல்லாத நிலைமையில் விழல் சம்பந்தமாக பல தகராறுகள் கிராமங்களில் இருப்பதால்தான் கனம் அங்கத்தினர் வீரப்ப கவுண்டர் அவர்களுடைய திருத்தத்தை அவசியம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நானும் கேட்டுக்கொள்கிறேன்.

The amendment of Sri P. Veerappa Gounder was put and lost.

The amendment of Sri A. Govindasamy was, by leave, withdrawn.

The Government amendment was put and carried.

Clause 137, as amended, was put and carried.

Clauses 138 and 139 were put and carried.

Clause 140.

MR. SPEAKER : The motion is—

" That clause 140 do stand part of the Bill ".

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

" In clause 140, *after* sub-clause (4), *add* the following sub-clauses :—

' (5) On or before such date in each year as may be prescribed, every commissioner shall submit to the Government through such officer and in such forms as may be prescribed a budget for the ensuing financial year showing the income and expenditure relating to the panchayat union (education) fund.

(6) The Government may pass such orders as they think fit in respect of the budget referred to in sub-section (5) and the panchayat union council concerned shall be bound to carry out all such orders.

29th September 1958] [Sri C. Subramaniam]

(7) The accounts of the panchayat union (education) fund shall be examined and audited by an auditor appointed by the Government under section 141, and the panchayat union council concerned shall carry out any instructions which the Government may issue on the audit report.' "

The amendment was put and carried.

Clause 140, as amended, was put and carried.

Clauses 141, 142 and 143 were put and carried.

MR. SPEAKER : The House will now rise for lunch and meet again at 3 p.m.

The House then adjourned for lunch.

[After lunch—3 p.m.]

IV.—GOVERNMENT BILLS—*cont.*

(1) THE MADRAS DISTRICT BOARDS (AMENDMENT) BILL, 1958.
(L.A. BILL NO. 36 OF 1958)—*cont.*

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Mr. Speaker, Sir, I move :

'That the Madras District Boards (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 36 of 1958) be taken into consideration.'

Sir, last year I presented the Madras District Boards (Amendment) Bill, 1957, before the Legislature. According to that Bill, the elections to the district boards were postponed till the 31st of October 1958 and Special Officers were placed in charge of the district boards. We have now introduced the Madras Panchayats Bill, 1958, which makes permanent provision regarding the abolition of the district boards and their replacement by panchayat union councils. This replacement is to take place according to a phased programme which will be completed on the 2nd October 1961.

During this period successive batches of panchayat union councils will be constituted. As soon as they are constituted the functions performed by the Special Officers will devolve upon them and the District Boards Act will be repealed in their areas. But until this programme is completed, there will be need for the continuance of the Special Officers in the areas where panchayat union councils are not yet set up.

Anticipating this contingency we have made provision in clause 196 of the Madras Panchayats Bill. We hoped that this Bill would have become law before the 31st October 1958. But it now appears that according to the programme of this House and the other House, this may not be possible. We are advised that if the Bill becomes law after the 31st October 1958, there will be a gap during which period the proceedings of the Special Officers will have to be validated.

[29th September 1958 [Srimathi Lourdhammal Simon]

This simple Bill has been introduced in order to avoid any such gap. The effect of this Bill is simply to substitute '31st of January 1959' for '31st of October 1958' in the Act as passed last year. Hon. Members may wonder whether it is really necessary to fix the date in January. I am sure, the Bill will be passed into law well before that. But we have fixed the end of January as a measure of abundant caution. I request the House to accept the motion.

MR. SPEAKER : Motion moved—

'That the Madras District Boards (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 36 of 1958) be taken into consideration.'

SRI M. S. SELVARAJAN : ஸார், உத்தேசத் திருத்தத்தின் மூலமாக ஜில்லா போர்டை இன்றையதினம் நிர்வகித்து வரக்கூடிய ஸ்பெஷல் ஆபீஸர் நீடித்து இருந்து வரவும், அக்டோபர் 31-ம் தேதி முடிய என்று இருப்பதை, 1959-ம் ஆண்டு ஜனவரி 31-ம் தேதி வரை நீடிக்கவும் இந்த மசோதா வகை செய்கிறது. அக்டோபர் 31-ம் தேதியே ஜில்லா போர்டுகாலம் முடிவடையும். ஆகவே, இன்றைய தினம் ஜில்லா போர்டுக்கு இருந்து வருகிற பல்வேறு பொறுப்புக்களை பஞ்சாயத்து யூனியன்கள் பகிர்ந்து கொண்டு, அதனால் ஜில்லா போர்டுகளில் சுமை குறையும் என்று எதிர்பார்த்திருந்தார்கள். கணிசமான அளவுக்கு பெருகி வரக்கூடிய, வளர்ந்திருக்கக்கூடிய பொறுப்புக்கள், சுமைகள் நீங்கக்கூடிய காரணத்தினால் அக்டோபர் 31-ம் தேதி அவர்களைப் பொருத்த வரையில் ஒரு நிவர்த்தி நாள் என்று எண்ணிய நிர்வாகஸ்தர்கள் சிலர் இருந்தார்கள். இதைக் கண்டதும் அவர்கள் சோர்வடையலாம்.

எனக்குத் தெரிந்த மட்டில், திருநெல்வேலி ஜில்லாவைப் பொருத்த மட்டில், பல்வேறு அபிவிருத்திகள் காரணமாக, பல்வேறு பஞ்சாயத்துக்கள் ஜில்லா போர்டின் வருமானத்தைக் கொள்ளை கொள்ளக்கூடிய வகையில் ஸ்தாபிக்கப்பட்டதன் காரணமாக, ஜில்லா போர்டுகளின் வருமானம் குறைந்து, அதோடு நிறைந்த பொறுப்புக்கள் ஏற்பட்டன. ஜில்லா போர்டுக் கலாசாலைகளின் அபிவிருத்தி காரணமாக ஜில்லா போர்டுகளில் நிலைமை தட்டுப்படக் கூடியதாக ஆகிவிட்டது. திருநெல்வேலி ஜில்லாவைப் பொறுத்த மட்டில், ஆசிரியர்களுக்கும், அத்தியாவசியமான சிப்பந்திகளுக்கும் கூட காலாகாலத்தில் அவர்களுக்குரிய சம்பளத்தைக் கொடுக்க முடியாத நிலைமை, பொருளாதார வசதிக் குறைவு ஏற்பட்டது. அத்தகைய நிலையில், ஜில்லா போர்டு ஸ்பெஷல் ஆபீஸர் கூட, அவருக்குக் கீழே இருக்கக்கூடிய சிப்பந்திகளைக் குறைத்து, 4 பியூன்கள் இருந்த இடத்தில் சொந்தத்திற்குக்கூட, ஒரு பியூன் போதும் என்று சொல்லக்கூடிய அளவுக்குச் செலவைக் குறைத்துக் கொண்டு, எவ்வளவு சிக்கன நடவடிக்கைகள் எடுக்க முடியுமோ அவைகளை எடுத்தும், தாக்குப் பிடிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த மாதிரியான நிலைமை இன்னும் பல்வேறு ஜில்லா போர்டுகளிலும் கூட இருந்து வரலாம். திருநெல்வேலி ஜில்லாவைப் பொருத்த மட்டில் இந்த நெருக்கடி அதிகப்படியாக இருக்கிறது. திருநெல்வேலி ஜில்லா போர்டுக்கு சௌத் இண்டியன் ரெயில்வேயின் ஒரு பகுதியான திருநெல்வேலி திருச்செந்தூர் இணைப்புப் பாதைக்காகக் கொடுக்கப்பட்ட ஈவுத் தொகை கணிசமான அளவுக்குக் குறைந்து விட்டது. அத்துடன் இந்தப் பணத்தை உபயோகிப்பதில் பல்வேறு சிரமங்கள் இருந்து வருகின்றன. ஜில்லா போர்டு ஒரு தீர்மானத்தின் மூலமாக அந்தப் பணத்தை எடுத்துச்செலவு செய்யக்கூடிய அளவுக்குச் சட்டம் இல்லை. மூன்றுதரம் சேர்ந்தார்போல் தீர்மானம் நிறைவேற்றியபணத்தை எடுத்துச் செலவுசெய்வதற்குச் சட்டம் இருக்கிறது. ஆனால் செலவுசெய்யக்கூடியது மூலதனச் செலவுக்காகவே எடுத்துச் செலவு செய்யலாம் என்கின்ற அளவுக்குச் சட்டம் இருக்கிறது. இது போன்ற சாதாரணச் செலவுகளுக்கு, நடைமுறைச் செலவுகளுக்கு, நிர்வாகச்

29th September 1958] [Sri M. S. Selvarajan]

செலவுகளுக்கு ரோடு போடுவதற்கான செலவுகள் போன்ற நடைமுறைக் காரியங் களுக்காகச் செலவு செய்ய நினைத்தால் இதிலே சட்ட சிரமங்கள் இருக் கின்றன. இத்தகைய நிலைமையில் திருநெல்வேலி ஜில்லா போர்டு கவுன் ஸில் அங்கு இருக்கக்கூடிய நிலைமையைப் பரிசீலித்தது. சந்தை களின் மூலம் வரக்கூடிய வருமானங்களும் குறைந்து விட்டன, ஊர்க்காரர்கள் தாங்களாகவே சேர்ந்து கொண்டு, கூட்டுப் பொறுப்பில் ஏலம் கேட்க ஆரம் பித்தால், அதிலிருந்து வரக் கூடிய ஏலத் தொகையையும் குறைந்து விட்டது. பெருவாரியான வருமானத்திற்குக் காரணமாயிருந்த சந்தைகள் வருமானம் கூடக் குறைந்து விட்டது. ஆகையால் அரசாங்கத்தினுடைய உதவியை நாடி யிருக்கிறது திருநெல்வேலி ஜில்லா போர்டு. ரெயில்வே ஸெஸ் நிதிப் பணத்தை சட்ட ரீதியான சிரமங்களைப் போக்கி கேபிடல் காஸ்ட் ஆக என்று இருப்பதைத் தளர்த்தி நடைமுறைச் செலவுகளுக்கு உபயோகப் படுத்தினால் தவறில்லை என்ற முறையில் வகை செய்யவேண்டும். அதற்காக ஏதேனும் ஸ்பெஸலாக உதவி செய்யவேண்டுமென்ற நிர்ப்பந்தம் இருக் கிறது. ஜில்லா போர்டைப் பொருத்த மட்டில் பல்வேறு ரஸ்தாக்களை, பல நூற்றுக்கணக்கான புதிய ரஸ்தாக்களை நிர்வகிக்க முடியாத நிலைமை இருக்கிறது. இந்த உதவியை கொடுக்கத் தவறினால் பல ஐந்தாண்டுத் திட்டங்களினாலும் இனி போடப் முடியாத இன்றுள்ளபல ரஸ்தாக்களையும், மற்றைய அபிவிருத்தித் திட்டங்களையும் சரி வரப் பாதுகாக்க முடியாத நிலைமை ஏற்பட்டு விடும். அரசாங்க ரஸ்தாக்கள் ஹைவேஸ் பொறுப்பின் கீழ் எடுத்திருக்கக் கூடிய ரஸ்தாக்கள் முதலிய வைகளைக் கூட நிர்வகிக்க, அந்த ஜில்லாவின் அதிகாரிகளும், ஜில்லா போர்டு கவுன்ஸிலும் கூடி, எல்லா விஷயங்களையும் பரிசீலனை செய்து, அரசாங்கத்தினிடமிருந்து விசேஷ மானியம் வேண்டும் என்று தீர்மானங் களை நிறைவேற்றி, அரசாங்கத்தின் தயவை, உதவியை நாடியிருக்கிறார்கள் இத்தகைய நிலையில் அவற்றைக் கருணைக் கண்கொண்டுபார்க்கத் தவறு வோமேயானால், நாள் நீடிப்பின் காரணமாக ஜில்லா போர்டின் நிர்வா கமே ஸ்தம்பித்து, அவர்கள் சரிவர நடக்க முடியாத ஒரு கஷ்டமான நிலைமை ஏற்பட்டுவிடலாம். எப்படி திருநெல்வேலி ஜில்லா போர்டுக்கு நிவாரணம் தேவையோ, அதே போன்று இன்னும் பல ஜில்லா போர்டு களும் இருக்கலாம். ஆகவே, இவற்றையெல்லாம் பரிசீலனை செய்து, ஆங்காங்கு ஜில்லா போர்டுகளுக்கு இருக்கக்கூடிய சிரமங்களுக்கு எந்த அளவுக்கு பரிகாரம் தேடிமுடியுமோ, எந்த அளவுக்கு அரசாங்கம் உதவி செய்ய முடியுமோ, அதைச் செய்வது அரசாங்கத்தின் தலையான பொறுப்பு என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

3-10 p.m.

* **Sri C. MUTHIAH PILLAI**: கனம் சபாநாயகர் அவர்களே, சென்ற ஆண்டிலே இன்னும் ஒரு வருட காலத்திற்கு ஜில்லா போர்டின் காலம் நீடிக்கும், அதற்குள் பஞ்சாயத்து யூனியன்கள் வந்துவிடும் என்று கனவு கண்டுகொண்டிருந்தோம். ஆனால் சற்று காலதாமதமாகியும் கூட, இந்த மசோதா வந்திருக்கிற நிலைமையையும், சட்டசபையில் இதைத் திருத்துகிற நிலைமையையும் பார்த்தால் கொஞ்சம் மனதிற்கு கஷ்டமாகத்தான் இருக்கிறது. இவ்வளவு காலம் தாழ்த்தி வந்தும்கூட இந்த பஞ்சாயத்து மசோதாவிலே ஏன் இவ்வளவு திருத்தங்களை செய்யவேண்டும், ஒரு வேளை இந்த மசோதாவைத் தயாரித்திருக்கிறவர்கள் திறமையற்றவர்களாக இருக் கிறார்களோ என்று சந்தேகிக்க வேண்டிய நிலையிலிருக்கிறது. நல்ல காரியம் செய்வதில் பல கஷ்டங்கள் இருந்த போதிலும், எவ்வளவோ கஷ்டப்பட்டு நாம் நல்ல காரியங்கள் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறோம். இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வட்டார வளர்ச்சி அலுவ லகங்கள், தேசிய தீவிர சமுதாயத் திட்டம், இவைகள் ஒழுங்காக நடைபெற வேண்டுமானால், இந்த பஞ்சாயத்து யூனியன்கள் நல்ல முறையில் அமைய வேண்டும், அவைகள் காலத்திலே வந்தால் இந்தத் திட்டங்கள் நல்ல வகையில் நிறைவேற்றப்படும் என்று நினைத்தேன். வட்டார வளர்ச்சித் திட்டம் ஆரம்பித்து, தேசீய தீவிர சமுதாயத் திட்டம் முடிவதற்குள் இந்த பஞ்சாயத்து யூனியன்கள் என் பகுதியிலே வரும் என்று எதிர்பார்த்தேன். நூற்றி நாற்பத்திரண்டு தொகுதிகளில் இந்த வட்டார வளர்ச்சிவேலை நடந்து கொண்டு வருகிறது. திட்டம் முடிந்த பிறகு பஞ்சாயத்து யூனியன்

[Sri C. Muthiah Pillai] [29th September 1958

களை அமைத்தால் எப்படி வேலை செய்வோம் என்பது ஒருபுறமிருக்க, மறு புறத்தில் 1961-ம் ஆண்டுக்குள் இந்த பஞ்சாயத்து யூனியன்களை ஆரம்பிக் கப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள். காலம் கடந்து, திட்டங்களுக் காக அதிகமாகச் செலவழித்த பிறகு, இந்த பஞ்சாயத்து யூனியன் வந் தால், அதற்குப் பிறகு வேலை செய்வது மிகவும் கஷ்டமாக இருக்கும். தீவிர சமுதாயத் திட்டங்களுக்கு அதிகப் பணம் செலவழித்த பிறகு இந்த பஞ்சாயத்து யூனியன்கள் வேலை செய்ய முடியாது என்பதை எல்லோரும் உணர்வார்கள் என்று நினைக்கிறேன். Statement of objects and reasons-ஐப் படிக்கும் பொழுது, 1961-ம் வருடம் அக்டோபர் மாதம் 2-ம் தேதி வரை இது நீடிக்கப்படுமோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. நான் ஒருவேளை சரியாகப் புரிந்து கொள்ளாமல் இருக்கலாம். வட்டார வளர்ச்சி அலுவ லகங்கள் இல்லாத இடத்தில் 1961-ம் வருடம் அக்டோபர் மாதம் வரை நீடிக்கப்படுமோ என்று தோன்றுகிறது. டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்டு கவுன்சிலுக்கு அதிகாரம் இருந்தால் கூட, ஸ்பெஷல்ஆபீசருக்கு அதிகாரம் இருக்குமா? வட்டார வளர்ச்சி அலுவலகம் இல்லாத இடங்களில், டிஸ் டிரிக்ட் டெவலப்மெண்டு கவுன்ஸிலுக்கு பூரண அதிகாரத்தை விட்டுவிட்டு, அந்தக் கவுன்சில் சமாளிக்க முடியுமா என்பதை கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 1959-ம் வருடம் ஜனவரியில் இந்த ஜில்லா போர்டுகள் கலைக்கப்படுமுன்பு—இப்பொழுது ஒவ்வொரு ஜில்லா போர்டும் கடன்பட்டுத் தான் இருக்கிறது, ஸ்தல ஸ்தாபன வேலையாக இருந்தாலும் சரி, ஆசிரியர் கள் சம்பளப் பட்டுவாடாவாக இருந்தாலும் சரி—கடனாளி ஜில்லா போர்டாக அதைக் கலைக்காமல், கலெக்டர் எவ்வளவு தொகை கேட்கிறாரோ அதைக் கொடுத்து, அங்கே இருக்கிற கடன்களைத்தீர்த்து, அதற்குப் பிறகுதான் பஞ்சாயத்து கவுன்சிலிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். தீவிர சமுதாயத் திட்டங்கள் உள்ள இடங்களிலே இந்த பஞ்சா யத்து கவுன்சிலை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும். எல்லாச் சட்டங்களுக் கும் கொடுப்பது போல் retrospective effect கொடுத்து தீவிர சமுதாய நலத் திட்டம் இருக்கிற இடங்களில், அக்டோபர் மாதம் 2-ம் தேதிமுத லாவது ஆரம்பித்தால்தான், இந்த பஞ்சாயத்து கவுன்சிலின் அநு கூலத்தை 5, 6 மாத காலமாவது அனுபவிக்க முடியும். பிற்பாடு ரிவெர்ட் பிளாக்கு ஆகிவிட்டால் 75 சதவிகிதம் மக்களும், 25 சதவிகிதம் சர்க்காரும் கொடுக்க வேண்டிய நிலையிலே, இந்த பஞ்சாயத்து கவுன்சில்கள் திறம்பட வேலை செய்ய முடியாது. இந்தக் காலத்திற்குள் இப்பொ முது இருக்கிற வட்டார வளர்ச்சி அலுவலகங்களுக்குப் பதிலாக பஞ்சாயத்து கவுன்சில்கள் அமையவேண்டும். ஆகவே அக்டோபர் மாதம் 2-ம் தேதி கண்டிப்பாக இந்த பஞ்சாயத்து கவுன்சில்களை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI S. LAZAR: கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுதிருக் கிறபடி ஜில்லா போர்டு தனிப்பட்ட அதிகாரிகள் நடத்தி வரக்கூடிய முறையை இன்னும் இரண்டு மாத காலம் நீடித்து வைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு கொண்டுவரப்பட்ட இந்த மசோதாவை நான் முழு மன தோடு வரவேற்கிறேன். ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, இந்த மசோதா வரவேண்டியதன் அவசியம் எல்லோருக்கும் தெரிந்ததே. மற்ற மசோதாக்களைப் போல அவசரமாகக் கொண்டு வந்து, அதன்பிறகு திருத்தங்களைச் செய்வதற்கு முற்படுவதற்குப் பதிலாக, இந்த ஜில்லா போர்டு அமைப்பை மாற்றியமைக்கப் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கும் அரசாங்கம், இதைப் பரிபூரணமாக நல்ல முறையில் அமைக்க வேண்டு மென்ற நோக்கத்தோடு, இதற்கு ஒரு தனிக் கமிட்டியை நிறுவி, அந்தக் கமிட்டியிலே தீவிரமாக ஆலோசனை செய்து, மிகவும் நல்ல முறையில் அமையவேண்டுமென்ற நோக்கத்தில் இந்த மசோதாவைக் கொண்டு வந்ததால் காலதாமதம் ஆகிவிட்டதாலும், இந்த சபைக்குக் கொண்டு வந்ததற்குப் பிறகும் கூட, இங்கே எல்லா அங்கத்தினர்கள் சொல்லக் கூடிய கருத்துக்களை மனதில் கொண்டு மேலும் அந்தத் தனிக்கமிட்டி யானது தனியாக உட்கார்ந்து, எல்லாக் கருத்துக்களையும் பரிசீலனை செய்

29th September 1958] [Sri S. Lazar]

அவசியமான திருத்தங்களைக் கொண்டுவந்து இந்த மசோதா சிறந்த முறையில் அமையவேண்டுமென்ற காரணத்தினுல் இன்றையதினம் எதிர்பார்த்த காலத்திற்குள் முடிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மேலும் இந்தப் பஞ்சாயத்து மசோதாவைப் பற்றி இவ்வளவு அக்கரை எடுத்துக் கொள்வதற்கு மற்றொரு காரணமும் உண்டு. நம்முடைய நாட்டிலேயே மத்திய பிளானிங் கமிஷன் திட்டப்படி, மத்திய சர்க்கார் திட்டப்படி, இந்த பஞ்சாயத்து மசோதாவைப் பொறுத்த வரையில், நம்து மாகாணம் முதன்மையிலே நிற்கிறது. இப்பேர்பட்ட ஒரு மசோதாவை வேறு எந்த ராஜ்யமும் கொண்டுவரவில்லை. நமது ராஜ்யத்தில் தான் முதன்முதலாகக் கொண்டுவரப்படுகிறது. இந்த மசோதா சிறந்த முறையில் அமையவேண்டுமென்கிற எண்ணம் அரசாங்கத்துக்கு இருக்கிற காரணத்தினுல் கால தாமதம் ஏற்படுகிறது. குறிப்பாக, இந்த இலாக்கா சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதிலே அதிக அளவு அக்கரை எடுத்துக் கொண்டு, பல திருத்தங்களை மற்றவர்கள் கொண்டுவந்த போதிலும், ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடு அவைகளைப் பரிசீலனை செய்து, அதிக சிரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறுர்கள் என்பதை எல்லோரும் பாராட்டத்தான் வேண்டும்.

இதற்கு வேறு ஒரு மாற்று யோசனையும் இருக்கிறது. ஆனுல் அந்த மாற்று யோசனை நல்ல முறையில் இருக்காது என்பதற்காக இந்தப் புதிய மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறுர்கள். இப்பொழுது சபை முன் இருக்கிற பஞ்சாயத்து மசோதாவிலே ஒரு பிரிவைச் சேர்த்து, இந்த மசோதா சட்டமாவதற்கு காலதாமதம் ஆனபோதிலும், இடைக் காலத்தில் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் செய்யக்கூடிய காரியங்களை அங்கிகரித்து, பின்னர் அந்த மசோதாவிற்கு திருத்தம் கொண்டு வருவதற்குப் பதிலாக இன்னும் இரண்டுமாத காலத்திற்கு ஜில்லா போர்டுகளின் ஆயுள் நீடித்திருக்கவேண்டுமென்று தனியாகவே ஒரு மசோதா கொண்டுவந்திருப்பதை வரவேற்க வேண்டும். அப்படி ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தால் அது செல்லுமா, செல்லாதா என்ற பிரச்னைகள் எழும். அதற்கு இடம் கொடாமல், இப்படி ஒரு தனி மசோதாவை அவர்களாகவே கொண்டு வந்ததைக் குறித்துப் பாராட்டத்தான் வேண்டும். இந்த ஜில்லா போர்டுகளுக்கு இன்னும் இரண்டு மாத காலத்திற்கு நீடிப்புக் கொடுக்கிற நேரத்திலே, அந்த இரண்டு மாத காலத்திலும் அவர்களுடைய வேலையைச் செவ்வனே செய்வதற்கு தேவையான சகல உதவிகளையும், பணம் இல்லையே என்பதற்காக எந்தக் காரியத்தையும் அவர்கள் விட்டுவைக்கா வகையில், செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இந்த மசோதாவைப்பற்றி அதிகமாக பேசுவதற்கு அவசியமில்லை என்று நான் நினைக்கிறேன். இந்த மசோதா ஏதோ ஒன்று, இரண்டு பேர்கள் சேர்ந்து அவசரப்பட்டு கொண்டு வரவேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த சபையின் முன் வைக்கப்படவில்லை. பஞ்சாயத்து பில்லைப்பற்றி எல்லோரும் யோசனை சொல்லுவதற்கு வாய்ப்பு கொடுத்து, அதை ஆரஅமர யோசித்து தக்க முறையில் அமைக்கவேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு தான் செய்யப்பட்டது. அதனுல் தான் அந்த பில்லைக் கொண்டு வருவதற்கு கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டது. 3 தினங்களுக்கு முன்னுலேயே இந்த பில் இந்த சபையில் அங்கிகாரம் பெறவேண்டுமென்ற நோக்கத்துடன் கொண்டுவரப்பட்டது. ஆனுல், அதிகமாக அங்கத்தினர்கள் அதைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்று சொன்னதாலும், திருத்தங்கள் அதிகமாக கொடுக்கப்பட்டிருப்பதாலும், இந்த பில்லை பாஸ் செய்வதற்கு இன்னும் கொஞ்சம் நாள் கூடுதலாகிறது. அதனுல் குறித்த காலத்தில் இந்த பில்லை சட்டமாக்கி அமுலுக்குக்கொண்டு வருவதற்கு முடியவில்லை. இன்னும் ஒரு மாதத்திற்குள் இந்த பஞ்சாயத்து பில் சட்டமாக முடியாததால், ஜனவரி மாதக் கடைசி வரையிலும் நாள் நீடிப்பு இப்பொழுது கோரப்படுகிறது.

[3-20 p.m.]

[Srimathi Lourdhammal Simon] [29th September 1958

இதே சமயத்தில் சில அங்கத்தினர்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவித்தார்கள். கனம் செல்வராஜ் அவர்கள் ஸ்பெஷல் ஆபீஸர்கள் ஜருராக வேலை செய்கிருர்கள், சிக்கன முறையை கையாளுகிருர்கள், பியூன்களை குறைத்து நன்ருக வேலை செய்கிருர்கள் என்று சொன்னுர்கள். அதைக் கேட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். இவ்வாறு பொது மக்களும், உத்தியோகஸ்தர்களும் ஒத்துழைத்து சிக்கன முறைகளை கையாண்டால் நாம் எண்ணியிருக்கும் காரியங்கள் நல்ல முறையில் நிறைவேறும் என்று எதிர்பார்க்கிறேன்.

அதுவும் தவிர, இந்த நாள் நீடிப்பது யார் தவறுதலாலும் ஏற்பட்டது அல்ல. கனம் அங்கத்தினர் முத்தையா அவர்கள் பேசும்பொழுது இந்த பில்லை தயாரிப்ப வர்கள் திறமையாக நடந்துகொள்ளாததால் இவ்விதமாக காலதாமதம் ஏற்பட்டது என்று சொன்னுர்கள். அதை நான் முற்றிலும் ஏற்க மறுக்கிறேன். அவர்கள் திறமையாக ஊக்கத்துடன் உழைத்ததால் தான் இந்த நிலையிலாவது இந்த பில்லை கொண்டுவர முடிந்தது. இல்லாவிட்டால், இவ்வளவு நிலைக்கு இந்த பில் வந்திருக்க முடியாது. அவர்கள் திறமையாக வேலை செய்ததால் அதை இவ்வளவு சீக்கிரமாக முடித்து சட்ட சபையின் முன்பு கொண்டு வரமுடிந்தது. ஏதோ வெகு சீக்கிரம் இந்த பில்லைக் கொண்டுவந்து முடிக்க வேண்டுமென்று நினைத்தால் ஒரு சிலர் கூடி இதற்கான திட்டங்களை வகுத்து, மற்றவர்களுடைய ஆலோசனைக்கு இவற்றை விடாமல், அங்கத்தினர்கள் இவ்வளவு விரிவாக இதைப் பரிசீலனை செய்வதற்கு இடம் கொடுக்காமல் செய்திருந்தால், இந்த பில்லை எப்பொழுது வேண்டுமானுலும் நாங்கள் தயாரித்திருக்கலாம். அதை இதற்குள்ளாக அமுலுக்குக் கொண்டு வந்தும்கூட இருக்கலாம். ஆனுல், அரசாங்கம் அவ்விதமாக நினைக்கவில்லை. இந்த முக்கியமான மசோதாவை எல்லோரும் பரிசீலிக்க அவகாசம் கொடுக்கவேண்டும் என்ற கருத்துடன்தான், இது சபை முன்பு கொண்டுவரப்பட்டு எல்லோரும் விவாதத்திலே கலந்துகொள்ளுவதற்கு அவகாசம் கொடுக்கப்படுகிறது. ஆகையால், நாள் நீடிப்பு கோருவதற்கு யாருடைய தவறுதலும் காரணமில்லை. கவனம் இல்லாததால் ஏற்பட்ட ஒரு நாள் நீடிப்பு அல்ல இது. சட்டசபையின் ஒவ்வொரு அங்கத்தினரும் இதற்கு பாத்தியதை உள்ளவர். எல்லா அங்கத்தினர்களும் இந்த பில்லிலே ஆலோசனை கொடுப்பதற்கு ஆசைப்பட்டார்கள். அவர்களுக்கு ஆலோசனை கூறுவதற்கு வாய்ப்பு கொடுக்கவேண்டும், அங்கத்தினர்களுடைய திருத்தங்களில் நியாயமாக இருக்கக்கூடியவற்றை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்ற நோக்கத்துடன் தான் இந்த மசோதா இந்த சபையில் விவாதிக்கப்படுகிறது. ஆகையினுல், இந்த மசோதாவை குறித்த காலத்தில் பாஸ் செய்ய முடியவில்லை. கொஞ்சம் நாள் நீடித்து விட்டது. ஜில்லா போர்டுகளிலுள்ள கஷ்டங்களை நீக்கி, அங்கே வேலைகளை உடனடியாக நடத்தவேண்டுமென்று ஒரு எண்ணம் இருக்கிறது. ஜில்லா போர்டுகளுக்கு கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை அங்கத்தினர்கள் ஏற்கிருர்கள். அந்த முறையிலாவது அங்கு தொல்லைகள் இருக்கின்றன என்று அங்கத்தினர்கள் ஒத்துக்கொள்ளுவது பற்றி நான் மகிழ்ச்சி அடைகிறேன். திட்டங்களுக்கு கூடுதலான பணம் தேவையாக இருந்ததால் தான், இந்த முறையை மாற்றி அமைக்கவேண்டும், இலகுவான முறையை கையாளவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த மாறுதல்களை ஏற்படுத்தும் பஞ்சாயத்து பில்லை கொண்டுவந்திருக்கிருேம். ஆகவே, இந்த நாள் நீடிப்பு மசோதாவிற்கு அங்கத்தினர்கள் எல்லோருமே தங்கள் ஆதரவை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : The question is—

'That the Madras District Boards (Amendment) Bill, 1958, (L.A. Bill No. 36 of 1958) be taken into consideration.

The motion was put and carried and the Bill was taken into consideration.

29th September 1958]

Clause 2 was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Sir, I move—

'That the Madras District Boards (Amendment) Bill, 1958, (L.A. Bill No. 36 of 1958) be passed.'

MR. SPEAKER : Motion moved—

'That the Madras District Boards (Amendment) Bill, 1958, (L.A. Bill No. 36 of 1958) be passed.'

SRI A. GOVINDASAMY : ஜில்லா போர்டுகளில் ஸ்பெஷல் ஆபீஸர்களுடைய ஆயுள் காலத்தை நீடிக்கும் இந்த மசோதாவை வரவேற்று சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இப்பொழுது ஜில்லா போர்டு ஸ்பெஷல் ஆபீஸர்கள் அநேகமாக எல்லா இடங்களிலும் நல்ல விதமாக வேலை செய்கிறார்கள். ஆனால் அவர்களுடைய வேலை நடப்பதற்கு பணமுடை அதிகமாக இருக்கிறது. நான் சொன்ன கருத்தை அமைச்சர் அவர்கள் வரவேற்கிறார்கள். ஆனால், பணம் என்று சொல்லும்பொழுது நிதி அமைச்சர் அவர்களை காட்டக்கூடும். ஜில்லா போர்டுகளுக்கு பணமுடை இருக்கும் காரணத்தினால், அது பற்றி அமைச்சர் அவையும், இந்தக் குழுவும் கூட பரிசீலித்ததாகத் தெரிகிறது. ஜில்லா போர்டுகள் ரயில்வே ஸெஸ் நிதியை உபயோகப்படுத்துவதற்கு அனுமதி கொடுத்தோ அல்லது அவர்களுக்கு கடன் கொடுத்து உதவ முன்வந்தாலோ, ஜில்லா போர்டு ஸ்பெஷல் ஆபீஸர்கள் இருக்கும் வேலைகளை கவனித்து ஏற்கனவே போட்ட திட்டங்களை நிறைவேற்ற முடியும். அதற்கு வேண்டிய வசதியாவது செய்து தரவேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ளுகிறேன். இது சம்பந்தமாக ஒவ்வொரு ஜில்லா போர்டிலும் குறைபாடு இருந்துகொண்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் ஏற்படுகின்ற நேரத்திலே, பஞ்சாயத்து கவுன்சில் ஏற்படாத பகுதிகளுக்கு இப்பொழுது இருக்கிற ஜில்லா போர்டு அட்வைஸரி கமிட்டி அமுலில் இருக்குமா, அல்லது இவைகள் நீக்கப்படுமா என்ற தகவல் கிடைக்கவில்லை. அதுபற்றி கருத்து தெரிவித்து இந்த மசோதாவை நிறைவேற்றிக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இப்பொழுது ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு பஞ்சாயத்து அமைக்கப்பட இருக்கிறது. பஞ்சாயத்துகள் அமைக்கப்பட்ட பிறகு, ஒவ்வொரு என். ஈ. எஸ். பிளாக்கிற்கும் ஒரு பஞ்சாயத்து யூனியன் அமைக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு பஞ்சாயத்து பில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டப்படி எல்லா இடங்களிலும் 1961–ம் வருடம் அக்டோபர் 2-ம் தேதிக்குள் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அமைக்கப்படும் என்று எதிர்பார்க்கிறோம். அந்த தினத்திற்குமுன் எல்லா பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களும் அமைக்கப்படும். அதற்காக திட்டவாரியாக ஒரு நாளோ, மாதமோ குறிப்பிடப்படவில்லை. எந்தெந்த இடங்களில் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் அமைக்கப்படுகிறதோ, அப்பொழுது தான் அந்த இடங்களில் ஜில்லா வாரியாக ஸ்பெஷல் ஆபீஸர்கள் கடமைகள் மாற்றி அமைக்கப்படும். அதற்கு வேண்டிய ஷரத்துக்களை இந்த பஞ்சாயத்து மசோதாவில் கொண்டுவந்திருக்கிறோம். அதன்படி திட்டங்கள் கவனிக்கப்படும்.

MR. SPEAKER : The question is—

'That the Madras District Boards (Amendment) Bill, 1958, (L.A. Bill No. 36 of 1958) be passed.

The motion was put and carried and the Bill was passed.

(3) THE MADRAS WEIGHTS AND MEASURES (ENFORCEMENT) BILL, 1958 (L.C. BILL NO. 7 OF 1958).

MR. SPEAKER : Yesterday we had a general discussion on the Madras Weights and Measures (Enforcement) Bill, 1958, and to-day we will consider the Bill clause by clause.

Clause 2.

MR. SPEAKER : The motions is :

' That clause 2 do stand part of the Bill.'

SRI M. JAGANNATHAN : Sir, I move—

' In clause 2 in sub-clause (*f*) *for* the word " Central " *substitute* the word " Union ".'

' In clause 2 in sub-clause (*g*) in line 3 *for* the word " Central " *substitute* the word " Union ".'

' In sub-clause (*h*) between the words " and includes " and the word " casting " *insert* the word " painting ".'

SRI A. GOVINDASAMY : Sir, I second them.

MR. SPEAKER : The clause and the amendments are before the House for discussion.

* SRI M. JAGANNATHAN : Sir, my amendment reads like this—

' In clause 2 in sub-clauses (*f*) and (*g*) for the word " Central " *substitute* the word " Union ".'

This is a simple amendment. Though it appears to be a verbal amendment, there is some meaning in it. In my opinion, the use of the word ' Union ' will be more appropriate than the use of the word ' Central '. Instead of saying ' Central Government ' I think, in the present context of the structure of our Government, it is better that we use the expression ' Union Government '. No longer our Government is a unitary type of Government. It is a Federal Government consisting of several States and they are units of the Federation of India. Therefore, instead of saying ' Central Government ' if we say ' Union Government ' it would be much better.

Moreover, as far as my knowledge of the Constitution of India goes, the expression ' Central Government ' is not found in the Constitution of India. Therefore, I think, the Government will not find it difficult to accept my amendment.

MR. SPEAKER : The hon. Member can speak on his other amendment also.

SRI M. JAGANNATHAN : Sir, my other amendment reads like this—

' In sub-clause (*h*) between the words " and includes " and the word " casting " insert the word " painting ".'

' Stamping ' is defined as marking in such manner as to be so far as practicable, indelible and includes casting, engraving, etching

29th September 1958] [Sri M. Jagannathan]

and branding. My amendment seeks to include 'painting' as well. For instance, there may be some glass vessels like glass-mugs which may be painted upon. Oil-painting may be used for the purpose of stamping. Therefore, that category of painting in respect of glass vessels has not been contemplated upon and it is not provided for in this definition. I think, my amendment is self-explanatory and needs no more explanation. I hope the Government will find no difficulty in accepting it.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I am not able to accept the amendments because the word 'Central' is used in all State enactments. It is also referred to as the 'Central Act' and not the 'Union Act'. That is the prevailing fashion and so we need not change it.

With regard to the amendment for the insertion of the word 'painting', if painting is done, it may corrode the body and eat away a little of the weight. Also, 'stamping' is very clearly defined and therefore, I do not see any reason why we should add the word 'painting'. Moreover, painting can be washed off. Therefore, I oppose the amendments.

SRI S. LAZAR : On a point of information, Sir. May I know from the Hon. Minister the exact word used in the Constitution of India whenever reference is made to the Central Government or the Union Government? Is the word 'Union' or the word 'Central' used there?

MR. SPEAKER : Why does the hon. Member want the Hon. Minister to clarify it?

THE HON. SRI M. A. MANICKAVELU : Usually the word 'Central' only is used in all State enactments, and not the word 'Union'.

The amendments were put and lost.

Clause 2 was put and carried.

Clauses 3 to 8 were put and carried.

Clause 9.

MR. SPEAKER : The motion is—

"That clause 9 do stand part of the Bill."

SRI M. JAGANNATHAN : Sir, I move—

'*After* the words "Every weight or measure" *add* the words "and their denominations".'

'*After* the word "prescribed" *add* the following words "subject to the exemption given in section 12".'

SRI. A. GOVINDASAMY : Sir, I second them.

MR. SPEAKER : The motion and the amendments are before the House for discussion.

SRI M. JAGANNATHAN : Sir, my first amendment reads as follows :—

' *After* the words " Every weight or measure " *add* the words " and their denominations ".'

The heading for clause 9 reads like this—

' Marking of denominations on commercial weights and measures '.

Clause 9 says—

' Every weight or measure manufactured for use as a commercial weight or measure . . .'

My amendment says that not only weight or measure but also all denominations must be included in this clause. Only then, in my opinion, it makes sense. We are not only marking weights and measures as such but also their denominations. Therefore, it is better that we actually provide for the denominations also in the clause. I think, the Government will accept this amendment.

MR. SPEAKER : The hon. Member can speak on his other amendment also.

SRI M. JAGANNATHAN : Sir, my second amendment reads like this—

' *After* the word " prescribed " *add* the following words " subject to the exemption given in section 12 ".'

This is not a big amendment. Clause 12 provides for exemption and I think it is better that clause 12 is made to include clause 9 also.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I oppose the amendments. What is stated in clause 9 is as follows—

' Every weight or measure manufactured . . .'

If we add the word ' denominations ' it will mean that denominations also can be manufactured. I do not know how denominations can be manufactured.

The amendments were put and lost.

Clause 9 was put and carried.

Clause 10.

MR. SPEAKER : The motion is—

' That clause 10 do stand part of the Bill.'

SRI M. JAGANNATHAN : Sir, I move—

' *After* the word " verification " *add* the words " subject to the exemption given in section 12 ".'

29th September 1958]

SRI A. GOVINDASAMY : Sir, I second it.

MR. SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I oppose the amendment. For that, provision is already made in clause 12 and I do not think the amendment is necessary.

The amendment was put and lost.

Clause 10 was put and carried

Clause 11.

MR. SPEAKER : The motion is— 3-40 p.m.

" That clause 11 do stand part of the Bill ".

SRI M. JAGANNATHAN : Sir, I move—

" *After* the word ' verification ' occurring at the end, *add* the words ' subject to the exemption given in section 12 '."

SRI A. GOVINDASAMY : Sir, I second the amendment.

THE HON. SRI A. MANICKAVELU : Sir, this amendment is similar to the previous one and I do not accept this also.

The amendment was put and lost.

Clause 11 was put and carried.

Clauses 12 *to* 19.

MR. SPEAKER : The motion is—

" That clauses 12 to 19 do stand part of the Bill ".

* SRI A. GOVINDASAMY : தலைவர் அவர்களே, இதிலே கூறப்படும் வெயிட்டுகள், நடைமுறையிலே, மணிலா மார்கெட் கமிட்டி வெயிட்டுகள் உபயோகிக்கிறார்கள். அதிலும் மாற்றம் வருகிறதா என்பது தெரிய வேண்டும். மணிலா மார்கெட் கமிட்டியால் ஏற்படுத்தப்படுகிற, ஸ்டாம்பிங் அதிகாரத்தை அந்த செக்ரடரியிடமிருந்து இந்த சட்டத்தின் கீழ் இருக்கும் இன்ஸ்பெக்டருக்கு மாற்றுவது உண்டா என்ற விவரமும் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த சட்டம் அமுலுக்கு வந்தால், இந்த முறையே எல்லாத் துரையிலும் வரும். எப்படித் தனியாருக்கு லைசென்ஸ் வழங்கப்படுகிறதோ, அதேமாதிரி, இந்த கமிட்டிக்கும் செய்யப்படும். அதையெல்லாம் விதிகள் ஏற்படுத்தும் போது செய்துகொள்ளலாம்.

Clauses 12 to 19 were put and carried.

Clause 20.

MR. SPEAKER : The motion is—

" That clause 20 do stand part of the Bill."

SRI T. SAMPATH : Sir, I move—

"In clause 20 *for* the words "sixty days' *substitute* the words 'ninety days'."

தலைவர் அவர்களே, இந்தப் பிரிவானது, சட்டத்தின் கீழ் தீர்ப்புகள் கொடுத்தால், அதற்கு ஆட்சேபணையிருந்தால், 60 நாட்களுக்குள் அப்பீல் செய்துகொள்ளலாம் என்று இருக்கிறது. நான் கொடுத்திருக்கும் திருத்தம், அந்தக் காலத்தை 90 நாட்களாகத் திருத்த வேண்டும் என்பது. இந்தப் பிரிவின் கீழ் அதிக நாள் கொடுத்தால், சிறு வியாபாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் சௌகரியமாக இருக்கும். ஸிவில் ப்ரொஸீஜர் கோடில் கூட, உயர் நீதி மன்றத்திற்கு அப்பீல் செய்துகொள்ள 90 நாட்களே கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதன் இரண்டாவது பிரிவில், தகுந்த காரணம் சொல்லி, 60 நாட்களுக்குள் அப்பீல் போடமுடியவில்லையென்றால், அந்த மாதிரி அப்பீல்களும் ஏற்றுக்கொள்ளப்படலாம் என்றிருக்கிறது. இருந்த போதிலும், 90 நாட்களாக இருந்தால் சௌகரியமாக இருக்கும். ஆகவே இந்த என் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

The amendment was duly seconded.

SRI S. M. ANNAMALAI : Sir, I move—

"In sub-clause (1) after the words 'to him' *add* the words 'by registered post'".

அப்பீல் செய்ய வேண்டுமென்றால், வியாபாரிகளுக்கோ மற்றவர்களுக்கோ விஷயம் தெரிய வேண்டும். விற்பனை வரி விஷயத்தில் கூட, கடிதங்கள் சரியான காலத்தில் அவர்களுக்குக் கிடைக்காததால் ஜப்திக்கு வருவது தெரியாமல் போய் இருக்கின்றன. ஆகவே அவர்களுக்கு இவற்றை ரெஜிஸ்ட்ரட் போஸ்ட் மூலமாக அனுப்பி, தெரிந்து கொண்ட பிறகே, 60 நாட்களுக்குள்ளாகவோ, அல்லது கனம் சம்பத்து சொன்ன மாதிரி, 90 நாட்களுக்குள்ளாகவோ அப்பீல் செய்து கொள்ளலாம் என்று இருக்க வேண்டும். ஆகவே, ரெஜிஸ்தர் போஸ்ட் மூலமாகத்தான் அவை அனுப்பப் படவேண்டும் என்ற என் சிறு திருத்தத்தை சர்க்கார் ஏற்றுக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

The amendment was duly seconded.

THE HON. SRI M. A. MANICKAVELU : தலைவர் அவர்களே, இந்த அப்பீல் காலத்தை 60-ல் இருந்து, 90 நாட்களாக மாற்ற வேண்டும் என்று கூறிய அங்கத்தினரே அதற்கு விளக்கமும் கொடுத்தார்கள். நாட்பட்டதற்கும் அனுமதி கொடுக்க சர்க்காருக்கு உரிமை இருக்கிறது என்று. அந்த வகையில் நாட்களை அதிகமாக்கினாலும் அதைச் சட்டத்திலே போட வேண்டியதில்லை. ஆகவே இந்த திருத்தத்தை ஒத்துக் கொள்ள முடியாது. மேலும், நாம் இந்த மசோதாவை, மத்திய சர்க்காரோடும், மற்ற ராஜ்யங்களோடும் ஒட்டி, மாடல் என்ற முறையிலே செய்கிறோம். ஆகவே, கூடுமான வரையில், அத்யாவச்யமானதைத் தவிர மற்றவைகளை மாற்ற வேண்டியதில்லை.

ரெஜிஸ்டர்ட் போஸ்ட் மூலமாக தெரிவிக்கவேண்டும் என்று கேட்டார்கள். சாதாரணமாக நீதி நிலயத்திலேயே அது தெரிவிக்கப்படும். அப்படியில்லாத சந்தர்ப்பங்களில், போஸ்ட் மூலமாக அனுப்பும் நேரத்தில், ரெஜிஸ்டர்ட் போஸ்ட் மூலமாக அனுப்பக் கூடிய வசதியைச் சர்க்கார் செய்யும்.

29th September 1958]

The amendments were, by leave, withdrawn.

Clause 20 was put and carried.

Clauses 21 and 22 were put and carried.

Clause 23.

MR. SPEAKER : The motion is—

"That clause 23 do stand part of the Bill."

SRI T. SAMPATH : Sir, I move—

"In clause 23 in line 3 *for* the words, 'three months', *substitute* the words 'six months'."

SRIMATHI T. N. ANANDANAYAKI : Sir, I second the amendment.

SRI S. M. ANNAMALAI : Sir, I move—

"In clause 23 in line 9 *for* the words 'five hundred', *substitute* the words 'two hundred'."

The amendment was duly seconded.

SRI M. JAGANNATHAN : Sir, I move—

"Between the words 'with imprisonment' and the words 'for a term' *insert* the words 'of either description'."

The amendment was duly seconded.

SRI T. SAMPATH : Sir, I move—

"In clause 23 in line 11 *for* the words 'three months' *substitute* the words 'two months'".

MR. SPEAKER : This amendment falls through for want of a seconder.

The clause and the amendments are before the House for discussion.

SRI T. SAMPATH : ஸார், இந்த 23-வது பிரிவுக்கு ஒரு சிறு திருத்தம் கொடுத்திருக்கிறேன். இந்த சட்டம் அமுலுக்கு வந்த பிறகு, இதன் ஷரத்துக்களை யாராவது மீறினால், தண்டனை ரூ. 500-ம் சிறை வாசமும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் சட்டம் அமுலுக்கு வந்த மூன்று மாதத்திற்குப் பிறகு என்பதை ஆறு மாதத்திற்குப் பிறகு என்று திருத்த வேண்டும் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். வியாபாரிகளானாலும் சரி, பொது ஜனங்களானாலும் சரி, பரிச்சியம் ஆவதற்கு கொஞ்ச காலம் ஆகும். ஆகவே, அது 6 மாதம் என்றிருந்தால் சௌகரியமாக இருக்கும்.

SRI M. JAGANNATHAN : Sir, the amendment standing in my name reads as follows : "Between the words 'with imprisonment' and the words 'for a term' insert the words 'of either description'". Clause 23 deals with penalty for sale or delivery

of weight or measure other than standard weight or measure. My amendment seeks to provide for the option to be given to the convicting Magistrate who may award a sentence of either simple imprisonment or rigorous imprisonment. It is not provided in the rules. Therefore, I have moved this amendment and I hope the Government will accept it.

SRI S. M. ANNAMALAI : கனம் தலைவர் அவர்களே, பரிமாண எடை அல்லது அளவையினால் அல்லாமல் இதர எடை அல்லது அளவை மூலம் விற்பனை செய்வதற்கு அல்லது ஒப்படை செய்வதற்குத் தண்டனை என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இரண்டாயிரம் ரூபாய்
3-50 p.m. தண்டனை என்று இருந்தது. கவுன்சிலில் 500 ரூபாயாக்கினார்கள். "slow and steady wins the race" என்று சொல்லுவதைப்போல் கொஞ்சம் கொஞ்சமாக இதைப் புகுத்துகிறோம் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார். அதாவது பத்து வருஷங்களில் இதைக்கொண்டு வருவதாகச் சொல்லுகிறார். அதனால் 500 ரூபாய் என்று இருப்பது தேவையில்லை. 200 ரூபாய் போதும் என்று திருத்தம் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆகவே அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : கால அளவைப்பற்றி கனம் அங்கத்தினர் பேசினார். இந்தக் கால அளவு ஒரு பக்கம் சௌகர்ய மாக இருந்தாலும் ஒரு அளவில் சௌகர்யமாக இருக்காது. அந்த அளவில் தான் இப்பொழுது குறைவரகப் போடப்பட்டிருக்கிறது. அதனால் மீண்டும் அதில் மாறுதல் செய்ய வேண்டியது அவசியம் இல்லை என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது " Imprisonment of either description, rigorous or simple " என்பதை இதனால் ஒத்துக்கொள்வதாக இருந்தேன். ஆனால் ஜெனரல் க்ளாஸஸ் ஆக்ட் பிரகாரம் பார்க்கும்போது " Imprisonment shall mean, imprisonment of either description as defined in the Indian Penal Code " என்று அதுவும் இருக்கிறது. அதனால் அதை அப்படியே விட்டுவிடலாம் என்று இருந்தேன். ஆனால் ஒத்துக்கொள்வதனாலும் பாதகம் இல்லை. ஏதாவது ஒரு திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென் பதற்காக வேண்டுமானால் ஒத்துக்கொள்ளலாம்.

SRI A. GOVINDASAMY : More specific-காகவும், clear ஆகவும் இருப்பதற்காகத்தான் இதை ஒத்துக்கொள்ளவேண்டும்.

THE HON. SRI M. A. MANICKAVELU : I have no objection to accept it. அதை நான் ஒத்துக்கொள்ளுகிறேன். இப்பொழுது 2,000 என்று இருந்ததை 500 ரூபாயாக குறைத்திருக்கிறோம். ரூபாய் 200 என்று இருந்தால் அப்பொழுதும் 100 ஆக குறைக்கவேண்டும் என்று தான் சொல்லுவார்கள். அதனால் குறைப்பதற்கு எல்லையே கிடையாது. அதனால் இப்பொழுது இருக்க வேண்டியதைக் குறைக்க வேண்டிய அவசியம் இல்லை.

The amendment of Sri T. Sampath was, by leave, withdrawn.

The amendment of Sri S. M. Annamalai was put and lost.

MR. SPEAKER : Is the Hon. Minister accepting the amendment of the hon. Member Sri Jagannathan?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir.

MR. SPEAKER : I will now put the amendment of the hon. Member Sri Jagannathan to the vote of the House.

29th September 1958]

* THE HON. SRI M. A. MANICKAVELU : Mr. Speaker, Sir, I want to explain the position. I was under the impression that the Bill will go to the Council after passing through this House. But actually this Bill has come from the other House. If any amendment is made in the Bill at this stage it will have to go to the other House again for its concurrence. For this reason and for the reason that the amendment is not a very vital one, I request the hon. Member Sri Jagannathan to withdraw the amendment.

SRI M. JAGANNATHAN : I withdraw my amendment, Sir.

The amendment was by leave withdrawn.

Clause 23 was put and carried.

Clause 24.

MR. SPEAKER : The motion is—

'That clause 24 do stand part of the Bill.'

SRI V. K. KOTHANDARAMAN : Mr. Speaker, Sir, I move—

"*Add* at the end of the words 'or imprisonment for a term which may extend to one year, or with both.'"

The amendment was duly seconded.

MR. SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், 24-வது க்ளாசில் முத்திரை இடப்படாத வியாபார எடைகளையும் அளவைகளையும் விற்பனை செய்வதற்கு தண்டனை என்று இருக்கிறது. முத்திரையிடப்படாத வியாபார எடையை அல்லது அளவையை அல்லது எடைபோடும் அல்லது அளவிடும் கருவியை எவரேனும் விற்றால் அல்லது ஒப்படை செய்தால் அதற்கான தண்டனை எப்படி விதிக்கப்படும் என்பது குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கு 2,000 ரூபாய் என்று சொல்லக்கூடிய நேரத்தில் பெரிய பெரிய வியாபாரிகள் அதில் எவ்வளவோ இன்றைக்கு தவறுகள் செய்கிறார்கள். அவர்கள் 2,000 அல்லது எவ்வளவு வேண்டுமானாலும் கட்டுவதற்கு தயாராக இருப்பார்கள். அதனால் அதோடு கூட சிறை தண்டனையும் விதிக்கப்பட வேண்டும் என்பதற்காக இதில் ஒரு வருஷ தண்டனையையும், அபராதத்தையும், ஆக இரண்டையும் சேர்த்து விதிக்கக்கூடிய அளவுக்கு இதைக் கொண்டுவர வேண்டும் என்பதற்காக இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். இதை கனம் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளுவார் என்றே நினைக்கிறேன்.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Mr. Speaker, Sir, I am sorry I have to oppose it. It was suggested by very many hon. Members that it being a new Act, people would not understand the implications of the Act and that therefore it must be gradually and slowly pushed through and all that. That being so, we cannot now introduce a very drastic punishment under this section. That is the reason why the clause confines itself to only fine. Therefore I think the clause may stand as it is.

The amendment was put and lost.

Clause 24 was put and carried.

Clause 25.

MR. SPEAKER : The motion is—

'That clause 25 do stand part of the Bill'.

SRI V. K. KOTHANDARAMAN : Mr. Speaker, Sir, I move—

"That *for* the words 'three months' in the penultimate line, *substitute* the words 'one year'."

SRI K. SATTANATHA KARAYALAR : I second the amendment.

MR. SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், இந்த 25-வது க்ளாசும் முன்புள்ள 24-வது க்ளாசைப்போலுள்ளது தான். அதாவது முத்திரையிடப் படாத வியாபார எடைகளையும், அளவைகளையும் உபயோகிப்பதற்கு தண்டனை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. முத்திரை யிடப்படாத அல்லது மீண்டும் சரி பார்க்கப்பட்டிராத அல்லது முத்திரை யிடப்பட்டிராத வியாபார எடையை அல்லது அளவையை அல்லது எடைபோடும் அல்லது அளவிடும் கருவியை உபயோகப்படுத்தினால் மூன்று மாத சிறை தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி இல்லாமல் மூன்று மாதம் என்று இருப்பதை ஒரு வருஷம் என்று திருத்தி அமைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் அப்படியே மூன்று மாதங்கள் என்று இருப்பதை ஆறுமாதங்கள் என்றாவது மாற்றிக்கொண்டால் நலமாக இருக்கும் என்று என்னுடைய அபிப்பிராயத்தை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இதில் முக்கியமான விஷயம் என்ன என்பதை பார்க்க வேண்டும். இதில் தண்டனை வெறும் அபராதத்துடன் நின்று விடவில்லை. அதற்கு சிறை தண்டனையும் இருக்கிறது. அப்படி சிறை தண்டனைக்கு இடம் இருக்கும்போது மூன்று மாதங்கள் என்பதற்கோ அல்லது ஆறு மாதங்கள் என்பதற்கோ இடம் இல்லை. இப்பொழுது இருக்கிறபடியே மூன்று மாதங்கள் என்று இருக்கலாம்.

The amendment was put and lost.

Clause 25 was put and carried.

Clauses 26 to 42 were put and carried.

Clause 43.

MR. SPEAKER : The motion is—

'That clause 43 do stand part of the Bill'.

SRI K. SATTANATHA KARAYALAR : சபாநாயகர் அவர்களே, 43-வது ஷரத்திலே, "**Power to make rules**" என்னும் தலைப்பிலே 4-வது பிரிவில்—

4 p.m. **"(4) All rules made under this Act shall, as soon as possible after they are made, be placed on the table of both the Houses of the Legislature and shall be subject to such modifications by way of amendments or repeal as the Legislature may make within fourteen days on which each House actually sits either in the same session or in more than one session."** என்று இருக்கிறது. அதிலே, " . .

29th September 1958] [Sri K. Sattanatha Karayalar]

shall be subject to such modifications by way of amendments or repeal as the Legislature may make within fourteen days on which each House actually sits either in the same session or in more than one session " என்ற குறிப்பு இருக்கிறது.

ஆனல், சாதாரணமாக இதுவரை நாம் செய்திருக்கும் சட்டங்களிலே " each House of the Legislature " என்று பொதுவாகக் குறிப்பதற்குப் பதிலாக " . . . . as the Legislative Assembly may make within fourteen days on which the House actually sits either in the same session or in more than one session " என்று தான் இதுவரை செய்திருக்கிறோம்.

இப்பொழுது நாம் நிறைவேற்றுகிற இந்தச் சட்டத்திற்கு ஏதாவது புதிய திருத்தம் இனி கொண்டுவரும்போது, இப்பொழுது புதிதாக போட்டிருக்கும் முறைப்படி இந்தச் சபையிலும், மேல் சபையிலும் திருத்தங்களைக் கொண்டு வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. மேல் சபைக்கு இந்த அதிகாரத்தைக் கொடுப்பதற்கு நான் எதிராக பேசவில்லை. ஆனல், நடைமுறை சாத்தியத்தில் ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்து, 14 நாட்களுக்குள்ளாக இந்தச் சபையிலும் நிறைவேற்றி, மேல் சபையிலும் நிறைவேற்றுவது என்றால் அது நடைமுறையில் சாத்தியமாகாமல் போய்விடலாம். இதை சாத்தியமாகக் கொண்டுவர வேண்டுமானல், 14 தினங்களை ஒன்றிரண்டு மாதங்களாக மாற்றவேண்டும்; அல்லது லெஜிஸ்லேடிவ் அசெம்பிளிக்கு மாத்திரம் அதிகாரம் இருக்க வேண்டும். அது இல்லாத முறையில் இரண்டு சபைக்கும் அதிகாரம் கொடுத்திருப்பதும், 14 நாட்கள் என்ற குறுகிய கால வரம்பு கொடுத்திருப்பதும் நடைமுறையில் சாத்தியமாக இருக்காது. ஸபார்டினேட் லெஜிஸ்லேஷன் கமிட்டி கூட இதே அபிப்பிராயத்தைத்தான் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, இதை ஒத்துக்கொள்ளுவார்கள் என்று நான் கருதுகிறேன்.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, from the pattern that is being followed in respect of the matter, the practice now obtained is to place the rules on the table of both the Houses. The other House is very particular that the rules should be placed on the table of the other House also. That is why in all enactments we are trying to place the rules on the table of both the Houses. Then about the difficulty mentioned about the period stated in the clause, I do not think we have experienced difficulty so far in respect of that matter. As regards the verbal change suggested, no doubt we are using the word ' legislature ' in such clauses. If the change suggested by the hon. Member is made in the clause, the Bill will have to be sent back to the Council. The change is not of great importance, since it relates only to the phraseology. In future legislations we shall take care to use the right phraseology. My submission is that this clause may go as it is.

Clause 43 was put and carried.

Clause 44 was put and carried.

Clause 1.

MR. SPEAKER : The motion is—

' That clause 1 do stand part of the Bill '.

[29th September 1958

SRI S. M. ANNAMALAI : Mr. Speaker, Sir, I move—

"That in sub-clause (3) *after* the words 'such date' *add* the words 'after five years'."

The amendment was duly seconded.

MR. SPEAKER : The House having taken a decision that it will not agree to the postponement of the consideration of the measure for a period of five years, the hon. Member Sri S. M. Annamalai cannot raise the issue again under clause 1. I therefore rule his amendment out of order.

SRI A. GOVINDASAMY : He is not pressing it, Sir.

MR. SPEAKER : If the hon. Member did not want to have his amendment ruled out of order but wanted a more dignified disposal he should not have moved it.

The hon. Member Sri Kothandaraman may move his amendment.

SRI V. K. KOTHANDARAMAN : Mr. Speaker, Sir, I move—

'That in sub-clause (3) *omit* the words 'or for different areas'.

The amendment was duly seconded.

SRI V. K. KOTHANDARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, நீட்டல், நிறுத்தல், முகத்தல் அளவை பற்றிய மசோதாவை நிறைவேற்றியவுடனே, குறிப்பிட்ட மூன்று, நான்கு ஜில்லாக்களிலே மட்டும் தான் கொண்டுவரப்போவதாக ஏற்கெனவே பத்திரிகைகளிலே செய்தி மூலமாக பார்த்தோம். எந்த எந்தப் பகுதியில், எப்படி எப்படி கொண்டு வருவது என்பதை நிர்ணயிக்கக்கூடிய அதிகாரம் சர்க்காருக்கு உண்டு என்பது நமக்குத் தெரிந்த விஷயம். ஒரு சில ஜில்லாக்களில் மட்டும் இதை அமுலுக்குக் கொண்டுவருவதனால், ஒரு சில ஜில்லாக்களில் பழைய முறையை வைத்துக்கொண்டு, மற்றும் ஒரு சில ஜில்லாக்களிலே மெட்ரிக் முறையையும் கொண்டு வருவதன் மூலம் ஒரு குழப்பமான நிலைமை ஏற்படும் என்ற ஒரு காரணத்தால்தான் "**or for different areas**" என்ற வார்த்தைகள் முதல் ஷரத்தின் (3) -வது சப்-க்ளாஸிலிருந்து நீக்கப்படவேண்டுமென்று நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். அந்த வார்த்தைகளை நீக்க வேண்டுமென்ற என்னுடைய திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

*THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது இருக்கிறதுபோல், நான்கு ஜில்லாக்களிலே முதலிலே கொண்டு வருவதாக இருக்கிறது. எந்த நான்கு ஜில்லாக்கள் என்று கேட்டால், அது இந்த மாகாண தலைநகரைச் சுற்றியிருக்கும் ஜில்லாக் களாகத் தான் இருக்கும். ஏனென்றால், அங்கே இம்மாதிரி விஷயங் களில் கொஞ்சம் முற்போக்காக இருக்கலாம் என்ற ஒரு எண்ணமும் இருக்கலாம். ஆகையால், இதை அரசாங்கம் கொஞ்சங் கொஞ்சமாகத் தான் புகுத்துவதாக இருக்கிறது. ஜனங்களுக்கு இது நன்றாகப் பழக்க மாக வேண்டும். மற்ற மாகாணங்களெல்லாம், அநேக இடங்களில் அவர்கள் ஆர்டினன்ஸ் மூலமாக இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். கொஞ்சம் கொஞ்சம் பகுதியாகத்தான் இதை அமுலுக்குக் கொண்டு வருகிறார்கள். எந்த வகையிலே இந்தச் சட்டத்தையும் கொஞ்சம் கொஞ்சமாகக் கொண்டு வந்தால் ஜனங்களுக்கு அதிக பாதகம் ஏற்படாமல்

29th September 1958] [Sri M. A. Manickavelu]

புகுத்த முடியுமோ இந்த வகையிலே அரசாங்கம் அந்தச் சட்டத்தின் கீழ் விதிகள் இயற்றி, ஜனங்களுக்கு அதிகத் தொந்தரவு இல்லாமல் புகுத்து வதற்கு ஏற்பாடு செய்யும்.

SRI M. JAGANNATHAN : May I know, Sir, whether the Government are going to enforce the Act in respect of all classes of goods and to all kinds of undertakings or only with reference to particular class of undertakings or class of goods.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir, the idea was to phase the introduction in particular areas and on particular things. Now the idea is to introduce it in the general trade, industrial trade, industrial and other spheres, all round.

* SRI A. GOVINDASAMY : இப்பொழுது முத்திரை போடுகின்ற வேலையில் இருப்பவர்கள், இந்தத் திட்டம் அமுலுக்கு வருகிற போது, தொடர்ந்து வேலையில் இருப்பதற்கான உத்தரவாதம் அளிக்கப் படுமா என்று அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : வேலைக்கு எங்கெங்கே அவசியமோ அதுவரைக்கும் வேலைக்கு வைத்துக்கொள்ளவேண்டும். வேலைக்கு அவசியம் இல்லாதவர்களை வீட்டுக்குப் போகும்படித்தான் செய்ய வேண்டும். அதற்கு என்ன செய்வது ? அவர்களை உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டுமானால், அவர்களுக்கு லைசென்ஸ் கொடுத்துத்தான் உப யோகப்படுத்த வேண்டும்.

* SRI A. GOVINDASAMY : கவர்ன்மெண்ட் உத்தியோகத்தி லேயே . . .

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, now I am not able to say definitely as to who all we can make use of. All steps will be taken to make use of as many people as possible, those already in the field and who will be fit and whom the Government think will be able to carry out the provisions of this Bill. Such people will be drafted.

SRI V. K. KOTHANDARAMAN : கனம் சபாநாயகர் அவர் களே, " நான்கு ஜில்லாக்களில் முற்போக்காக இருக்கலாம் " என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த மாதிரி முற்போக்காக இருக்கலாம் என்று' சொன்னால், பொருளாதாரத்தில் முற்போக்கா ? அல்லது கல்வியில் முற்போக்கா ? அல்லது நாகரீகத்தில் முற்போக்கா ? எந்த அடிப்படையில் முற்போக்காக இருக்கலாம் என்று அமைச்சர் அவர் கள் சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : மாகாண தலை நகரம் சென்னை. சென்னைக்கு அம்மாதிரி அடிக்கடி வந்து போவதில் சென்னை யினுடைய நாகரீகம், இங்கே நடக்கும் விஷயங்கள் எல்லாம் மற்ற ஜில்லாக்களில் இருப்பவர்களைவிட, சென்னை நகரத்திற்கு அடுத்தாற்போல், சுற்றியுள்ள ஜில்லாக்களில் இருப்பவர்களுக்கு சற்று அதிகமாகத் தெரிந்திருக்கும்.

The amendments were put and lost.

Clause 1 was put and carried.

The preamble was put and carried.

[29th September 1958

THE HON. SRI M. A. MANICKAVELU : Mr. Speaker, I move—

' That the Madras Weights and Measures (Enforcement) Bill, 1958 (L.C. Bill No. 7 of 1958) as passed by the Legislative Council, be passed.'

4-10 p.m. இந்த மசோதாவிலே, முதலில் அதனுடைய விவரங்களைப்பார்த்தால் கொஞ்சம் பயங்கரமாகவே இருக்கும். ஏனென்றால், ஒரு அளவைச் சொல்வதிலே, ஒரு அளவுக்குச் சமமான அளவைச் சொல்லும்போது பாயின்ட் போட்டுச் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆனால் நடைமுறையில் அந்த அளவு அமுலில் வராது. ஒரு கிலோகிராம் என்றால், 2-07 பவுண்டு என்று இருக்கிறது. அதே மாதிரி மற்றவைகளுக்கும் ஒரு அளவு இருக்கிறது. முதலில் கஷ்டமிருந்தாலும், பழக்கம் ஏற்பட்டால், இதனால் அதிக அளவு நன்மை இருக்கிறது. முக்கியமாக ஏழை ஜனங்கள் இடையிலே ஏமாற்றப்படாமல் இருப்பார்கள். இப்போது இருப்பதிலே செக்கிங் கிடையாது. இப்போது ஒரு அளவுக்கு பதில் வேறு ஒரு அளவை வைத்துக்கொண்டாலும் செக்கிங் கிடையாது. ஆனால் இதிலே வொர்க்கிங் ஸ்டாண்டர்டு, ரெபரன்ஸ் ஸ்டாண்டர்டு என்றெல்லாம் அமுலுக்கு வருவதால், முதலில் கொஞ்சம் கஷ்டமிருந்தாலும், கொஞ்ச காலத்திற்குப் பிறகு நன்மை இருக்கிறது. எந்தத் துறையிலும், ஒரு அடிப்படையிலிருந்து இன்னொன்று அடிப்படைக்கு மாற்றுவதனால் கஷ்டம் தான் இருக்கும். அந்தக் கஷ்டத்தையெல்லாம் சமாளித்துக்கொண்டால், நன்மை அதிகமாக இருக்கிறது. ஆகவே இதிலே ஆரம்பத்திலே கொஞ்சம் கஷ்டம் இருந்தாலும், இதை வரவேற்க வேண்டும்.

அதோடு எல்லா மாகாணங்களிலும் இது அக்டோபர் 1-ம் தேதி அமுலுக்கு வரும். சில மாகாணங்களில் ஆர்டினன்ஸ் மூலமாகப் புகுத்தியிருக்கிறார்கள். சில மாகாணங்களில் சட்டம் செய்து புகுத்தியிருக்கிறார்கள். முதலில் கொஞ்சம் கஷ்டம் இருந்தாலும், நாளடைவில் அவைகள் குறைந்து விடுவதனாலே, பொது மக்களுக்கும், மற்ற எல்லோருக்கும் அதிக நன்மை ஏற்படும்.

ஆகவே இது வரவேற்கக் கூடிய மசோதா. எல்லோருக்கும் இந்த கடைசி கட்டத்திலாவது—அதாவது தேர்ட் ரீடிங்கில்—இது நல்ல மசோதா, இது வரவேற்கக் கூடிய மசோதா என்று பேசவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER : Motion moved—

" That the Madras Weights and Measures (Enforcement) Bill, 1958 (L.C. Bill No. 7 of 1958) as passed by the Legislative Council, be passed ".

SRI A. GOVINDASAMY : கனம் தலைவர் அவர்களே, கடைசி கட்டத்திலாவது இந்த மசோதா நல்ல மசோதா என்று சொல்ல வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் பிரியப்படுகிறார்கள். உள்ளபடியே இது ஒரு நல்ல மசோதா அல்ல என்பது அவருக்கும் தெரியும். ஆனால் அவரால் சொல்லிக் கொள்ளமுடியவில்லை. இதை நிறைவேற்றுகிற பொறுப்பு அவருக்கு அளிக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் தான் அவர் இப்படிச் சொல்லுகிறார்கள்.

குறிப்பாக 4 மாவட்டங்களில் அமுலுக்கு வரும்போது, 3 மாவட்டங்களான செங்கற்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டங்கள் சென்னைக்கு அருகில் இருக்கிற காரணத்தினால், சென்னையின் நாகரீகம் அவைகளுக்கும் பரவியிருக்கும் என்ற காரணத்தினால் ஏற்றுக்கொள்வார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அமைச்சர் அவர்களே ஒத்துக் கொள்வார்கள் கல்வித் துறையிலே மிகவும் பிற்போக்கான

29th September 1958] [Sri A. Govindasamy]

மாவட்டங்கள் இவைகள் என்பதை. இதை அந்த மாவட்டங்களில் அமுலுக்குக் கொண்டு வருவதால் பல இடையூறுகள் ஏற்படும். அமுல் நடத்துவதிலே, சென்னையில் மட்டும் கொண்டு வந்து பரீட்சை செய்து பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது ஏதாவது இடையூறுகள் இருந்தால், 10 ஆண்டுகளுக்குள் இதைப் புகுத்த வேண்டுமென்றில்லாமல், கஷ்டங்களைப் போக்கி, படிப்படியாகக் கையாளுகிற முறையிலும், ஏதாவது தவறுதல்கள் இருந்தால், அதிக பட்ச அபராதமும், சிறை தண்டனையும் அளித்து வியாபாரிகளுக்கும் பொது மக்களுக்கும் பயங்கரமான நிலைமையை உண்டாக்காமலும் இதை அமுலுக்குக் கொண்டு வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்தச் சட்டம் நிறைவேறினால் இண்டர்நேஷனல் டிரேட்—அதாவது ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டோடு வியாபாரம் வளர்ச்சியடையும் என்று குறிப்பிட்டார்கள். நம் கிராம மக்களும், சிறு வியாபாரிகளும், பொது மக்களும் இண்டர்நேஷனல் டிரேட் நடத்துவதில்லை. இண்டர்நேஷனல் டிரேடுக்காக வருகிறது என்று சொன்னால், அந்த அளவு இண்டர்நேஷனல் துறையில் மட்டும் முதலில் நடைமுறையில் கொண்டு வரலாம். இந்தச் சட்டத்தை கொண்டு வந்துதான் ஆகவேண்டும், மற்ற ராஜ்யங்களில் ஆர்டினன்ஸ் போட்டு விட்டார்கள், இப்போதுதான் சட்டம் கொண்டு வருகிறோம் என்று இங்கே சொன்னால், சென்னையில் மட்டும் பரீட்சார்த்தமாகக் கொண்டுவரலாம்.

இதை நல்ல சட்டம் என்று வரவேற்க முடியாது, நாங்கள் வரவேற்றாலும் மக்கள் ஒத்துக்கொள்ளமாட்டார்கள். இதற்காகத்தானா இவர்களை அனுப்பினோம் என்று மக்கள் பேசிக் கொள்வார்கள். இது அமைச்சர் காதுக்குக் கூட எட்டும். அதிகத் தொல்லை ஏற்படாத அளவில் படிப்படியாகக் கொண்டு வந்து, இப்போது சர்க்காரில் வேலை செய்யக்கூடிய முத்திரை போடுபவர்கள் முதலியவர்களுக்கு பாதுகாப்புக் கொடுத்து, அவர்கள் வீட்டுக்குப் போகாத அளவுக்கு பயிற்சியளித்து முத்திரை, ஸ்டாம்ப் முதலியவைகள் செய்தவர்களுக்கெல்லாம் வேலை கிடைக்க வேண்டுமென்று வற்புறுத்தி—புதியதாக வேலை கிடைக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை—ஏற்கெனவே வேலையுள்ளவர்களுக்கு வேலை போகாமல் இருக்கவேண்டும்—கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே இந்த அளவுகளைக் கண்காணிப்பதில்லை. இப்போது கண்காணிப்பு இருக்கிற காரணத்தினால் ஏழைகளுக்கு நல்ல நன்மைகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். முன்பு கூட ஒவ்வொரு வருஷமும் ஸ்டாம்பிங் செய்து, பார்வையிடப்பட்டு, தவறுகள் இருக்குமானால் கண்டிக்கப்பட்டும் வருகின்றது. மணிலா மார்க்கெட் சொஸைடியில், இது க்வாஸி-கவர்ன்மென்ட் என்று சொன்னாலும், இதனுடைய செயலாளர்கள் போய் 6 மாதங்களுக்கு ஒரு முறை வெய்ட்ஸைப் பரிசோதனை செய்த பிறகு ஸ்டாம்ப் போட்டு வாங்கி வந்தார்கள். அந்த நிலையில் இப்போதே ஒழுங்காக இருந்து தான் வந்திருக்கின்றது.

ஆகவே, இந்தத் திட்டம் வரும்போது அதிகமான சங்கடங்கள் வரக்கூடும். அதையெல்லாம் நன்கு ஆராய்ந்து எந்தெந்தக் காரியத்திலே இதை அமுலுக்குக் கொண்டு வரலாம் என்று ஆலோசித்து ஒரு சில துறையிலே கொண்டு வந்து குழப்பங்கள் நேரிடாவண்ணம் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

Sri S. NAGARAJA MONIGAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததற்காக கனம் அமைச்சர் அவர்களையும், பொதுவாக சர்க்காரையும் நான் பாராட்டுகிறேன். இந்த நாட்டிலே சுயராஜ்யம் பெற்றபின், நமது வாழ்க்கையும் நாளுக்குநாள் மேம்பட்டு வந்து கொண்டிருக்கிறது. வியாபாரம் என்ற துறையிலே, ஏதோ அந்நியர்கள் சுறண்டிவந்தார்கள் என்பதைப் போல மக்களை மக்கள் சுரண்டுவது என்பது மட்டுப்படவேண்டும். இந்தக் குற்றத்தைச் செய்கிற

வர்களிலே, தெரிந்தும் செய்கிறவர்கள் இருக்கிறார்கள். தெரியாமல் செய்கிறவர்களும் இருக்கிறார்கள் என்று சொல்லலாம். தெரியாமல் செய்பவர்களைக் காட்டிலும், வியாபாரம் என்ற பேரால், இதுதான் வியாபாரியின் லட்சணம், கால வழக்கம் என்ற கருத்தோடு தெரிந்து செய்கிறவர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்பதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. வாழ்க்கையிலே ஒவ்வொருவரும் பண்டமாற்று முறையிலேயும், மற்றப்படி சமத்துவமான முறையிலும் வாழ்வதற்கு வழி வகை செய்ய இந்த மாதிரி ஒரு மசோதா மிக மிக அவசியம்.

சர்க்கார் மிக சாவதானமாக நடக்கிறது, கம்யூனிஸம் மாதிரி தீவிரமாக இல்லையென்று சொல்லக்கூடியவர்கள், இந்த மாதிரியான முன்னேற்ற கரமான திட்டங்களைக்கொண்டுவரும்போது அதையெல்லாம் . . .

SRI M. JAGANNATHAN : On a point of order, Sir. I wish to know from the Chair whether the hon. Member is in order in going on sermonising and not speaking on the Bill.

SRI A. GOVINDASAMY : கனம் அங்கத்தினர் இந்த மசோதாவைப் பற்றிப் பேசாமல் வேறு எதையோ பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்.

MR. SPEAKER : It is not a point of order.

SRI S. NAGARAJA MONIGAR : இந்த மசோதாவினால் பல நன்மைகள் இருக்கின்றன என்று சர்க்காரைப் பாராட்ட நான் இவைகளைச் சொல்ல வேண்டியவனாக இருக்கின்றேன். மனதார இதை ஒத்துக்கொள்ள முடியவில்லையென்றால் எந்தெந்த முறையில் எதிர்க்கவேண்டுமோ அந்தெந்த முறையில் எதிர்க்க வேண்டுமே தவிர, ஒத்துக்கொள்வதாயிருந்தால் ஒத்துக் கொள்ளவேண்டுமே தவிர, இரண்டும் கெட்டான் நிலைமையில் சொன்னது அர்த்தமாகவில்லை. ஆகவே, இந்த மசோதாவைக்கொண்டு வந்ததற்காக நான் சர்க்காரைப் பெரிதும் பாராட்டி, அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI K. SATTANATHA KARAYALAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா சட்டமாகும் இந்த நேரத்தில் ஒரு சில வார்த்தைகள் சொல்ல அவாவுறுகிறேன். இதை அமுல் நடத்தக்கூடிய முறையில் பிரதேசவாரியாக இல்லாமல் ஒவ்வொரு தொழில் துறையாகக் கொண்டு வந்திருந்தால், இதைப் பார்க்கிலும் நல்ல முறையாக இருக்கும் என்று கருதுகிறேன். இன்று சில மாவட்டங்களுக்கு என்று இந்தச் சட்டம் நிறைவேறியுள்ள இந்த சந்தர்ப்பத்தில் அந்த மாவட்டங்களில் சில தொழில் துறையில் முதன் முதலாகக் கொண்டு வந்தால் நன்மையாக இருக்கும்
4–20 p.m. என்று கருதுகிறேன். குறிப்பாக மில்களிலிருந்து வெளியே வரக்கூடிய துணியைப் பொறுத்த வரையில் 20 கெஜம் கொண்டது ஒரு பீஸ் என்று வெளிவருவதற்குப் பதிலாக, இத்தனை மீட்டர் கொண்டது ஒரு பீஸ் என்று வெளி வந்தால் வாங்கக்கூடியவர்களுக்கு பழக்கம் ஏற்பட்டுவிடும். அதே மாதிரி எஸ்டேட்டிலிருந்து டீ வெளி வருகிற பொழுது எந்த முறையிலே அது மாறுதலாக வந்தால் பழக்கப்படுவதற்கு லகுவாக இருக்குமோ அந்த முறையில் வரவேண்டும். இப்பொழுது பெட்ரோலை காலன் கணக்கில் வாங்கிக்கொண்டிருக்கிறோம். அதற்குப் பதிலாக லிட்டர் கணக்கில் வந்தால் படித்தவர்களிடையே முதலில் பழக்கத்திற்கு வருவதற்கு எளிதாக இருக்கும். இவ்வாறு எந்தெந்த தொழில் துறையிலே கொண்டுவந்தால் படித்தவர்கள் எளிதாகப் புரிந்து கொள்வார்களோ, அந்த வகையில் கொஞ்சம் கொஞ்சமாகப் புகுத்தவேண்டுமே தவிர, ஒரே அடியாகப் புகுத்தக் கூடாது. முக்கியமாக, விவசாயத் துறையில் இதை முதல் முதல் கொண்டு வரக்கூடாது. இண்டஸ்ட்ரியல் செக்டார்களுக்கு மாத்திரம் தான் இதை முதலிலே கொண்டுவரவேண்டும். விவசாயத் துறையில் இதை அமலுக்குக் கொண்டு வந்தால் விவசாயிகளுக்கு மிகவும் கஷ்டமாகயிருக்கும். ஆகவே, அதைவிட்டுவிட்டு, முதலில் ஒன்று, இரண்டு ஆண்டுகளுக்கு இதைத் தொழில் துறையில் கொண்டுவரவேண்டுமென்று என் யோசனையைக் கூறிக்கொள்ளுகிறேன்.

29th September 1958]

Sri S. M. ANNAMALAI : கனம் அமைச்சர் அவர்கள் இதைக் கடைசியிலாவது பாரட்டவேண்டுமென்று சொல்லுகிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த என்னுடைய அமைச்சரைப் பாராட்டலாமென்று நினைத்தாலும் கூட இந்த மசோதாவில் பாராட்ட முடியவில்லை. என்னுடைய மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் 100-க்கு 15 பேர் படித்தவர்கள் இருக்கிறார்கள். இந்த நிலைமையிலே இந்த சட்டத்தைப் புகுத்தினால், பாமர மக்களிடையே வெறும் பீதியைத்தான் உண்டாக்கும். சமீபத்தில் நயாப் பைசாவைப் புகுத்தி, கிராம மக்கள் இன்றும் கூட அதை வாங்குவதற்கு மறுக்கிறார்கள். இந்நிலையில் கிராம மக்களிடையே அப்படிப்பட்ட சட்டங்களைப் புகுத்துவதினால், மேலும் மேலும் பீதியை வளர்க்கக்கூடிய நிலைமை தான் ஏற்படும். குறிப்பாக, பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்களுக்கு அவர்கள் நல்ல முறையில் இதைத் தெரிந்து கொள்ளும்படி கற்றுக் கொடுத்த பிறகு இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தால் பரவாயில்லை. மக்கள் இன்னும் பக்குவம் அடையவில்லை. "அல்ஜிப்ரா இஸ் எ காப்ரா" என்று சொல்லுகிறார்கள். கணக்கு என்றாலே பயப்படுகிறார்கள். முதலிலே மாணவர்களிடையே புகுத்தி, பிறகு பாமர மக்களிடையே புகுத்தவேண்டும். கிராமப் புறங்களிலே இதைப் புகுத்துவது என்றால், அது வரவேற்கக் கூடியதல்ல. **Money Lenders Bill**-ஐக் கொண்டுவரும்போது நகரப் புறங்களிலே புகுத்தினார்கள். பெரிய நகரங்களிலே புகுத்தினால் பரவாயில்லை. கிராமப் புறங்களிலே இதைப் புகுத்துவது நல்லதல்ல என்று தெரிவித்துக்கொண்டு, எப்படியானாலும் இது சட்டமாகி விட்டால், சிறிது சிறிதாக இதை அமலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Sri V. K. KOTHANDARAMAN : இந்த மெட்ரிக் முறை அளவுகளை நிறைவேற்றி இருப்பதை வரவேற்கக்கூடிய நேரத்திலே, அவசரப்பட்டு இதை அமலுக்குக் கொண்டுவருவது என்று சொன்னால் மக்கள் மனதிலே ஒரு பெரிய குழப்பத்தை உண்டாக்கும் என்பதை சர்க்கார் உணரவேண்டும். எனக்கு முன்பு பேசிய நண்பர்கள் சொன்னது போல், ஏற்கெனவே அமலுக்குக் கொண்டுவந்துள்ள நயாப் பைசாவையே புரிந்துகொள்ள முடியாத நிலையிலே இதையும் கொண்டுவந்து இரண்டு குழப்பங்கள் உண்டு பண்ணக்கூடிய நிலைமை ஏற்படக்கூடாது. நல்ல முறையில் பிரசாரம், விளம்பரம் செய்த பிறகு, மக்களுக்கு தெளிவு ஏற்பட்ட பிறகு கொண்டுவருவது தான் நலமாக இருக்கும். இன்றைக்குப் பலவிதமான வகையிலே எடை போடுவது, அளவு போடுவது இது போன்ற கருவிகள் பல இடங்களில் இருக்கின்றன. மக்கள் குறைகளைப் போக்குவதற்காக வேண்டி, அன்னியர் சுரண்டலிலிருந்து தப்புவிப்பதற்காக வேண்டி, சுதந்திரம் அடைந்தபிறகு, மனிதனை மனிதன் சுரண்டுவதிலிருந்து தப்புவிப்பதற்காக இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறதை வரவேற்கிறேன். எப்படி நில உடமைக்கு வரம்பு கட்டாத வரையில் பலவிதமான சட்டங்களைக் கொண்டு வந்திருப்பதனால் விவசாயிகள் பாதிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறதோ, அது போன்று பதுக்கிவைத்து கொள்ளை லாபம் சம்பாதிக்கும் பதுக்கல்காரர்களின்மீது நடவடிக்கை எடுக்காத வரையிலே, அதற்கு ஒரு சட்டம் கொண்டுவராத வரையிலே, இந்த மாதிரி சட்டங்கள் கொண்டு வருவதன் காரணமாக மனிதனை மனிதன் சுரண்டுவதை தடுத்து நிறுத்தி விட்டோம் என்று சொல்லுவது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வது போல் ஆகும் என்று தெரிவித்துக்கொண்டு, அதற்காக, ஒரு சட்டம் விரைவிலே கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டத்தை கொஞ்சம் பொறுத்து, மக்கள் மனதிலே தெளிவை உண்டாக்கிய பிறகு அமலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Sri P. G. KARUTHIRUMAN : கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது நிறைவேற்றப்பட்டுள்ள நீட்டல், நிறுத்தல், முகத்தல் மசோதாவை நான் வரவேற்கிறேன். பழம் காலத்தில் இருந்து வந்ததை எல்லாம் மாற்றுதல் அவசியம், நாமெல்லோரும் மிகவும் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்று சொல்லிவிட்டு அகில இந்தியா பூராவிலும் ஒரே

மாதிரியான அளவு முறைகளைக் கொண்டுவரும் சந்தர்ப்பத்திலே, இதற்கு எதிர்ப்பு இருப்பதைப் பார்த்தால் மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. காலத்திற்கு தகுந்தவாறு எல்லாவற்றையும் மாற்றியமைக்கவேண்டுமென்று நன்னூலில் கீழ்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது.

" பழையன கழிதலும் புதியன புகுதலும்

வழுவல கால வகையினுனே ".

ஆகவே பழயதை விட்டுவிட்டு, காலத்திற்கேற்ற மாதிரி, சமய சந்தர்ப்பத்திற்கு தகுந்தவாறு, புதியதை ஏற்றுக்கொள்வதுதான் விவேகமான முறை. பிரிட்டிஷ் முறை, பிரெஞ்சு முறை அளவுகள் எல்லாம் பழைய காலத்தில் நாங்கள் படிக்கும்பொழுது வாய்ப்பாட்டில் இருக்கும். ஒரு காலனுக்கு 62 பவுண்டு, ஒரு இம்பீரியல் மாண்டுக்கு 82-1/7 பவுண்டு, இதையெல்லாம் ஞாபகத்தில் எளிதாக வைத்திருக்க முடியாது. மேலும் அரைக்கால், வீசம், இதுபோன்ற பின்னங்களை எடுத்துக்கொண்டாலும் சாதாரண மக்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதை நாம் உணர வேண்டும். இன்று சாதாரணமாக உபயோகத்திலிருக்கும் படியை எடுத்துக் கொண்டால் ஜில்லாவுக்கு ஜில்லா வித்தியாசமிருக்கிறது. கோயம்புத்தூர் ஜில்லாவை எடுத்துக்கொண்டால் 72 தோலாக் கொண்டது ஒரு படி. சென்னையை எடுத்துக்கொண்டால் 66 தோலாக் கொண்டது ஒரு சிறிய படி என்றிருக்கிறது. இப்படி இடத்திற்கு இடம் வேறு அளவு முறைகள் உள்ள போதே சமாளித்துக் கொண்டிருந்த நாம், நாடெங்கிலும் ஒரே மாதிரியான அளவு முறைகளைக் கொண்டுவருகிறார்கள் என்று சொல்லுகிற நேரத்தில் என் எதிர்ப்பைத் தெரிவிக்கவேண்டுமென்பதை நினைத்தால் ஆச்சரியமாக இருக்கிறது. கொஞ்சகாலத்திற்கு கஷ்டமாகயிருக்கும். அதற்காகத் தான் மாகாணம் பூராவும் கொண்டுவராமல், ஒரு சில ஜில்லாக்களில் அமலுக்குக் கொண்டுவரும் வகையில், இதில் வரவேற்கக்கூடிய அம்சம் இருக்கிறது. அமைச்சர் அவர்களுக்கு ஒரு ஆலோசனையைச் சொல்ல விரும்புகிறேன். முதலில் சென்னை நகரத்தில் மட்டும் இதைக் கொண்டுவந்து இதை அமல் செய்தால், இங்கே பழக்கத்திற்கு வந்தால், மற்ற இடங்களிலும் பழக்கத்திற்கு வருவதற்கு சௌகரியமான முறையாக இருக்கும். கனம் சட்டநாதக் கரையாளர் சொன்னதுபோல, மில்கள் இருக்கும்படியான இடங்களிலே, தொழில் துறையிலே சீக்கிரமாகப் புகுத்துவது அவசியமென்று நினைக்கிறேன். வேலை செய்கிற பல தொழிலாளிகள் அங்கே இருப்பதனால், அங்கிருந்து பல இடங்களுக்குப் பரவுவதற்குச் சௌகரியமாக இருக்கும். நயாப்பைசா வந்ததினால் பீதியும், குழப்பமும் வந்துவிட்டது என்று சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். ஒரு குழப்பமும், பீதியும் ஏற்படவில்லை. ஆனால் அவ்வாறு ஏற்பட்டது என்று சொல்வது தான் பீதியும், குழப்பமுமாக இருக்கிறது. 25, 50 நயாப் பைசாக்கள் வந்துவிட்டால் இந்தப் பிரச்னையே தீர்ந்துவிடும். 3, 4 ஜில்லாக்களில் இது அமலுக்கு வருவதால், ஒரு சில இடங்களில் பழக்கப்படுத்தி, மற்ற இடங்களுக்கு பரவச் செய்யலாம். முழம் போடுவதிலேகூட வித்தியாசம் இருக்கிறது. நேராக முழம் போடுவது ஒரு முறை, மடித்துப் போடுவது

4-30 p.m. வேறொரு முறை. சிலர் குறுக்கியும் போடுவது உண்டு. முழும், கெஜம் அளப்பதில் நாணயமற்ற முறையில் சிலர் நடந்துகொள்ளுகிறார்கள். படியை எடுத்துக்கொண்டால், முத்திரைப்படி, முத்திரை இல்லாத படி இரண்டும் இருந்து கொண்டிருக்கிறது. ஒழுங்கான அளவு முறைகளை கையாளததால், பலர் எவ்வளவோ தண்டனைக்குள்ளாகியிருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். புது முறையை எல்லோரும் நியாயமாகவும் நேர்மையாகவும் கையாளுவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன. எல்லாத் துறைகளிலும் இதைக் கொண்டுவர சர்க்கார் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும். இந்தியா பூராவும் எல்லா இடங்களிலும் இந்த முறை அமுலுக்கு வருவதினால், ஒன்றுபட்ட இந்தியாவை நிறுவுவதற்கு இது ஒரு அடிப்படையாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

29th September 1958]

MR. SPEAKER : Sri K. Anbazhagan will now speak. There are three more hon. Members to speak and two more Bills to be considered. Therefore, I would like the hon. Member to be brief in his speech.

* SRI K. ANBAZHAGAN : சட்டமன்றத் தலைவர் அவர்களே, இப்பொழுதுகொண்டுவந்து நிறைவேற்றப்பட இருக்கிற இந்தச் சட்டம், கொண்டுள்ள நோக்கத்தினால் சிறந்தது என்பதில் நேற்றும், இன்றும் நான் பேசுகின்ற நேரத்தில் மாறுபாட்டைத் தெரிவிக்கவில்லை. நோக்கத்திலே சிறந்தது என்ற காரணத்தினால், எவையும் நிறைவேற்றப்பட்டவேண்டிய முறையும் காலமும் தவறி நிறைவேற்றப்படுமானால், அவை விளைவிக்கின்ற தவறான சூழ்நிலையால், துன்பங்களையும், தொல்லைகளையும் மக்களுக்குப் பல்வேறு துறைகளிலே விளைவிக்கக்கூடும். இந்த முறையிலே இந்தச் சட்டம் நிறைவேற்றப்படுகின்ற விதத்தில் தீமை தர இருக்கிறது என்பதை நான் நேற்றும் விளக்கினேன். இன்று திரும்பவும் சொல்ல நேருவதற்காக உண்மையிலேயே வருந்துகிறேன்.

இந்தச் சட்டத்தை மத்திய அரசியலார் ஒரு பொது அடிப்படையிலே நிறைவேற்றி, அதை மாகாண சட்டமன்றங்கள் ஏற்றுக்கொள்ளுவதை இந்தத் தேதிக்குள் தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுள்ள நிலைமை காரணமாக, இங்கு இவ்வளவு அவசர அவசரமாக இந்தச் சட்டம் நிறைவேற்றப்படுகிறது. பக்கத்தில் ஆந்திராவில் சட்டசபை கூடாத காரணத்தினால், அங்கே "ஆர்டினன்ஸ்", போட்டு இதை நிறைவேற்றியிருக்கிறார்கள். இதனுடைய குறிப்பு என்னவென்று பார்ப்போமானால், மத்திய அரசாங்கம் தீர்மானித்துவிட்டது, மாகாண அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கட்டுப்பாட்டுக்கு ஆளாக்கப்பட்டுள்ளது. எந்த நிலையிலும் நல்லதையும், கெட்டதையும் நாமே தீர்மானித்து விரும்பினால் மட்டும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற கருத்தை இப்பொழுதும் நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, சட்டமன்றத்தில் தரப்பட்ட பல திருத்தங்களை அமைச்சர் அவர்கள் நல்ல எண்ணத்தோடு தான் என்றாலும், இவற்றை வலியுறுத்தாதீர், அவ்வளவு முக்கியமானவை அல்ல. இனி திருத்தங்களை இங்கு நிறைவேற்றினால் அவை கவுன்சிலுக்கு அனுப்பப்படவேண்டும். ஏற்கனவே இருக்கும் சட்டத்தில் அதிக திருத்தங்கள் இங்கு ஏற்படுத்துவது நல்லது அல்ல" என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அந்த அளவுக்குத் திருத்தங்களை ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமைக்கு நாம் உள்ளாகியிருப்பது மிகமிக வருந்தத்தக்கதாகும். இனி, இந்தச் சட்டத்தை நிறைவேற்றும்பொழுது, நான்கு ஜில்லாக்களில் இது முதலில் அமுலுக்கு வரும் என்று நாட்டிலேயே பாகுபாடு செய்திருப்பதற்கு மாறாக, எனக்கு முன்பு பேசிய நண்பர் கருத்திருமன் அவர்கள் இருக்கிற பாகுபாட்டை எல்லாம் விரட்டப்போகிறோம் என்று சொன்னது வியப்பாகும். சட்டம் புகுகின்றபோதே பாகுபாடும் அத்துடன் வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த வட்டாரப் பாகுபாடு இருப்பது தவறு : நீதியும் அல்ல, நியாயமும் அல்ல. ஆனால் செயல்படும் முறையில் பாகுபாட்டை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுதான் அறிவுடமை. அந்த முறையிலே இதில் வரும் பாகுபாடு வட்டார வாரியாக புகுத்தப்படாமல், துறை வாரியாகக் கொள்ளப்பட்டால் தொல்லை குறைவாக இருக்கும். நான் கூறும் துறைப் பாகுபாடு பாமர மக்களை சம்பந்தப்படுத்துகின்ற துறை அல்லாமல், படித்தவர்கள் மூலமாக நிறைவேற்றுகின்ற பல்வேறு காரியங்களிலே இந்த சட்டத்தை நாம் முதலிலே நிறைவேற்றவேண்டும் என்பது. அதுவும் படிப்படியாக என்று சொல்லுகிறேன். வட்டம் வட்டமாகக் கருதுவதைவிட, படிப்படியாக என்று நான் சொல்லும்பொழுது, அரசாங்கத் துறையிலே எந்தத் துறையிலே பொருள் கொடுத்து வாங்குவதாயிருந்தாலும், அந்தத் துறையிலே இவைகளை முதலில் பயன்படுத்தவேண்டும். ரயில்வேயில் புதிய நிறுத்தல் அளவை, முகத்தல் அளவை முதலியவைகளை முதலில் பயன்படுத்தவேண்டும். "பப்ளிக் இன்ஸ்டிடியூஷன்ஸ்", அதாவது பொது நிலையங்களில் பயன்படுத்தவேண்டும். "டிரான்ஸ்போர்ட்" எந்த விதத்

தில் நடைபெறுவதாயிருந்தாலும், அந்த நிலையங்களில் இவற்றைக் கையாளவேண்டும். 10 ஆண்டு காலம் இவைகளிலெல்லாம் இந்த முறையைக்கையாளவேண்டும். அப்பொழுதுதான் இந்த நிறுத்தல் அளவை, முகத்தல் அளவை ஆகியவற்றைப் பொதுமக்கள் அடிக்கடி பார்ப்பதற்கும் அறிவதற்கும் வாய்ப்பு ஏற்படும். அவர்களுக்குத் தெளிவு ஏற்பட்டதற்குப் பின்னர் இப்படிப் பொது மக்களை கட்டுப்படுத்தக்கூடிய ஒரு சட்டம் வருமேயானால், அப்போதுதான் அது நியாயமாக இருக்கும். இன்றைய தினம் இந்தப் புதிய நிறுத்தல் அளவை, முகத்தல் அளவை கருவிகளை அமைச்சர்கள்கூட பார்த்திருக்கமாட்டார்கள் என்று நான் சொன்னால், அமைச்சர்கள் வருத்தப்படக்கூடாது. இனி தான் அவர்களே பார்க்கப்போகிறார்கள். பத்திரிகையில் வேண்டுமானால் பார்த்திருக்கிறோம் என்று சொல்லலாம். இந்த நிலையில் பொது மக்களுக்கு இந்தக் கருவிகள் தெரிந்து பயன்படுத்துவது என்று சொன்னால், அது மிகமிக இக்கட்டான, துன்பமான நிலைமை என்பதை நான் மறுபடியும் நினைவூட்ட விரும்புகிறேன். உண்மையாகவே, முழம், கெஜம் இவற்றை மாற்றுவது தவறு என்பது என்னுடைய வாதம் அல்ல, நேற்றும் அதை நான் தெரிவித்தேன். முழம், கெஜம் இவற்றிலேயே கூடத் தடுமாறிக்கொண்டிருக்கும் மக்களிடையே இன்னொரு புதிய அளவைத் திட்டம் புகுத்தப்படுமானால் அவர்கள் உடனடியாகப் புரிந்துகொள்ள மாட்டார்கள். வேண்டுமானால், படித்தவர்கள் புரிந்துகொண்டதாகப் பாவித்துக்கொள்ளலாம். செயல்முறையிலே வரும்போது, நடைமுறையில் கையாளமாட்டார்கள் துன்பப்படுவார்கள். இன்றையதினம் இருக்கிற அளவு கருவிகளை எல்லாவற்றையும் கீழே போட்டுவிட்டு, புதிய கருவிகளை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றால், அமைச்சர்கள் வீட்டிலுள்ள தாய்மார்களே உடனடியாக அந்தப் புதிய கருவிகளைப் பயன்படுத்தமாட்டார்கள். எவ்வளவு ஆர்வத்தோடு அமைச்சர் சொன்னாலும், அந்தக் கருவிகளைப் பயன்படுத்தாதது மட்டுமன்றி அந்த அளவைகளை எண்ணிப்பார்ப்பதைக்கூடப் பொது மக்கள் எளிதிலே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று நான் நேற்று சொன்னேன். இப்படிப் பட்ட சமுதாய வாழ்விலே உள்ள ஒரு பழக்கத்தை மாற்றவேண்டுமானால், எவ்வளவு நல்லதாக இருந்தாலும், குறைந்தது 25 ஆண்டு காலம்—ஒரு தலைமுறைக்குத் திட்டம் தீட்டவேண்டும். 10 ஆண்டு காலம் அரசாங்கம் இதை நடைமுறையில் கொண்டுவரவேண்டும். அடுத்த 10 ஆண்டு காலம் பொது மக்களிடம் அவர்கள் கையாளுமாறு பரப்பவேண்டும். அடுத்த ஐந்தாண்டில் இப்படிச் செய்யாதவர்களுக்குத் தண்டனை தருவோம் என்று சொல்லி, தண்டனைக்கு உரிமை கேட்கவேண்டும். நன்றாக மக்களைப் படிக்கவைக்காமல், பிழையோடு எழுதினால் தண்டிப்பேன் என்று சொல்லுவது சரியல்ல. மக்களுக்குத் தெளிவு ஏற்படுத்தாமலே இந்தச் சட்டத்தில் தண்டனை விதிப்பது, 500 வரையில் அபராதம் போடுவது, 6 மாதம் வரையில் சிறை தண்டனை விதிப்பது இவைகளெல்லாம் அவ்வளவு நல்லவை அல்ல, நல்ல அரசாங்கத்திற்கு அடையாளம் அல்ல என்பதை இன்றையதினமும் வலியுறுத்திக்கூறுவேன்.

நான் கூறுவதைக் கேட்டு இனி அமைச்சர் அவர்கள் திருத்தக்கூடும் என்று கூற முடியாவிட்டாலும், இத்தகு கருத்துப் படைத்தவர்கள் உண்டு. என்பதைக் காட்டவேனும் பயன்படட்டும். இன்றையதினம் அரசாங்கம் இதைத் திருத்த இசையாவிட்டாலும், எந்தச் சட்டத்தையும் மக்கள் எந்த நேரத்திலும் திருத்தமுடியும். இந்தச் சட்டமன்றத்திலேயே எந்த நேரத்திலும் திருத்த முடியும். இவற்றைப் பின்னாளிலே திருத்த நேர்ந்தால், இந்தச் சட்டத்திலுள்ள கடுமையைக் குறைக்க இந்தச் சட்டமன்றம் தயாராக இருக்க வேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அவருடைய நல்லெண்ணத்தில் சந்தேகம் இல்லை. நிறைவேற்றுகின்ற முறையிலேதான் நான் நிச்சயமாக மாறுபடுகிறேன். எனக்கு முன்னால் பேசிய நண்பர் கருத்திருமன் அவர்கள்,

"பழையன கழிதலும், புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே"

என்ற நன்னூல் சூத்திரத்தை மிக அருமையாகப் பயன்படுத்தினார்கள். அதிலே அமைந்திருக்கும் கருத்து "பழையன கழிதலும், புதியன

29th September 1958] [Sri K. Anbazhagan]

புகுதலும்; ஆனால், இங்கு நடைபெறுவது "பழையன கழித்தலும், புதியன புகுத்தலும்". அரசாங்கம் இந்தச் சட்டத்தை எடுத்துக்கொண்டு நிறைவேற்றும்பொழுது, முதலில் அதை மக்களிடையே புகுத்துகிறது. இதைப் புகுத்துவதுடன், பழைய அளவைகளை வலியக் கழிக்கின்றது. அப்படிப் புகுத்துகின்ற காலமாவது பொருத்தமாக இருக்குமேயானால் அது வரவேற்கத்தக்கது. பொருத்தமான காலம் என்றால், 1958-ம் ஆண்டா அல்லது 1968-ம் ஆண்டா என்பது மட்டுமே அல்ல. ஒரு புதிய முறையை புகுத்துவதானால், மக்களிடையே பழக்கத்திற்கு வர 10 ஆண்டு காலம் தேவையா, 20 ஆண்டு காலம் தேவையா என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். அவ்வாறு மாறுவதற்குத் தேவையான காலமும், ஏற்ற காலமும் எண்ணியே இந்தப் புதிய அளவையைப் புகுத்தவேண்டும் என்று நான் நேற்று இந்த அவையிலே கேட்டுக்கொண்டதுபோல், இன்றைய தினமும் கேட்டுக்கொள்ளுவேன். இந்தச் சட்டத்தை இரண்டு ஆண்டுகளுக்குள் நான்கு ஜில்லாக்களில் புகுத்தி, அதற்குப் பின்னாலே மாநிலம் முழுவதும் புகுத்தக் கருதாதீர். இரண்டு ஆண்டு என்பதை ஐந்தாண்டாகக் கொள்ளுங்கள். ஐந்தாண்டு என்பதை 15 ஆண்டாகக் கொள்ளுங்கள். புகுத்தும் வழி முறையையும் மாற்றுங்கள். இந்தக் காலத்தை நீடித்தால்தான் இந்த சட்டம் பயன்படும். இல்லையெனில், இந்தச் சட்டமும், எத்தனையோ அரசாங்கச் சட்டங்கள் பயன்படாததுபோல், மக்களிடையே மனமார வரவேற்கப்படமாட்டாது என்பதையும் நல்லெண்ணத்தோடு தெரிவித்துக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

*SRI V. K. RAMASWAMY MUDALIYAR : இந்த மசோதாவானது இப்பொழுது சட்டமாக வரும் தருணத்தில் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் கடைசி கட்டத்தில் பேசும்போது பீனல் கிளாஸ்ஸ் ரொம்பவும் கடுமையாக இருந்தபோதிலும், அதை எவ்வளவு சல்லிஸான முறையில் அமுல் செய்ய முடியுமோ, செய்து மக்களுக்கு கஷ்டம் இல்லாதபடி செய்வதாக சொன்னார்கள். ஆனால் அவர்களுக்கு அம்மாதிரியான எண்ணம் இருக்கும் பட்சத்தில் பீனல் கிளாஸைக் கடுமையாக இல்லாமல், கஷ்டம் இல்லாதபடி தண்டனைகளை எவ்வளவு தூரம் குறைக்க முடியுமோ அவ்வளவு தூரம் குறைத்து அதற்கான ஷரத்துக்களை அமைத்திருக்கவேண்டுமென்பதுதான் என்னுடைய அபிப்பிராயம்.

முக்கியமாக சட்டநாதக்கரையாளர் அவர்கள் கடைசியில் இருக்கும் ஷரத்தைப்பற்றி சொன்னார்கள். அதாவது, விதிகள் எல்லாம் அமுல் செய்யும்பொழுது இரண்டு சபைகள் முன்பும் அவைகள் பரிசீலனைக்கு வைக்கப்பட்டு, அவைகளை மாற்றவேண்டுமென்றால் திருத்தம் செய்யலாம் என்று இருந்தபோதிலும், இவைகளெல்லாம் செய்வதற்கு இன்னும் அதிக நாட்கள் ஆகும், அம்மாதிரியில்லாமல் இன்னும் சுலபமான முறையில் செய்வதற்கான ஏற்பாடுகளை செய்யவேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள்.

மேல் சபையில் தீர்மானித்து விட்டார்கள், ஆகவே நீங்களும் ஒத்துக்கொள்ளுங்கள் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள் அமைச்சர் அவர்கள் அதை இனி திருத்துவது கஷ்டம் என்ற முறையிலும் சொன்னார்கள். என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம் என்னவென்றால், இம்மாதிரியான சட்டங்களை அவசர அவசரமாக கொண்டு வருவதால், மக்கள் எல்லோரும் கஷ்டப்படப்போகிறார்கள். ஜனநாயக முறைப்படி, சட்ட சபையானது, மாதத்திற்கு ஒரு முறையாவது கூடவேண்டும், இம்மாதிரி மசோதாக்களை நன்றாக பரிசீலனை செய்யவேண்டும். இவைகளை மெள்ள மெள்ளப் புகுத்தவேண்டும். அவசர அவசரமாகச் சட்டங்களைச் செய்வதால் பல இடையூறுகள்தான் ஏற்படுகின்றன. அங்கத்தினர்கள் நல்ல முறையில் சொல்லும் திருத்தங்களையும் ஏற்றுக்கொள்ளும் வழக்கும் இருக்கவேண்டும். எது எப்படியிருந்தபோதிலும் கூட, இந்த மசோதாவானது, பல கஷ்டங்களை உண்டாக்கப்போகிறது. பழைய அளவு இருக்கிறது, அதே சமயத்தில் புது அளவும் இருக்கிறது. ஜில்லாவுக்கு ஜில்லா வித்தியாசங்கள் இருக்கின்றன. நாலு ஜில்லாக்களில் மட்டும் புகுத்துவ 4-40 p.m.

தால் சென்னையிலிருந்து, தூரத்தில் உள்ள ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்குப் போகும்போது பல கஷ்டங்கள் ஏற்படப்போகின்றன. விற்கிறவர்களுக்கும் சரி, வாங்குபவர்களுக்கும் சரி, கஷ்டங்கள் உண்டாக்கப்போகிறது. ஆகவே, அந்தமாதிரியான கஷ்டங்களுக்கு மக்களை ஆளாக்காமல், பீனல் கண்டிஷன்களை, கடினமான விதிகளை நல்ல முறையிலே அமுல் நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **THE HON. SRI M. A. MANICKAVELU** : ஸார், இந்த மசோதா மத்திய சர்க்கார் ஏற்படுத்தியிருக்கும் சட்ட அடிப்படையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்கார், யூனியன் பூராவும் இது அமலாகவேண்டுமென்று, அந்த முறையிலே அங்கே ஒரு சட்டம் நிறைவேற்றியிருக்கிறார்கள். தனிப்பட்ட ஒவ்வோரு மாகாணத்திலும் இம்மாதிரியான ஒரு சட்டம் இயற்றப்பட்டால்தான் ஒரு பொதுத் திட்டம் அமுலுக்கு வரமுடியும். ஆகவே, அம்மாதிரிச் செய்ய, மத்திய சர்க்கார், எல்லா மாகாண சர்க்கார் பிரதிநிதிகளையும் வரவழைத்து பேசி, அவர்கள் சம்மதத்தின்பேரில் மத்திய சர்க்கார் ஒரு மசோதாவைத் தயாரிக்கலாம் என்று எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள். அந்த அடிப்படையில், மத்திய சர்க்காரால் சட்டம் கொண்டுவரப்பட்டது. இந்த மசோதா அந்த அடிப்படையிலேதான் இங்கேயும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. எல்லா மாகாணங்களும் எந்தெந்த மாகாணத்தில் எந்தெந்தப் பகுதிகளில் முதலாகக் கொண்டுவர வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி, சென்னை மகாணத்தில், இந்த நாலு ஜில்லாக்களிலும் கொண்டு வரவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதேமாதிரி கேரளாவில், கோழிக்கோடு, எர்ணகுளம் இரண்டு ஜில்லாக்களிலும் வரும். மத்திய பிரதேசத்தில், போபால், இன்டோர், குவாலியர், ஜப்பல்பூர் முதலிய ஜில்லாக்களில் வரும். ஆந்திராவிலும், விசாகப்பட்டணம், கிருஷ்ணா, குண்டூர், கர்னூல், ஹைதராபாத் முதலிய பகுதிகளில் வரும். இவைகளை ஏன் சொல்கிறேன் என்றால், சில மாகாணங்கள் பிற்போக்கு என்று சிலரால் கருதப்படுகிறது. அப்பேர்ப்பட்ட மாகாணங்களிலும், எந்தெந்த பகுதிகளிலே முதலிலே வரவேண்டுமென்று ஏற்கெனவே மத்திய சர்க்கார் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே, இங்கும் அமுலுக்கு வருகிறது.

இதிலே, இன்னொன்றும் நாம் கவனிக்கவேண்டும். இந்த முதல் தேதி இது அமுலுக்கு வந்தாலும், பழைய திட்டமும் அமுலில் இருக்கும். இரண்டு வருஷகாலத்திற்கு அப்படி யிருக்கும். இதற்குள் ஜனங்கள் பழக்கப்படுத்திக்கொள்ளலாம். ஆகவே பழைய நிலை இல்லை என்று இல்லை. அந்த முறையிலேயே, ஜனங்கள் வாங்குவதையும், விற்பதையும் செய்து கொள்ளலாம். புது நாணயம் புகுத்திய காலத்தில், இரண்டு நாணயங்களும் வழங்கியதுபோல், இதுவும் இருக்கும். அதிகப்படி கஷ்டம் ஒன்றும் இருக்காது. (குறுக்கீடு) ஆமாம், இரண்டு வருஷ காலம் இருக்கும். 10 வருஷ காலத்தில் முழுவதும் அமுலுக்கு வரும். தென்னிந்தியாவில் உள்ளவர்களுக்கு மூளை ரொம்ப நன்றாக வேலை செய்கிறது என்று சொல்லப்படுகிறது. அப்பேர்ப்பட்டவர்களே பயந்தால், ராஜஸ்தான், பீஹார் போன்ற பிரதேசத்தவர்கள் எப்படி நினைப்பார்களோ தெரியவில்லை. இதிலே கஷ்டம் இருக்கிறது, இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், கொஞ்சம் கொஞ்சமாகப் புகுத்துவதில், அனுகூலம் இருக்கிறது, என்று நான் மறுபடியும் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அறிக்கையிலே சொல்லியிருக்கிறது (ஸ்ரீ கல்யாணசுந்தரம் : நேரம் ஆகவேண்டுமென்று ? கனம் ஸ்ரீ எம். ஏ. மாணிக்கவேலு : அப்படியில்லை.) அறிக்கையில் சொல்லியிருக்கிறது : " . . . the Central Government hereby appoints the 1st day of October 1958, as the date on which the provisions of the said Act in so far as they relate to units of mass shall come into force in respect of transactions involving sale and purchase of goods in the areas specified in column 2 of the Table below in the State or Union territory specified in the corresponding entry in column 1 thereof", அதாவது எடை

29th September 1958] [Sri M. A. Manickavelu]

அளவுதான் வரும். நீளத்தில் வராது. இது சென்னையில் நாலு ஜில்லாக் களில் வரும். மேலும், சில விஷயங்களில்கூட வரும். அதாவது,

(1) Cotton textile mills in so far as they undertake the purchase of cotton or sale of cloth ;

(2) Iron and Steel factories, etc. ;

(3) Factories engaged in engineering industry, etc., etc., பழைய திட்டமும் புது திட்டமும் அமுலில் இருக்குமாதலால், அதிகக் கஷ்டம் இருக்காது ; ஜனங்கள் கொஞ்ச கொஞ்சமாகக் பழகிக்கொள்ள சௌகரியமாக இருக்கும்.

கனம் எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள், ஏதோ திருத்தம் ஒத்துக்கொள்ளப்பட்டால், இன்னொரு சபைக்குப் போகவேண்டும் அதற்காக ஒத்துக்கொள்ளவில்லையென்று. அப்படியொன்றும் இல்லை. அவசியமான திருத்தமாக இருந்தால், இரண்டு மூன்று தடவையானாலும், இங்கிருந்து அங்கும், அங்கிருந்து இங்கும் எடுத்துப் போகமுடியும். அதைப் பற்றிக் கவலையில்லை. அவர்கள் கேட்டுக்கொண்டது, "இம்பிரிஸன்மென்ட்" either simple or rigorous என்று இருக்கவேண்டுமென்று. அதற்குத் திருத்தமே அவசியமில்லை. அது பொது சட்டப்படியே "இம் ப்ரிஸன்மென்ட் என்றால் இரண்டு வகையில் என்றுதான் அர்த்தம்". ஆகை யினால் வேண்டாம் என்று சொன்னேன். அது அத்யாவசியமாக இரு திருந்தால், இன்னொரு சபைக்கு போகவேண்டுமென்பதற்காக இங்கே திருத்தம் வேண்டாம் என்று சொல்லமாட்டேன், என்று எதிர் கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 4-50 p.m.

இந்த ஸ்டாம்பினால், பழைய வேலைக்காரர்கள் பாதிக்கப்படமாட்டார் களா என்று கேட்டார்கள். எல்லா டிபார்ட்டுமெண்டிலும், ஒரு புதிய திட்டம் அமுலுக்கு வரும்போது, ஏற்கனவே இருக்கிறவர்கள், கூடுமான வரையில் எடுத்துக்கொள்ள முடியுமா என்றுதான் பார்ப்பார்கள். எல்லாத் துறையிலும் அந்தக் கஷ்டம் இருக்கிறது. அதற்காகப் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. முடிந்தவரையில், யோக்யதாம்சம் உள்ளவர்கள் முதல் இடம் பெறுவார்கள்.

(Deputy Speaker in the Chair.)

இந்தப் புதுத் திட்டப் பிரகாரம் பல அனுகூலங்கள் இருக்கின்றன. இப்பொழுது இருக்கும் முறையில், ஒரு இடத்தில் இருக்கும் அளவை இன்னொரு இடத்தில் இருக்கும் அளவோடு ஒப்பிட்டுப்பார்க்க வசதியில்லை. Working standard, Reference standard என்று இருக்கிறது. அம்மாதிரி இருப்பதால், ஒன்றோடொன்று ஒப்பிட்டுப்பார்க்க முடியும். நான் கூட ஒன்றிரண்டு புது வெயிட்டுகளைப் பார்த்தேன். மெடல் கூட சீக்கிரத்தில் தேயக்கூடிய மெடலாக இல்லை. மேலும், நாம் இப்போது விஞ்ஞான முறையிலே மிக முற்போக்கு அடைந்து வருகிறோம்.

இந்த புது மாறுதலில் பொதுவாக ஏழை ஜனங்களுக்குதான் ரொம்ப அனுகூலம். அந்த முறையில்தான் நாம் இதை மாற்றுகிறோம். எல்லா மாகாணங்களும் இதை ஏற்றுக்கொண்டு அந்த முறையில்தான் நாம் இதை மாற்றுகிறோம். எல்லோரும் இதற்கு ஒத்துழைக்க முன் வந்த தால் நாமும் இந்த திட்டப் பிரகாரம் நல்ல முறையில் ஒத்துழைக்க முன் வந்ததால் இதைக்கொண்டுவருகிறோம். இதை நல்ல முறையில் அமு லுக்குக் கொண்டு வர வேண்டும். இதை அமுலுக்குக் கொண்டு வரும் போது படிப்படியாகக் கொண்டு வரப்போகிறோம். அதாவது ஆரம்பக் காலத்தில் கொஞ்சம் கொஞ்சமாதான் அமுலுக்குக் கொண்டுவரப் போகிறோம். அதனால் பெரிய விபரீதம் வந்து விடப்போவதில்லை. அதனால் எந்தவிதமான குழப்பமும் கலவரமும் ஏற்பட வேண்டியதில்லை. எந்த விதத்திலும் இதைப்பற்றி ஆட்சேபிக்க வேண்டியதில்லை.

[29th September 1958

SRI A. GOVINDASAMY : இந்த புது திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதாக இருந்தால் மூன்று மாதங்களுக்கு அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி மூன்று மாதங்களுக்குள் ஏதாவது தவறு செய்கிறவர்களுக்கு ரூ. 500 அபராதமும் தண்டனையும் விதிக்கவேண்டுமா ? அதனால் இரண்டு ஆண்டுகளுக்காவது தண்டனை இல்லாமல் பார்த்துக்கொள்ளுவார்களா ?

* THE HON. SRI M. A. MANICKAVELU : உடனடியாக இந்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர மாட்டார்கள். கொஞ்சம் கொஞ்சமாகத்தான் கொண்டுவருவார்கள். சட்டத்தில் இருந்த தண்டனையை முழுவதையும் நாம் கொடுத்தது இல்லை. ஒரு உயர்ந்த சட்டத்தை அமைத்து இருக்கிறோம். அப்படி உயர்ந்த சட்டம் அமைத்திருப்பதால் அதன்படியே தண்டனை கொடுத்து விடுவார்கள் என்பது இல்லை. கொஞ்சம் நிதானமாகத்தான் செய்வார்கள். துரிதம் இல்லாமல் எந்த வகையில் மெதுவாக இந்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரமுடியுமோ அந்த அளவில்தான் கொண்டு வருவார்கள். அதற்குத்தான் இந்த விதி இருக்கிறது. ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய் ஆறு மாதங்கள் என்று இருந்தால், ஏதாவது தப்பு செய்துவிட்டால் அந்த தண்டனையையே விதித்து விடுவார்கள் என்பது அல்ல. சட்டத்தில் என்ன இருக்கிறது என்றால் முதல் குற்றத்திற்கு இவ்வளவு என்றும், இரண்டாவது குற்றத்திற்கு இவ்வளவு என்றும் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. அமுலுக்குக் கொண்டு வந்தவுடனேயே கொடூரமாக இருக்கிற அந்த விதிகளை அமுலுக்குக் கொண்டு வர மாட்டார்கள் என்பதை சொல்லிக்கொள்ளுகிறேன். ஆகையால், தலைவர் அவர்களே, இந்த மசோதாவை இந்த மன்றம் ஏற்றுக்கொண்டு இதை நல்ல முறையில் அமுலுக்குகொண்டு வருவதற்கு எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : The question is—

"That the Madras Weights and Measures (Enforcement) Bill, 1958 (L.C. Bill No. 7 of 1958) as passed by the Legislative Council, be passed."

The motion was put and carried and the Bill was passed.

V. BUSINESS OF THE HOUSE.

SRI M. KALYANASUNDARAM : Sir, before proceeding to the next Bill, I submit that there are two more Bills. The Business Advisory Committee recommended that both the Tiruchirappalli Kaiaeruvaram and Mattuvaram Bill, 1958 and the Madras Public Health (Amendment) Bill, 1958 should be taken up this afternoon. Now we have got only less than ten minutes before us. If the House is to continue, I suggest that we shall sit for one hour or an hour and a half more and consider both the Bills. The Second Bill, i.e., Kaiaeruvaram Bill is also equally important and I want to know what the Hon. Minister has to say in the matter.

(Mr. Speaker in the Chair.)

MR. SPEAKER : What is the point of order?

SRI M. KALYANASUNDARAM : இது பாயிண்ட் அப் ஆர்டர் இல்லை. இப்பொழுது இரண்டு மசோதாக்கள் இச்சபையின் முன் ஆலோசனைக்கு இருக்கிறது. ஒன்று பப்ளிக் ஹெல்த் சம்பந்தமானது. இது கனம் மந்திரி அவர்களுக்கு முக்கியமாகப்படலாம். இன்னொன்று கையேறு, மாட்டு வாரம் சம்பந்தப்பட்ட மசோதா. இதுவும் முக்கியமான மசோதாதான். பல ஆயிரக்கணக்கான விவசாயிகள் சம்பந்தப்பட்ட

29th September 1958] [Sri M. Kalyanasundaram]

மசோதா இது. இப்பொழுது சபை கலைய நாளை ஒரு நாள்தான் இருக்கிறது. நாளைதான் கடைசி நாள் என்று அமைக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து பில் இப்பொழுது போகிற போக்கைப் பார்த்தால் நாளையும் முடியுமோ முடியாதோ என்ற நிலையில் சந்தேகமாகத்தான் இருக்கிறது. நாளை மத்தியானம் "நான்-அபிஷியல்" வேலையாக இருந்தாலும் பஞ்சாயத்து மசோதாவை தொடர்ந்து நடத்தி முடித்து விடலாம் என்று இருக்கிறது. எதிர்கட்சியின் ஒத்துழைப்புடன் இதை முடித்து விடலாம் என்று இருக்கிறது. அதனால் கையேறு மாட்டு வாரம் சம்பந்தப்பட்ட மசோதாவைக் கொண்டு வருவதற்கு அவகாசம் இல்லை. இவ்வளவு தூரம் காலம் தாழ்த்தப்பட்டு வருவதைப் பார்த்தால், அதைக் கொண்டு வருவதற்கு காலம் இல்லை என்று சொல்லிவிட்டு ஒத்திப்போட்டு விடலாம் என்று சொல்லக்கூடிய தந்திரமா என்பதை அறிய விரும்புகிறேன்.

SRI V. S. MANICKASUNDARAM : Sir, I would like to bring to your notice that we have a party meeting this evening.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I strongly protest against the insinuation made by the hon. Member that we are adopting '*தந்திரம்*' or some such thing. The subjects have been put on the agenda and we are taking one after the other. We thought that they would be finished before 5 o'clock. Some hon. Members spoke for a long time on certain items and therefore it has taken time. There is no device or trick or anything of that sort.

SRI M. KALYANASUNDARAM : Sir, may I know when that Bill will be taken up?

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, it will be taken up in due course. I would like to submit that the hon. Member is very anxious about the other Bill, viz., Kaiaeruvaram and Mattuvaram Bill. All hon. Members know that an ordinance was issued and that a Bill was also introduced to replace the ordinance. Hon. Members also know that that Bill was referred to a Select Committee and that the Committee made certain recommendations. The Committee recommended that the Bill be dropped and that a new Bill on the lines suggested by it be introduced in the Assembly. We have prepared another Bill and we have also introduced it in the Assembly. If the hon. Member thinks it is very urgent, it may perhaps be because he is interested in getting that Bill passed. If he feels it so urgent, he should have done something when he came to know of this state of affairs to bring this matter before the House earlier. Though the Ordinance already promulgated lapsed, nothing very serious or very untoward is happening. Therefore, a delay of a few more days or a few more weeks will not do any harm. I do not see any urgency for this Bill. The *status quo* is being maintained and there is no very great disturbance in the area because this Bill is not passed. The people know—and they definitely know—that a Bill has been introduced in the Assembly and that it will be taken up in due course. If it is not passed, it is only for want of time. The Government are committed to passing this Bill and they will do it as and when they find time to do it. But as one hon. Member pointed out, there is a meeting of the party and I

[Sri M. A. Manickavelu] [29th September 1958

have also to attend another meeting in which the Governor participates. Therefore, Sir, it will be practically difficult for me to be present here after 5 o'clock to-day.

MR. SPEAKER : Then, we shall evolve a solution for this. My suggestion is that all hon. Members can co-operate in finishing the Panchayats Bill tomorrow in five minutes. There are only thirty more amendments to it. This is not the proper time for the hon. Member to discuss this matter. The proper time will be when the Panchayats Bill is finished. If the Panchayats Bill is finished in the forenoon tomorrow, this can be discussed then. I would also suggest that we can discuss this matter with the hon. Leader of the Opposition and the Hon. Leader of the House and then take a decision. The Hon. Minister for Revenue has given only his views regarding the urgency or otherwise of the Bill.

SRI M. KALYANASUNDARAM : ஸார், நீங்கள் சொன்ன யோசனை ஒரு சிறந்த யோசனைதான். கனம் மந்திரி அவர்கள் சொன்னதைப் பார்த்தால் இந்த கையேறு மாட்டு வார மசோதாவிற்கு அவசரம் இல்லை என்று கருதுவது போல் தோன்றுகிறது. நாளை பஞ்சாயத்து மசோதாவை சீக்கிரமாக முடித்துவிட்டு அதற்குப் பிறகு இதை எடுத்துக் கொள்ளலாம் என்ற அபிப்பிராயத்தை அவர் தெரிவிக்கவில்லை. பஞ்சாயத்து மசோதாவில் இருக்கக்கூடிய பாக்கி பிரிவுகள் நிறைவேறுவது அவ்வளவு சுலபம் அல்ல. அதற்கு நாளை பூராவும் வேலை இருக்கும். இதை எப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லியிருக்க வேண்டும். ஆனால் அதற்கு அவசரம் இல்லை என்று சொல்லுகிறார். அவசரம் இருக்கிறது அல்லது இல்லை என்பது தகராறைப் பொறுத்து இருக்கிறதா ? தகராறு இல்லாமல் சட்டத்தைக் கொண்டு வரமாட்டார்களா என்று கேட்கிறேன். இந்தச் சட்டம் வரும் என்ற நம்பிக்கையில் பல ஆயிரக்கணக்கான விவசாயிகள் இன்றைக்கு பட்டினியாகக் கிடக்கிறார்கள். அவர்கள் கலகம் செய்து ஜெயிலுக்குப் போனால்தான் இந்தச் சட்டத்திற்கு அவசரம் என்று அரசாங்கம் கருதுகிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

MR. SPEAKER : The hon. Member is talking on the merits of the question and not on the availability of time and is giving reasons for that. I am only concerned with the division of the time available here. He may raise this question tomorrow morning in a more calm atmosphere. The hon. Member is anticipating that the panchayats Bill will not be finished tomorrow and that there will not be enough time in the afternoon to finish the Kaiaeruvaram Bill. If the Panchayats Bill is finished in the forenoon itself, there will be time for consideration of the other Bill. The hon. Member has presumed many things and I think it is too premature for us to decide now. The matter can be decided tomorrow and in my opinion, no useful purpose will be served by discussing it now.

*SRI K. ANBAZHAGAN : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இப்பொழுது எடுத்துக்கொள்ளப்பட இருக்கும் மசோதாவைவிட கையேர் வாரம் தார்கள், மாட்டு வாரம்தார்கள் மசோதா முக்கியமானது. பல ஆயிரக் கணக்கான மக்கள் பாதிக்கப்படக்கூடியதாக இருப்பதால் இரண்டு மசோதாக்களில் முதலாவதாக கையேர் வாரம்தார்கள் மாட்டு வாரம்தார்கள் மசோதாவை எடுத்து அமைச்சர் அவர்கள் நிறைவேற்ற முன் வரவேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன்.

29th September 1958]

MR. SPEAKER : For that, the only remedy is that when the Assembly meets tomorrow morning, the hon. Member may move a motion for a change in the order of the business of the House for taking up the Kaiaeruvaram and Mattuvaram Bill after the Panchayats Bill is over. I will put it to vote and it is for the House to decide. If the House accepts it, I have no objection. But I cannot decide it now. It is now 5 o'clock. The House will now adjourn and meet again at 9 a.m. tomorrow.

The House then adjourned.

VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules, Orders and Notifications.

132. *Notification issued with G.O. Ms. No.* 2401, *Home, dated 26th August* 1958, *changing the designation of Headmasters and Assistant Headmasters of the Government Certified Schools as Superintendents and Assistant Superintendents* [Laid on the table of the House under section 44 (3) of the Madras Children Act, 1920 (Madras Act IV of 1920)].

B. Reports and other papers.

46. *The Madras Dowry Prohibition Bill*, 1958 (*L.A. Bill No.* 21 *of* 1958).

47. *The Madras Agriculturists' Relief (Amendment) Bill*, 1958 (*L.A. Bill No.* 22 *of* 1958).

48. *The Madras Agriculturists' Relief (Amendment) Bill*, 1958 (*L.A. Bill No.* 23 *of* 1948).

49. *The Madras Estates (Abolition and Conversion into Ryotwari) (Amendment) Bill*, 1958 (*L.A. Bill No.* 29 *of* 1958).

50. *The Tiruchirappalli Kaiaeruvaram and Mattuvaram Bill*, 1958 (*L.A. Bill No.* 25 *of* 1958).

51. *The Madras General Sales Tax (Amendment) Bill*, 1958 (*L.A. Bill No.* 34 *of* 1958).

52. *The Madras Weights and Measures (Enforcement) Bill*, 1958 (*L.C. Bill No.* 7 *of* 1958).

53. *A short Report containing a summary of the salient features of the Administration of the Registration Department for the first six months of the Calendar year* 1958 (*January to June* 1958).

APPENDIX I.

[Vide answer to starred question No. 628 asked by Sri T. Sampath at the meeting of the Legislative Assembly held on 29th September 1958, page 930 supra.]

G.O. Ms. No. 2265, Home, dated 9th August 1958.

[Motor vehicles—Stage carriages—Grant of permits—Principles to be followed—Directions issued.]

READ—the following papers :—

G.O. Ms. No. 1298, Home, dated 28th April 1956.

Letter from the Transport Commissioner, Madras, dated 12th December 1957, No. 35276/E-2/57.

Representations received from various interests in Transport.

Order—No. 2265, Home, dated 9th August 1958.

In G.O. Ms. No. 1298, Home, dated 28th April 1956, certain principles to be observed by Transport Authorities in the grant of stage carriage permits were laid down. The Government have had occasion to review them in the light of certain representations made by affected interests.

2. In exercise of the powers conferred under section 43-A (1) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939), the Governor of Madras hereby issues the following directions, in supersession of paragraph 2 (A) in G.O. Ms. No. 1298, Home, dated 28th April 1956, in regard to the grant of stage carriage permits.

3. Bus routes shall be classified as—

(1) *Short routes, which shall include shuttle services.*—This class of route will cover a distance of 15 miles.

(2) *Medium routes.*—This class will cover a distance varying from between 15 miles and 75 miles.

(3) *Long routes (including Express service).*—This class will cover a distance between 75 miles and 250 miles.

4. Preference may be given to applicants as follows :—

(i) *For short routes/shuttle service.*—New entrants.

(ii) *For medium routes.*—Applicants with 1 to 4 buses (excluding spare buses).

5. Applicants for a stage carriage permit may be screened and disqualified on one or more of the following principles :—

(i) Financial instability as evidenced by insolvency or undischarged decrees or failure to produce an Income-tax clearance certificate. It is important that those who run public services are not subject to financial pressure which distracts or diverts them from the prescribed rules. Borrowing for purchase of the vehicle will not by itself be a disqualification;

29th September 1958]

(ii) If his history sheet is not satisfactory. (Ordinarily, history sheet for one year alone may be considered.)

(iii) If there is evidence that he has been trafficking in permits, either benami or otherwise.

(iv) If he has no workshop facilities or other arrangements to attend to repairs efficiently.

(v) If he has no main office or branch office on the route applied for, to control the service.

(vi) If he has no residential qualification.

(vii) If the application is on behalf of others, in order to evade rules.

6. After eliminating the applicants as above, mark should be assigned as follows :—

(*a*) *Sector qualification.*—1 mark.

Assessment may be as below :—

(i) Where the applicant operates for a distance varying between 1 per cent to 25 per cent of the total distance of the route in question—$\frac{1}{4}$ mark.

(ii) Where the applicant operates for a distance varying between 26 per cent to 50 per cent of the total distance of the route in question—$\frac{1}{2}$ mark.

(iii) Where the applicant operates for a distance varying between 51 per cent to 75 per cent of the total distance of the route in question—$\frac{3}{4}$ mark.

(iv) Where the applicant operates for a distance above 75 per cent of the total distance of the route in question—1 mark.

(*b*) Business or technical experience in Motor Transport—1 mark.

(*c*) Being a registered co-operative society or a registered public limited company or a registered private company—1 mark.

7. Applications thus finalized should then be disposed of according to section 47 (1) of the Act.

(By order of the Governor)

E. U. DAMODARAN,
Secretary to Government.

To the Transport Commissioner, Madras (5 copies).
,, all Regional Transport Authorities.
,, all Regional Transport Officers.
,, the Secretary, Regional Transport Authority, Madras.
,, the Inspector General of Police, Madras.
,, the Commissioner of Police, Madras (5 copies).
Copy to the Special Government Pleader, Madaas.
,, Secretary, Motor Vehicles and Allied Merchants' Association, Mount Road, Madras.
,, Madras State Bus Owners' Association, 49, General Patters Road, Mount Road, Madras.
,, Secretary, Automobile Association of South India, 38-A, Mount Road, Madras-2.
,, Petitioners (who made representations).
,, M.L.As. who have also given representations.

APPENDIX II.

[Vide answer to unstarred question No. 1 asked by Sri N. R. Thiagarajan at the meeting of the Legislative Assembly held on 29th September 1958, page 933 supra.]

A.—

Statement showing the length of roads under different surfaces as on 31st March 1958.

Serial number and name of district.	*Area in square miles.*	*Government Roads.* *Cement concrete.*	*Blacktopped.*	*Metalled surface.*	*Earthen roads.*	*Total.*	*District Board Roads.* *Cement concrete.*	*Blacktopped.*	*Metalled.*	*Earthen.*	*Total.*	*Grand total [columns (8)+(13)].*
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
		M. F.	M. F.	M. F.	M. F.	M. F.	M. F.	M. F.	M. F.	M. F.	M. F.	M. F.
1 Chingleput ..	3,103	30 0	546 0	160 0	..	736 0	..	18 0	360 0	759 0	1,137 0	1,873 0
2 South Arcot ..	4,204	21 0	450 0	233 0	2 0	706 0	1 0	19 0	721 0	729 0	1,470 0	2,176 0
3 Tanjore ..	3,470	13 0	491 0	328 0	5 0	837 0	..	35 0	624 0	1,330 0	1,989 0	2,826 0
4 Tiruchirappalli ..	5,514	41 0	499 0	356 0	8 0	904 0	..	16 0	901 0	816 0	1,733 0	2,637 0
5 Madurai	4,910	33 0	503 0	210 0	21 0	767 0	..	76 0	495 0	827 0	1,398 0	2,165 0
6 Ramanathapuram.	4,849	17 0	394 0	331 0	11 0	753 0	..	32 0	263 0	685 0	980 0	1,733 0
7 Tirunelveli ..	4,343	15 0	441 0	215 0	10 0	681 0	1 0	26 0	863 0	* 275 0	*1,165 0	1,846 0
8 Kanyakumari ..	700	36 0	83 0	539 0	42 0	700 0	..	..	..	..	..	700 0
9 North Arcot ..	4,654	22 0	412 0	292 0	..	726 0	..	16 0	479 0	577 0	1,072 0	1,798 0
10 Salem	7,051	29 0	616 0	295 0	2 0	942 0	..	76 0	1,095 0	† 541 0	† 1,712 0	2,654 0
11 Coimbatore ..	6,014	52 0	685 0	398 0	8 0	1,143 0	..	15 0	1,115 0	‡ 1,276 0	‡ 2,406 0	3,549 0
12 Nilgiris	984	..	188 0	29 0	..	217 0	..	32 0	190 0	83 0	305 0	522 0
Total ..	49,796	309 0	5,308 0	3,386 0	109 0	9,112 0	2 0	361 0	7,106 0	7,898 0	15,367 0	24,479 0

* Includes miles 133—0 non-motorable. † Includes miles 23—0 non-motorable. ‡ Includes miles 342—0 non-motorable roads.

29th September 1958]

APPENDIX III.

[*Vide* answer to unstarred question No. 4 asked by Sri M. C. Muthukumaraswamy at the meeting of the Legislative Assembly held on 29th September 1958, page 933 supra.]

Statement showing the departmental units for the development of Village Industries started in Tanjore district—Talukwar.

Taluk.	*Place.*	*Name of the Unit.*
Tiruturaipoondi ..	Tiruturaipundi ..	Flaying centre.
	Vedaranyam ..	Do.
	Do. ..	Soap-making with non-edible oils.
	Tiruturaipundi ..	Do.
	Thanikottagam ..	Pottery Model Production Centre.
	Do. ..	Brick-making Unit.
	Vedaranyam	Bee-keeping Industry.
	Alathambadi	Blacksmithy Unit.
	Kattimedu	Handpounding of Rice Cottage Industrial Co-operative Society.
	Vedaranyam	Do.
	Ramakrishnapuram Village, Vedaranyam Post.	Saradamain Devi Handpounding of Rice Cottage Industrial Co-operative Society.
	Thanikottagam ..	Pottery Worker's Cottage Industrial Co-operative Society.
Mayuram	Mayuram West Block	Flaying Centre.
	Mayuram	Bee-keeping Industry.
	Tiruvalangadu ..	Village Oil Producers' Cottage Industrial Co-operative Society.
Papanasam	Ammapet	Flaying Centre.
	Papanasam North Block.	Do.
	Ayyampettai	Village Oil Producers' Cottage Industrial Co-operative Society.
	Ammapet	Do.
Orathanad	Orathanad	Flaying Centre.
	Do.	Handpounding of Rice Cottage Industrial Co-operative Society.
Sirkali	Tirumailadi	Village Model Tannery.
	Anaikaranchatram ..	Wardha Ghani Demonstration Unit.
	Sirkali	Bee-keeping Industry.
	Anaikaranchatram ..	Training Centre for Blacksmithy and Carpentry.
Tanjore	Mariammankoil ..	Handpounding of Rice Cottage Industrial Co-operative Society.
	Tanjore	Do.
	Karanthai	Oil Producers' Cottage Industrial Co-operative Society.
	Kudanthai	Do.
Kumbakonam ..	Kumbakonam ..	Handpounding of Rice Cottage Industrial Co-operative Society.
	Tiruvaipadi	Pottery Workers' Cottage Industrial Co-operative Society.
	Aduthurai	Leather Tannery Workers' Cottage Industrial Co-operative Society.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS